கிராம நலம்

(மாதப் பத்திரிகை)

சென்னை அரசாங்க, சமுதாய அபிவிருத்தி
இலாகா வெளியீடு

மாடி—1 | டிசம்பர், 1955 | படி—3

உலக அமைதி வளர்ப்போம்

“நமது மதிப்புக்குரிய தலைவர், பிரதம மந்திரி நேருஜியின் ரஷ்ய விஜயம் காரணமாக, இரு நாடுகளிடையே, பரஸ்பர நல்லுணர்வும், நல்லுறவும் உறுதியாக ஏற்பட்டன. ரஷ்யத் தலைவர்களின் இந்திய வருகையால், இந்த உறவு வலுப்பட்டு வருகிறது. நம் இரு பெரும் நாடுகளிடையே இந்த உறவு நீடித்து வளரவேண்டும்.

நாட்டு மக்கள், குழப்பம் இல்லாமல் சமாதான வாழ்வு வாழ, இரு நாடுகளும் உழைத்து வருகின்றன. இது என்றும் நீடித்து, உலக அமைதி முன்னணி ஏற்பட உழைப்போம்!”

—காமராஜ்

(சென்னை நகரில் ரஷ்யத் தலைவர்களை வரவேற்றபோது செய்த சொற்பொழிவிலிருந்து)

ஐந்தாண்டுத் திட்ட ஆராய்ச்சி :

சென்னை ராஜ்யத்தின் சாதனைகள்

நிதி அமைச்சர் ஸ்ரீ சி. சுப்ரமணியம் விளக்கம்

[விவசாயம் மேலும் விருத்தியடைவதற்கு, தீவிரச் சாகுபடி முறைகளைப் பின்பற்ற வேண்டும். ராஜ்ய விவசாய இலாகாவினர், சர்க்கார் பண்ணைகள் பலவற்றின் மூலம், தீவிரச் சாகுபடி முறைகளைப்பற்றி, மக்களுக்கு, நிதரிசனமாக விளக்கிக் காட்டி வருகிறார்கள். திட்ட காலத்தில், உணவு உற்பத்தியைப் பெருக்க, அரசினர் எடுத்துவரும் முயற்சிகள் பற்றி, சென்னை ராஜ்ய நிதி அமைச்சர், 1955-ம் ஆண்டு அக்டோபர்மீ 21-ந் தேதியன்று அகில இந்திய ரேடியோ நிலையத்திலிருந்து ஒலிபரப்பிய சொற்பொழிவில் விளக்கிக் கூறியிருக்கிறார். —ஆசிரியர்.]

ஸ்ரீ சி. சுப்ரமண்யம் நிகழ்த்திய சொற்பொழிவின் முழு விவரம் வருமாறு :

இன்னும் இரண்டு வருஷங்களில் உணவு தானியங்கள் இறக்குமதிகள் யாவும் நிறுத்தப்பட்டுவிடும் என்று 1950-ம் ஆண்டில் நமது பிரதம மந்திரி தெரிவித்தபோது, நாட்டில் அநேகர் இது வெறும் கனவாகத்தான் போகும் என்று அலட்சியமாகத்தான் தள்ளினர். அந்த நாளில் உணவுப் பொருளாதார நிலைமை "கப்பலுக்கும் வாய்க்கும்" என்ற ரீதியில் இருந்து வந்தது. (கப்பலில் இருந்து தான்யங்கள் வந்திறங்கிய உடனேயே, வினியோகத்தை எதிர் பார்த்து மக்கள் இருந்தார்கள். தென்னிந்தியாவில் ஆறு அவுன்ஸ் ரேஷன் அரிசிக்காக நியாயவிலைக் கடைகளுக்கு முன், மக்கள் வரிசை வரிசையாகக் காத்துக்கொண்டு நிற்க வேண்டிய காலமாக இருந்தது. குறை காண்போருக்குச் சாதகமாக ஏராளமான புள்ளிவிவரங்களிருந்தன ; மேலும் உண்மையான விஷயங்களும் அவர்களுக்கு ஆதாரவாக பல மளித்தன ; ஏனென்றால், அதற்கடுத்த வருஷம், உடனடியாக ஏற்படவிருந்த பஞ்சத்தைத் தவிர்ப்பதற்காக, இந்தியா அமெரிக்காவிலிருந்து 20 லட்சம் டன் உணவு தான்யங்களைக் கடனாகப் பெறவேண்டியிருந்தது. ஆனால் ஐந்து வருஷங்களுக்குப் பிறகு, இன்று, உணவு தான்யங்களை ஏற்றுமதி செய்யும் நிலையில், நம் நாடு இருக்கிறது ; எப்பொழுதும் உணவுப் பற்றுக்குறை அதிகமாகவுள்ள சென்னைகூட, அரிசி விலைச் சரிவைச் சரிக்கட்ட சர்க்கார் ஆதரவு வேண்டுமென்று கோரி, விலை ஆதரவுக் கொள்கையை விரும்புகிறது. நாட்டின் உணவுப் பொருளாதாரத்தில் மகிழ்ச்சிதரும் இம்மாறுதலை எது உண்டாக்கியது ? பருவமழை தன் பங்கு நற்பணியைப் புரிந்திருக்கிறது ; இந்த நல்ல சீர்வாதத்துக்காக ஆண்டவனுக்கு நாம் நன்றியறிதலுள்ளவர்களாக இருக்கிறோம். ஆனாலும், உணவு முன்னணியில் இவ்வளவு மகத்தான முன்னேற்றம் ஏற்படுவதற்கு, நாடு முழுதும் திட்டமிட்டு, கடும் உழைப்பினால் கணிசமான வேலைகள் நடத்தப்பட்டதுதான் காரணம் என்பதை குறைகாண்போர்கள்கூட ஒப்புக்கொண்டுதானாகவேண்டும்.

உணவு உற்பத்தி

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1950-ம் வருஷத்தில் நமது பிரதம மந்திரியால் தொடங்கி வைக்கப்பட்ட புது முயற்சியில், ஒவ்வொரு ராஜ்யமும், அதற்கு ஒதுக்கி வைக்கப்பட்ட வேலையை நிறைவேற்றி வைப்பதில் வெகு உற்சாகத்துடன் பாடுபட்டது ; இதற்கு அத்தாட்சி, உண்மையான விவரங்கள் ; அதாவது, ஐந்து வருஷங்களுக்குள் உணவு தானியங்களின் உற்பத்தியை 80 லட்சம் டன் அதிகமாக்கவேண்டுமென்று லட்சிய அளவு நிர்ணயிக்கப்பட்டிருந்தது ; ஆனால் இக்காலவரையறையில் பாதியிலேயே வாஸ்தவமாக அதிகரிக்கப்பட்ட உணவுதான்ய உற்பத்தி அளவு 110 லட்சம் டன்கள். இன்னும், திட்ட காலத்தில் ஏராளமான தொகைகள் செலவு செய்யப்பட்டுள்ள நதிப்பள்ளத்தாக்குத் திட்டங்களாகிய பாக்ரா நங்கல், ஹிராகுட், தாமோதர், துங்கபத்ரா போன்ற திட்டங்கள் மூலம், முழு உற்பத்தி ஏற்படும்போது, நாட்டின் உணவுப் பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கும் என்று நாம் உறுதியாக நம்பலாம். சென்னை ராஜ்யத்தில் பாசனத்துக்குப் பயன்படுத்தப்படாத நதிகள் அதிகமாக இல்லாவிட்டாலுங்கூட, முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 20 கோடி செலவாகக்கூடிய நீர்ப்பாசனத் திட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. பெரும்பான்மையான வேலைகள், திட்டமிட்டபடி பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. பவானி, மலம்புழா, மணிமுத்தாறு, மேட்டூர் கால்வாய்கள் ஆகியவை இந்த ராஜ்யத்தில் மேற்கொள்ளப்பட்ட நடுத்தரமான திட்டங்களில் சிலவாகும் ; இவைகள் யாவும் சேர்ந்து சுமார் ஐந்து லட்சம் ஏக்கரா நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்க வழி செய்துள்ளன. இப்பொழுது ராஜ்யத்தில் பாசனம் பெறும் 30 லட்சம் ஏக்கராவுக்கு மேற்பட்ட நிலங்களுக்கு, குளங்களே ஆதாரங்களாக இருக்கின்றன ; இஷ்டம்போல் பெய்யும் மழையால் கிடைக்கும் தண்ணீர் இவ்வேரி, குளங்களில் தேக்கப்பட்டு, சாகுபடி காலத்தில் பயிர்களுக்குப் பாய்ச்சப்படுகின்றன. இம்மாதிரியான ஏரி, குளங்கள் இந்த ராஜ்யத்தில் சுமார் 20,000 இருக்கின்றன ; இவைகள் யாவும் பண்டைக்காலத்தில் இயற்கையான நீர் வடிகால் போக்குகளையனுசரித்து அமைக்கப்பட்டவைகள். ஆனால் பல நூற்றாண்டுகள் இவைகள் கவனிக்கப்படாமல் விடப்பட்டதினாலும், வர வர மண் மேடிட்டுப்போனதினாலும், இவைகளில் நீர் தேங்கும் அளவு குறைந்துவிட்டது ; இதன் விளைவாக இவை மூலம் பாசனம் பெறக்கூடிய நிலபுலங்களின் விஸ்தீரணமும் குறைந்துவிட்டது. இந்த ஏரி,

குளங்களின் மராமத்துக்காக வருஷத்துக்கு ஒரு கோடி ரூபாய் செலவாகக்கூடிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது ; இவைகளைச் சீர் செய்வதற்காக, திட்ட காலத்தில் பலன் தரும் வேலை எவ்வளவோ நடந்திருக்கிறது.

தீவிர விவசாய அபிவிருத்தி

கிடைக்கக்கூடிய ஜல ஆதாரங்கள் முழுதும் அனேகமாகப் பயன்படுத்தப்பட்டுவிட்ட ஒரு ராஜ்யத்தில், விவசாயம் மேலும் விருத்தி அடையவேண்டுமானல், அதற்குத் தீவிரச் சாகுபடி முறைகள்தான் வழி. எனவே, இந்த வேலையை ராஜ்ய விவசாய இலாகாவினர் மேற்கொண்டு, சர்க்கார் பண்ணைகளில் பல வற்றிலும் உயர்தர விதைகள், எரு, உரங்களைப் போடுவதால் நல் விளைச்சல்களை மக்களுக்கு நிதரிசனமாக நிரூபித்துக் காட்டினர்கள். யுத்தத்துக்கு முந்திய வருஷங்களில் அமோனியம் சல்பேட்டு இங்கு விற்பனையாகவே இல்லை. ஆனல் இப்பொழுது இந்த சிறந்த உரப்பொருள் வருஷத்துக்கு ஒரு லட்சம் டன் இந்த ராஜ்யத்தில் வாங்கி உபயோகிக்கப்படுகிறது. நகரக் கழிவுப் பொருள்களைக்கொண்டு உரம் உற்பத்தி செய்து அதைப் பயன்படுத்தவும் குடியானவர்கள் கற்றுக்கொண்டார்கள். மற்றும் நில வரப்புகளில் நைட்ரஜன் சத்துக்கொடுக்கும் சீமை அகத்தி போன்ற பசுந்தழை உரத்தாவரங்களையும் பயிர் செய்து, நடவுக்கு முன் இவற்றை நிலங்களில் போட்டு மடிக்கவும் விவசாயிகள் முற்பட்டிருக்கிறர்கள். விவசாயிகள், சாகுபடி முறையில் இவ்வித முன்னேற்றமான வழிகளைப் பின்பற்றியது ஓரளவு நமக்கு நம்பிக்கை அளிப்பதுடன், மடமடவென்று ஜனத்தொகை பெருகிவரும் இந்த நிலையில் பாதுகாப்பாகவும் இருந்துவருகிறது.

சென்னை, உணவு விஷயத்தில் மட்டும், பற்றாக்குறை கொண்டதல்ல ; உற்பத்தித் தொழில்களின் வளர்ச்சிக்கு அவசியமான எரி எண்ணெய், நிலக்கரி போன்ற அத்தியாவசிய கனிப்பொருள்கள் விஷயத்திலும் பற்றாக்குறை நிலையிலேயே இருக்கிறது. நாட்டின் தொழில் படத்திலே இந்த ராஜ்யமும் இடம் பெற்றிருக்கிறதென்றல், அதற்கு முக்கிய காரணம், மேற்குத் தொடர்ச்சி மலையில் மழை கொட்டும் குன்றுகளில் விழும் தண்ணீரின் சக்தியை கட்டுப்படுத்தி பயன்படுத்த செய்யப்பட்ட முயற்சிகள்தான்.

யுத்தம் முடிந்தபோது பைக்காரா, மேட்டூர், பாபநாசம், ஜலமின்சார நிலையங்கள் சர்க்காருக்குச் சொந்தமான மின்சார உற்பத்தி நிலையங்களாக இயங்கிவந்தன. இவைகள் கிட்டத்தட்ட ஒரு லட்சம் கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்துவந்தன. உள்ள நிலையங்களின் உற்பத்தி சக்தியை அதிகரிப்பதின் மூலமும், பருவக்காலக் கோளாறுகளைச் சரிக்கட்டுவதற்காக இவற்றுக்கு தெர்மல் ஆதாரம் அளிக்க ஏற்பாடு செய்வதனுலும் மின்சார சக்தி உற்பத்தியை இருமடங்காக்க உடனடியாகத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இந்த வேலைகள் யாவும் திட்ட காலத்துக்குள் சுமார் 30 கோடி ரூபாய் செலவில் பூர்த்தி செய்யப்பட்டாய் விட்டன ; புதிதாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் நன்கு இணைக்கப்பட்ட ஒரு தொடர் மூலம் ராஜ்யத்தில் எல்லா ஜில்லாக்களுக்கும் வினியோகமாகும்படி வழி செய்யப்பட்டிருக்கிறது. இந்த மின்சக்தியில் பெரும்பாகம் ஜவுளி, சிமிட்டி, எஞ்சினீயரிங் சாமான்கள் உற்பத்தித் தொழில்களுக்கும், நகர மக்களின் உபயோகத்துக்கும், பாரம், வண்டி முதலிய வாகனதிகளை இழுத்துச் செல்லுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

மின்சாரத் திட்டம்

இந்த ராஜ்யத்தின் மின்சாரத் திட்டத்தில் விசேஷ அம்சம் என்னவென்றல், கிராமப் பிரதேசங்களுக்கு மின்சார வசதிசெய்து கொடுப்பதற்கு இப்பொழுது முக்கியத்துவம் காட்டப்படுவதுதான். இப்பொழுது சுமார் 2,500 கிராமங்களில் பருத்தி அறைத்தல், கரும்பு பிழிதல், நெல் அறைத்தல், எண்ணெய் ஆட்டுதல், தேயிலை சுத்திகரித்தல் போன்ற விவசாயத் தயாரிப்புத் தொழில்கள் பலவற்றுக்கு மின்சாரம் உபயோகப்படுத்தப்பட்டுவருகிறது. பூமிக்கு அடியிலுள்ள தண்ணீரை இறைத்து நீர்ப் பாசனத்துக்குப் பயன்படுத்தும் விவசாயப் பம்பு செட்டுகள் சுமார் 27,000 இப்பொழுது மின்சார சக்தியினல் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு பம்பு செட்டும் சுமார் ஐந்து முதல் ஏழு ஏக்கரா நிலத்துக்கு நீர் பாசனமளிக்கக்கூடுமென்றல் இதனுல் ஏற்படும் அதிக உணவு உற்பத்தி கணிசமாகத்தானிருக்கும். ஆனல், உபயோகிக்கப்படும் மின்சக்தியை வினியோகிக்க அதிகமான வினியோகத் தொடர்கள் போடவேண்டியிருப்பதால் கிராமப் பிரதேசங்களுக்கு மின்சார வசதிசெய்து கொடுப்பதற்குச் செலவு அதிகமாக ஆகிறது. யுத்தத்துக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட மின்சக்தி உற்பத்தி நிலையங்கள், பிற்பட்டவைகளுடன் ஒப்பிட்டால் மலிவானவைகளாக இருந்தமையால்தான் இப்போதைய முன்னேற்ற அளவை நாம் பராமரித்துவர சாத்தியமாயிருக்கிறது ; முந்திய ஸ்தாபனங்களிலிருந்து கிடைக்கும் லாபம், உபயோகப்படுத்தப்பட்டுவிடும் நிலைமை வரும்போது, மேற்கொண்டு அபிவிருத்தி செய்வதற்கு மத்திய சர்க்காரின் நிதி சகாயம் ஏதாவது ஒரு வகையில் கிடைக்கவேண்டியதிருக்கும். எப்படியிருந்தாலும், வருஷத்துக்கு 500 கிராமங்களுக்கு மின்சார வசதியை விஸ்தரிப்பதென்று நாங்கள் இப்பொழுது திட்டமிட்டுள்ளோம் ; இந்த அத்தியாவசிய வசதிகளின் நன்மைகள் ராஜ்யத்தில் கணிசமான அளவு பிரதேசத்தில் கிடைக்கும்படி அடுத்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செய்யக்கூடும் என்று நம்புகிறேம்.

திட்ட ஆரம்பக் கட்டங்களில் நமக்கு இருந்த பெரும் தடங்கல், தொழில்நுட்ப சிப்பந்திகள் தேவையான அளவு கிடைக்காமைதான். சென்னை, ஆந்திரா ராஜ்யங்கள் இரண்டின் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக வருஷத்துக்கு சுமார் 100 பட்டதாரிகளைத் தேர்ச்சிசெய்து அனுப்பக்கூடிய ஒரே ஒரு இஞ்சினீயரிங் காலேஜ் மட்டுந்தானிருந்தது. தொழில்நுட்பமுடையவர்கள் அதிகமான வர்களைப் பயிற்சி செய்வதற்காக அதிகமான வசதிகள் செய்யப்படாவிட்டால் துரிதமான முன்னேற்றம் ஏற்படா

G.N.—1A

தென்பதை நாங்கள் உணர்ந்தோம்; உடனே இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்தோம். இப்பொழுது எங்கள் ராஜ்யத்தில் எஞ்சினீயரிங் காலேஜ்கள் ஐந்தும், பல தொழில் பயிற்சி சாலைகள் ஐந்தும் இருக்கின்றன; இவைகள் இந்த ராஜ்யத்தில் மட்டுமின்றி, இந்தியா பூராவும் வேலைக்கு அமர்த்திக்கொள்ளப்படுவதற்காக வருஷத்துக்குச் சுமார் 1,000 பயிற்சி பெற்ற தேர்ச்சியாளர்களைத் தயாரித்து உதவுகின்றன.

முதல் திட்ட காலத்தின் முதல் மூன்று வருஷங்களில் ஆந்திராவும், சென்னையும் சேர்ந்திருந்த சென்னை ராஜ்யம் மழையின்மையாலும், பஞ்சத்தாலும் பீடிக்கப்பட்டு நெருக்கடியான நிலைமையிலிருந்துவந்தது. பஞ்ச நிலைமை ராஜ்யத்தின் வருமானத்தைப் பாதித்தது; பஞ்ச நிவாரணத்துக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக முதல் திட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்கான நிதி ஆதாரங்கள் குறைந்து போய்விட்டன. ஆனாலும், நாங்கள் விடாமுயற்சியுடன், மத்திய சர்க்காரின் தாராளமான உதவியுடன், திட்ட காலத்தில் செலவிடப்பட நிர்ணயித்திருந்த லட்சிய அளவுத் தொகையான ரூ. 90 கோடியை முழுதும் செலவழித்து வருகிறோம்.

ராஜ்ய சர்க்கார் கடன்கள்

அதிகப்படியான நிதி ஆதாரங்களைக் கண்டுபிடிப்பதில் மக்களின் ஆதரவு நமக்கு ஏராளமாக இருந்தது; அதிலும் ராஜ்ய சர்க்கார் எழுப்பிய கடன்களுக்கு அவர்கள் காட்டிய ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்கது. இவ்வருஷம் பொது மக்களிடமிருந்து கடனாக 7 கோடி ரூபாய் பெறவேண்டுமென்று நாங்கள் விரும்பியபோது, நிதி வட்டாரங்களில் இது மிகவும் அதிகம் எனக் கருதப்பட்டது. ஆகையினால் இந்தக் கடனுக்கு உதவ வேண்டுமென்று மக்களுக்கு நாங்கள் விசேஷ வேண்டுகோள் விடுத்தோம். ஜில்லா அதிகாரிகளும், பிரபல பொதுநல சேவையாளர்களும் கடன்பத்திரங்கள் வாங்கக்கூடியவர்களை நேரில் அணுகி ராஜ்யத்தின் நாணயத்தைக் காப்பாற்றுவதற்காக ஒவ்வொருவரும் தம்மாலியன்ற அளவு உதவி புரிய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்கள். பலன்கள் உற்சாகமளிக்கக்கூடியவைகளாக இருந்தன. கடன் பத்திரங்கள் விற்கப்படுவதற்காக இருவாரம் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தபோதிலும் முதல் நாளே 14 கோடி ரூபாய், அதாவது விளம்பரப்படுத்தப்பட்டிருந்த கடன் தொகையைப் போல் இருமடங்கு, வசூலாகிவிட்டது; பெருந்தொகைகள் முதலீடு செய்ய முன்வந்தோரின் மனக்கசப்புக்கு உள்ளாகி, வசூலான தொகையில் கணிசமான பகுதி திருப்பிக் கொடுக்கப்பட்டது. பெரும்பான்மையான தொகை விவசாயிகளிடமிருந்தே கிடைத்தது; இவர்களில் 10,000 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் ரூபாய் 10,000-மும், அதற்குக் குறைந்த தொகைகளையும் கடனில் முதலீடு செய்திருக்கின்றனர். இன்னும் ஆயிரக் கணக்கானவர்கள் அந்த இருவார காலத்துக்குள் தங்களாலான சிறுதொகைகளைக் கடன் பத்திரங்கள் வாங்குவதில் முதலீடு செய்யவேண்டுமென்று உத்தேசித்திருந்தனர்; ஆனால் இவர்கள் ஏமாற்ற மடைய வேண்டியதாயிற்று.

திட்டமான முயற்சிகளுக்கு, எதிர்காலத்தில், மக்களின் கூட்டுறவு அவசியம் இருக்கும் என்பதற்கான நல்லறிகுறியே இவ்வருஷ சென்னை ராஜ்யக் கடனுக்கு ஜனங்கள் காட்டிய ஆதரவு. முதல் திட்டத்தின் லட்சியங்கள் நிதானமானவைகளாகவே இருந்தன; ஆனால், அவைகளைச் சாதிப்பதில் நாம் அடைந்துள்ள வெற்றி, யுத்த பிற்கால முதல் சில வருஷங்களில் மக்களிடையே ஏற்பட்டிருந்த அதைரியம், சலிப்பு ஆகியவற்றை ஓட்ட எவ்வளவோ தூரம் உதவியாக இருந்தது; இத்துடன் அவர்களின் மனதில் தன்னம்பிக்கையும், மற்றும் நிர்வாகத்தினிடம் நம்பிக்கையும் ஏற்பட வழி செய்திருக்கிறது. ஆகையினால் எல்லா அம்சங்களிலும் இதைவிடப் பெரிய திட்டத்தை மேற்கொண்டு, இதுவரை கண்டுபிடிக்கப்படாத ஆதார வசதிகள் மூலம் நிறைவேற்றி வைக்க தேசம் தயாராக இருக்கிறது என்பது தெளிவு.

மக்கள் நம்பிக்கை

இதர ராஜ்யங்களைப் போலவே சென்னை ராஜ்யமும் இரண்டாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்துக்குரிய வேலைகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறது. இது விஷயத்தில், சென்னை ராஜ்யத்தில் பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் சம்பந்தமாக நடைபெற்ற ஆராய்ச்சிகள் வருங்காலத்தில் தொழில்வளம் சிறந்தோங்கும் என்ற நம்பிக்கையை நமக்கு ஊட்டியிருக்கிறது. ராஜ்யத்தில் மின்சார உற்பத்தியை இருமடங்காக்கவும், கிராமப் பிரதேசங்களில் மின்சார வசதிகள் செய்துகொடுப்பதில் துரிதமாக முன்னேற்றமடையவும் நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். தங்கள் தேவைக்கு அதிகமான தண்ணீருடைய அண்டை ராஜ்யங்களின் கூட்டுறவுடன், மேற்குத் தொடர்ச்சி மலையை அடுத்துள்ள பெரும் பிரதேசங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை அளிக்கக்கூடும் என்று நாங்கள் நம்புகிறோம். சுத்த, சுகாதார, சுபிட்ச கிராம வாழ்வு நிலவுவதற்காக, தேசிய வளர்ச்சித் திட்டம், சமுதாய அபிவிருத்தித் திட்டங்களின்படி மேற்கொள்ளப்படும் கிராமப் புனரமைப்பு வேலை ராஜ்யம் முழுமையிலும் வியாபித்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நமது அபிலாஷைகள் எல்லாம் கிரியாம்சத்தில் உருவாவதற்கு முன்னர் எவ்வளவோ இடையூறுகளை, நாம் சமாளிக்கவேண்டியதிருக்கிறது; ஆனால் மக்களிடையே இப்பொழுது காணப்படும் நன்னம்பிக்கையைக் கொண்டும், ஏற்கெனவே கிடைத்துள்ள அனுபவத்தை வைத்தும் பார்த்தால், வெற்றி கிடைக்கும் என்று நியாயமான அளவுக்கு உறுதி கொள்வது மிகையாகாது. ஆகவே, இந்தியாவின் இதர பகுதிகளிலுள்ள மக்களைப்போல், மக்களுக்காக உண்மையாக க்ஷேம நல அரசாங்கத்தை நிர்மாணிப்பதில் நாங்களும் முன்னேறி வருகிறோம்.

ஜெய் ஹிந்த்.

நமது திட்டங்களின் வரலாறு

[எஸ். கே. டே.]

[இந்திய அரசாங்க சமுதாய நலத்திட்ட நிர்வாகத் தலைவர் ஸ்ரீ எஸ். கே. டே., தமது கட்டுரையில் சமுதாய நலத்திட்டம் எவ்வாறு உருவாகியது என்பது பற்றியும், அத்திட்டம் நம் நாடெங்கும் எவ்விதமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பது பற்றியும் நன்கு விவரித்துள்ளார். திட்ட நிர்வாகத்தில் முக்கிய அங்கங்களாக விளங்கும் கிராம சேவக், விஸ்தரிப்பு அதிகாரிகள் முதலியோர் புரியும் பணிகளைப் பற்றியும், அவர் இக்கட்டுரையில் விவரித்திருக்கிறார்.

—ஆசிரியர்.]

சமுதாய நலத்திட்டம், 1952 அக்டோபர் 2-ந் தேதியன்று ஆரம்பிக்கப்பட்டது. அப்புனித தினத்தன்று—காந்தி ஜெயந்தியன்று, இந்தியாவுக்குப் புதிய சக்தியையளிக்க, அதன் கிராமங்களிலே, முதன் முதலாக, 55 திட்ட வட்டாரங்களில், அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

திட்டத்தை, இந்திய குடியரசுத் தலைவர் துவக்கி வைத்தார். டில்லிக்கு அருகாமையிலுள்ள திட்ட வட்டாரத்தில், கிராம சாலை ஒன்றை அமைக்க, பிரதமர் நேருஜி, கூடை நிறைய மண் ஏந்திச் சென்றார். ராஜ்யங்களிலுள்ள முதல் அமைச்சர்கள், இந்திய அரசாங்க அமைச்சர்கள், வெவ்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள பிரமுகர்கள் முதலியோர், வேஷ்டியை வரிந்து கட்டிக் கொண்டு, உற்சாகத்துடன், இப்புனிதத் தொண்டில் ஈடுபட்டார்கள். இவ்வாறாக ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மூலம், நமது கிராம மக்கள் வாழ்வில், புதியதொரு சகாப்தம் துவங்கியது.

நமது கிராம மக்களோ இயற்கையாக பயந்த சுபாவமும் லஜ்ஜையும் கொண்டவர்கள். தேர்தலின் போது தான், அவர்கள், ராஜ்ய பிரதிநிதிகளையும், வரி வசூல் காலத்தில், அரசாங்க ஊழியர்களையும் பார்த்திருக்கிறார்கள். மற்ற சமயங்களில், அவர்களைப் பார்த்தறியார்கள். இப்போது, அரசாங்க ஊழியர்கள், வரி வசூலிக்கும் அதிகாரிகளாக இல்லாமல், பல அபிவிருத்தி வேலைகளைப் புரியும் தொண்டர்களாக, அவர்களிடையே வந்து பழகுவது கண்டு, கிராம மக்கள் ஆச்சரிய மடைந்தனர். தேர்தல் முடிந்து விட்டபோதிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், மண்வெட்டிகளையும், கடப்பாறைகளையும் ஏந்திக் கொண்டு, மக்களிடையே சென்று, அபிவிருத்தி வேலைகளைப் புரிவதில் ஈடுபட்டனர். கிராம மக்கள், இதைக் கண்டு, முதலில், திக்பிரமை அடைந்து விட்டனர். பிறகு, மக்கள் பிரதிநிதிகளுடன், மிகவும் உற்சாகத்துடன் சேர்ந்து ஒத்துழைக்க முற்பட்டனர்.

சாலைகள் அமைக்கப்பட்டன; பள்ளிகள், சமுதாய மன்றங்கள், மருத்துவ விடுதிகள் முதலியவை, திடீரென்று, வெகு சடுதியில், கிராமங்கள் பலவற்றில் உருவாயின. நிதர்சனப் பயிற்சிப் பண்ணைகள், கால் நடை இனத்தரப் பெருக்க நிலையங்கள், செயற்கை இனத்தரப் பெருக்க நிலையங்கள் முதலியவையும், காய், கறி, கனி வளர்ப்புப் பண்ணைகளும் தோட்டங்களும், கிராமங்களிலே தோன்ற ஆரம்பித்தன. புதுக் கிணறுகளை அமைத்தல், பழைய கிணறுகளைப் புதுப்பித்தல், கிராமத்திலுள்ள சந்துகளையும் தெருக்களையும் ஒழுங்கு படுத்தி அமைத்தல், முதலியவை, இப் புதிய மக்கள் இயக்கத்தில் முக்கிய அம்சங்களாக விளங்கின. ஆண், பெண் பாலார் அனைவரும், முதியோர்களும் இளைஞர்களும், நாள் செல்லச் செல்ல, அதிக எண்ணிக்கையில், இப்புதிய புனித இயக்கத்தில் மிகவும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு, பல அபிவிருத்தி வேலைகளைப் புரிய முற்பட்டனர்.

அரசாங்க நிர்வாகம், அந்நியர் கையிலிருந்த போது, அது, மக்களை அடக்கியாளும் நிர்வாக இயந்திரமாக பலர் கண்ணுக்குத் தோன்றியது. இப்போதோ, அது, புது உருவம் பெற்று விட்டது. இதுகாறும், நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டு, ஆபீஸ் அலுவல்களை மட்டும் கவனித்து வந்த அரசாங்க அதிகாரிகள், அதிக எண்ணிக்கையில், கிராமங்களுக்குச் சென்று, மக்களுடன் சேர்ந்து, பசி, நோய், அறியாமை என்ற முப்பெரும் எதிரிகளுடன் போராட முற்பட்டனர்.

திட்டத்தில் முக்கிய அங்கமாக விளங்குபவர் கிராம சேவக்—அதாவது, கிராமத் தொண்டர். விவசாயம், கால் நடை அபிவிருத்தி, சுகாதாரம், கிராமத் தொழில்கள், கூட்டுறவு, பஞ்சாயத்து, கிராம எஞ்சினீயரிங் போன்ற அபிவிருத்தித் துறைகளில், அவர் முதல் உதவியாளராக—ஊழியராக—விளங்குகிறார். இவர், பல காரியங்களைக் கவனிப்பவர்; பதினெட்டு மாதப் பயிற்சி பெற்றவர்; அதுவும், பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள பயிற்சி ஸ்தாபனங்களில் பல்வேறு துறைகளில் நடைபெற வேண்டிய வேலைகளைப் பற்றிக் கற்றுள்ளவர்.

இம்மாதிரியான விசேஷ பயிற்சி ஸ்தாபனங்கள், நாட்டின் பல்வேறு பாகங்களில் உள்ள 45 ஊர்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. சுமார் ஐயாயிரம் கிராம மக்களின் நலனை, ஒவ்வொரு கிராம சேவக்கும் கவனித்துவருகிறார். "விஸ்தரிப்பு அதிகாரிகள்" தொழில் நுணுக்கங்கள்

சம்பந்தமாக விசேஷப் பயிற்சி பெற்றவர்கள் ; தொழில் துறைகளில், இவர்கள் கிராம சேவக்குகளுக்கு உதவி புரிந்து வருகிறார்கள். சுமார் 60 முதல் 70 கிராமங்கள் கொண்ட வட்டாரத்தின், தலைமை அலுவலகம் உள்ள ஊரில், இந்த விஸ்தரிப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வட்டார நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள வட்டார அபிவிருத்தி அதிகாரியுடன், இவர்கள் ஒத்துழைத்துத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிவருகிறார்கள். ஜில்லா அதிகாரிகள், விஸ்தரிப்பு அதிகாரிகள் பார்க்கும் அலுவல்களை, மேற்பார்வையிடுவது வழக்கம். இதே ரீதியில், ராஜ்ய தலை நகரிலுள்ள அபிவிருத்தி கமிஷனர், அபிவிருத்தித் துறையில், ஜில்லா கலெக்டர்கள் பார்த்துவரும் அலுவல்களை மேற்பார்வையிடுகிறார். தொழில் துறை சம்பந்தமாக, ஜில்லா அதிகாரிகள் கவனித்துவரும் அலுவல்களை, ராஜ்ய அரசாங்க இலாகா தலைமை அதிகாரிகள் மேற்பார்வையிடுவது வழக்கமாயிருந்து வருகிறது.

உத்தியோக சார்பற்ற மக்கள் ஸ்தாபனங்கள், இம்மாதிரியான நிர்வாக அமைப்பின் ஒவ்வொரு அங்கமும் புரிந்துவரும் அபிவிருத்தித்திட்ட வேலைகளில் பங்கெடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அரசினரின் உதவியுடன், பஞ்சாயத்துகளும் கூட்டுறவு சங்கங்களும், கிராம அடிப்படையில், திட்டங்கள் வகுத்து, அவற்றை நிறைவேற்ற வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. வட்டார ரீதியில் அமைக்கப்பட்ட (உத்தியோகஸ்தர்களும் உத்தியோகச் சார்பற்றவர்களும் அடங்கிய) ஆலோசனை கமிட்டிகளும், திட்டங்களை வகுப்பதற்கு, அவை நிறைவேறும் போது, மேற்பார்வையிடுவதற்கும் உதவிபுரிய எப்போது சித்தமாயிருக்கின்றன. ராஜ்ய ரீதியில், திட்டங்களை ஒழுங்குபடுத்தி மேற்பார்வையிடுவதற்கு ராஜ்ய அபிவிருத்தி கமிட்டி உண்டு. இக்கமிட்டியில் அபிவிருத்தி இலாகாக்களின் அமைச்சர்கள் அங்கம் வகிக்கிறார்கள். ராஜ்ய முதல் அமைச்சர், இக்கமிட்டியின் தலைவராவார்.

இந்தியா முழுவதற்கும், திட்டங்களை ஒழுங்குபடுத்த மத்திய கமிட்டி, பிரதம மந்திரியின் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இக் கமிட்டியின்கீழ், இந்திய அரசாங்கத்தின் சமுதாய நலத்திட்ட நிர்வாக ஸ்தாபனம் பணியாற்றிவருகிறது.

தேசிய வளர்ச்சித் திட்டம்

முதன் முதலாக, 55 திட்டங்களை கிராமப்புறங்களில் ஆரம்பித்தபோது நமது கிராம மக்கள் பழங்கால பழக்க வழக்கங்களில் தீவிர பற்றுள்ளவர்கள் ; புதுக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவேமாட்டார்கள் என்றெல்லாம் கூறப்பட்டது. ஆனால், திட்டங்கள் அமலான பிறகு கவனித்தாலோ, கிராம மக்கள் மிகவும் உற்சாகத்துடன் இத் திட்டங்களில் பங்கெடுத்துக்கொள்கிறார்கள் என்பது தெளிவாகிவிட்டது. ஆகவே, மேலும், இத் திட்டங்களை பல வட்டாரங்களுக்கு உடனடியாக விஸ்தரிக்க வேண்டுமென கோரப்பட்டது. நமது ஆதார வசதிகள் ஓரளவுக்குட்பட்டவை. தொழில் நுட்பந்தெரிந்த சிப்பந்திகள் போதிய எண்ணிக்கையில் கிடைக்கவில்லை. ஆனபோதிலும் மக்களின் கோரிக்கையைத் தட்டிக் கழித்து விடுவதற்கில்லை ; புறக்கணிக்கவும் முடியாது. ஆகையால், அரசினர், மிகவும் துரிதமாக விஸ்தரிப்பதற்குத் தகுந்த திட்டமொன்றை வகுத்தனர். இது ''தேசிய வளர்ச்சித் திட்டம்'' என அழைக்கப்படலாயிற்று. சமுதாய நலத்திட்ட வட்டாரங்களில் எல்லாத்துறைகளிலும் தீவிரமாக வேலை நடைபெற்று வந்தது. ஆனால், தேசிய வளர்ச்சித் திட்டங்களில், மிக அத்தியாவசியமாகத் தேவைப்படும் ஊழியர்களே நியமிக்கப்பட்டிருப்பதுடன், சுய உதவி அடிப்படையில், மக்களே முன் வந்து இயக்கத்தை நடத்துவதற்கு அனுசரணையாக நிதி ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. இத் திட்டத்தில் மக்கள் காட்டும் ஆர்வத்தையும், மேலும் தீவிரமாக அபிவிருத்தி வேலைகளைப் புரிவதற்கு வேண்டிய அரசாங்க இலாகாக்களின் திறமையையும் பொறுத்து, தர அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரங்கள், மேற்கொண்டும் தீவிரமாக அபிவிருத்தி வேலைகளைப் புரிவதற்காக சமுதாய நலத் திட்டங்களாக மாற்றப்படும்.

சமுதாய நலத் திட்டமும், தேசிய வளர்ச்சித் திட்டமும், இணக்கமாக நிறைவேறி வரும். மக்கள் நலனுக்காக, தொழில் நுட்பத் துறையிலும், நிர்வாகத் துறையிலும் நியமிக்கப்பட்ட பயிற்சிபெற்ற உத்தியோகஸ்தர்களின் சேவை, நிரந்தரமாகத் தொடர்ந்து மக்களுக்குக்கிடைக்கும். நமது அரசியல் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள க்ஷேம நல ராஜ்ய நிர்வாகத்தை உருவாக்குவதற்கு இவர்களின் சேவை பெரிதும் பயன்படும். தேசிய வளர்ச்சித் திட்டம், ஆரம்ப கட்ட அபிவிருத்தி வேலைகளைக் குறித்தது. ஆனால், சமுதாய நலத் திட்டமோ, நூற்றாண்டுக் கணக்கில் பசியாலும் ஏழ்மையாலும் வாடி வருந்தும் சமுதாயத்துக்குப் புத்துயிரளிக்கும் மருந்துபோன்றது; குறுகிய கால அளவில் அத் திட்டத்தின் மூலம் தீவிர வேலைகள் நடைபெற்று வருகின்றன.

முதல ஐந்தாண்டுத் திட்ட கால முடிவுக்குள் இந்தியாவில், சுமார் 1,200 அபிவிருத்தித் திட்ட வட்டாரங்களை அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இவை மூலம் கிராமிய இந்தியாவிலுள்ள மொத்த ஜனத்தொகையில் கால் பங்கு எண்ணிக்கையிலுள்ள மக்கள் பயன் பெறுவார்கள்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் உருவாகி வருகிறது. இத் திட்ட கால முடிவுக்குள் தேசிய வளர்ச்சித் திட்டம் கிராமிய இந்தியா வெங்கும் நிறைவேறுவதற்கும் சமுதாய நலத் திட்டம், கிராமிய இந்தியாவின் ஐம்பது சத விகித பகுதியில் நிறைவேறுவதற்கும் ஏற்பாடுகள் செய்ய சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. இம் மாபெரும் வேலைத் திட்டத்துக்குத் தேவைப்படும் சிப்பந்திகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கான வசதிகளை விஸ்தரிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இம் மாதிரியான மாபெரும் திட்டங்கள் முன்பு நிறைவேற்றப்படவில்லை. பொருளாதாரத்துறை முதல் ஆன்மீகத்துறை வரை வாழ்க்கையின் சகல அம்சங்களையும் மேலும் மேன்மையுறச்செய்ய, இத் திட்டங்கள் பயன்படுகின்றன. உலக நாடுகள் பலவற்றிலிருந்து அநேகர் நம் நாட்டுக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். திட்டங்கள் நிறைவேறும் வட்டாரங்களுக்கு அவர்கள் நேரில் சென்று கிராமங்களில், " பிற்பட்ட வகுப்பினர் " எனக் கூறப்படும் நமது ஹரிஜன சகோதரர்களும் சகோதரிகளும், முன்பு அலுவலகங்களில் அமர்ந்து உத்தரவுகளை மட்டும் பிறப்பித்துக் கொண்டிருந்த அரசாங்க அதிகாரிகளும் " வெறும் மேடைப் பிரசங்கிகள் " என்று சிலரால் நையாண்டி செய்யப்பட்ட (உத்தியோகச் சார்பற்ற) ஸ்தாபன பிரதிநிதிகளும் ஒன்று கூடி, அபிவிருத்தித் திட்டங்களைத் தீவிரமாக நிறைவேற்ற முயற்சிப்பது கண்டு மலைத்துப்போனார்கள்.

அபிவிருத்தியடையாத பிரதேசங்களான தென் கிழக்கு ஆசியா, மேற்கு ஆசியா, ஆப்பிரிக்கா முதலிய நாடுகளின் மத்தியில் இந்தியா இருக்கிறது. நம் நாட்டின் பூகோளம், கலைப் பண்பாடு, பழக்க வழக்கங்கள், ஜனத்தொகை முதலியவற்றைக் கவனித்தால், ஜனநாயக அடிப்படையில் மானிட வாழ்க்கை மேலும் மேன்மையுற மற்ற நாடுகளுக்கு வழிகாட்டக்கூடிய வகையில் நம் நாடு இருக்கிறது. சமுதாய அபிவிருத்தி இயக்கம் உலகம் பூராவும் பரவக்கூடியது. அவ்வாறு பரவுவதற்கு இந்தியா தன்னாலியன்ற முயற்சிகளைச் செய்யவும் முற்பட்டுவிட்டது. இது வெற்றி பெற்றால்—வெற்றி நிச்சயம் என்பதில் சந்தேகமில்லை. அது அவசியமானதும்கூட—இன்று உலகிலுள்ள மானிட வர்க்கத்தின் சதியை நிர்ணயித்து வரும் பயத்தையும் வெறுப்பையும் போக்குவதற்கான உபாயத்தையே உலகம் கண்டு பிடித்து விட்டதாகக் கூறலாம்.

சோஷலிஸ பாணியில் சமுதாயத்தை அமைப்பதை இந்திய அரசாங்கம் தனது குறிக்கோளாகக்கொண்டுள்ளது. ஆனால், எந்த சமுதாயத்தையும் மேல் மட்டத்திலிருந்து, அடி மட்டம் நோக்கி அமைத்துவர முடியாது. சமுதாயம் உயிரற்றது அல்ல. கனி தரும் மரங்கள்போல், அது தரையில் வேரூன்றி, பிறகு மேல் நோக்கி வளரவேண்டும். சோஷலிஸ பாணியில் அமைக்கப்படும் சமுதாயத்திலுள்ள மனிதர்களுக்கு நல் வாழ்வு நடத்தவும், வாழ்க்கையை நடத்துவதற்காக வேலை செய்வதற்கும், தாம் சம்பாதிக்கும் ஊதியத்தைப் பெறுவதற்கும் உரிமை இருக்கவேண்டும். இவ்வித உரிமைகளைப் பெறுவதற்கு முதலில் வழிகோல வேண்டும். நம்முடைய முயற்சிகளால் அரசாங்க கஜானாவை நிரப்பிவிட முடியும். இந்தியாவில் மிக மதிப்பு வாய்ந்த ஆஸ்திப் பொறுப்பாகக் கருதப்படுவது அந் நாட்டின் ஆட் பலம். அதே, அந்நாட்டின் கடன் பொறுப்பாகவும் கூடும்—ஆட் பலம் சரியான வகையில் பயன்படுத்தப்படாவிட்டால். கட்டுவதும் மனிதன், அதைப் பாதுகாப்பதும் மனிதனே....அத்துடன், அதை அழிப்பவனும் அவனேதான். மனிதனுள்ளே புதைந்து கிடக்கும் ஆக்கத் திறனை வெளிப்படுத்திப் பயன்படுத்துவதற்குத் தகுந்தவாறு சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. குருக்ஷேத்ர யுத்தத்தில், சகோதரர்களுக்குள் சண்டை நடைபெற்றது. ஆனால், இப் புதிய குருக்ஷேத்ர யுத்தத்திலோ, சகோதரர்கள் தங்களுக்குள்ளேயே சண்டை போட்டுக்கொள்வதற்குப் பதிலாக ஒன்று சேர்ந்து எல்லோருக்கும் பொதுவான குறிக்கோளை அடைய பசி, வியாதி, அறியாமை முதலியவைகளை எதிர்த்துப்போராடிக் கொண்டு, முன்நோக்கிச் செல்கிறார்கள். " வாழ உரிமை பெற ", நம் நாட்டிலுள்ள 600 லட்சம் கிராம மக்களைத் தட்டி எழுப்பவேண்டியிருக்கிறது. க்ஷேமநல அரசாங்கத்தை உருவாக்குவதில் அவர்களும் பங்கெடுத்துக்கொள்ளச் செய்யவேண்டும். புது வழி முறைகளையும் புது அறிவையும் அவர்கள் பெற்று, புது வாழ்வு பெற்று வாழ அவர்கள் மன எழுச்சி பெறச் செய்யவேண்டும்.

சமுதாய நலத் திட்டங்களின் குறிக்கோள் " மனிதன் " தான்—அதாவது மக்கள் நலன்தான். இக்குறிக்கோளை அடைவதைப் பொறுத்து, திட்டங்களின் வெற்றியுமிருக்கும். " மனிதனை "—அதாவது மக்கள் நலனை - பின்னால் விட்டு விட்டு இதர விஷயங்களை சமுதாய நலத் திட்டங்கள் எந்த அளவுக்கு முன்னால் தள்ளி விடுகின்றனவோ, அந்த அளவுக்கு அத் திட்டங்கள் தோல்வியுறும்.

மண்பாண்டத் தொழில் வளர்ச்சி

சேலம் ஜில்லாவிலுள்ள, பெத்தநாயக்கன்பாளைய வட்டாரத்திலிருக்கும் அரியபாளையம் கிராமத்தில், 1955-ம் வருஷம் ஆகஸ்ட் 30-ந் தேதியன்று புதிய பஞ்சாயத்து அமைக்கப்பட்டது. இவ் வட்டாரத்திலிருக்கும் சின்னமேலுபள்ளி, திம்மாபுரம், பொம்மசந்திரம் ஆகிய இடங்களில் ஹரிஜன காலனிகள் உருவாக, மும்முரமாக வேலைகள் நடைபெற்று வருகின்றன. மட்பாண்டத் தொழில் வளர்ச்சிக்காக, இவ் வட்டாரத்திலுள்ள மட்பாண்ட உற்பத்தியாளருக்கு, 277 நூதன சக்கரங்கள் விநியோகிக்கப்பட்டன.

* * * * *

ஆத்தூர் வட்டாரத்தில், ஆகஸ்ட் மாதம் 1-ந்தேதியன்று, சேந்தாரப்பட்டி, தம்மாம்பட்டி, திடவூர், விரகனூர், புளியங்குறிச்சி, ஆகிய கிராமங்களில், சுதந்திர-தின விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆகஸ்ட் 23-ந் தேதியன்று, சேலம் கலெக்டர் தையகனூரில் கிராமத் தலைவர்கள் பயிற்சி முகாமை ஆரம்பித்து வைத்தார்.

* * * * * *

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள, சீர்காழி வட்டாரத்திலிருக்கும் திருவெண்காடு கிராமத்தில் வைத்தியசாலை ஒன்றும், ஆச்சார்புரத்தில் ஒரு பள்ளியும் பண்ணைக்காரன் கோட்டகம் கிராமத்தில் ஒரு பள்ளியும் கட்டி முடிக்கப்பட்டன.

* * * * * *

பொதுப் பணிகளில் மக்கள் எப்படி பங்கு கொள்வது?

[J. சுப்பிரமணியம், B.E., ஜூனியர் எஞ்சினியர், ஊத்துக்கோட்டை]

[செங்கரை, வெங்கல், மதுரைவாசல், நீர்வாய், பெரியபாளையம் முதலிய கிராமங்களில் நடைபெற்றுவரும் அபிவிருத்தி வேலை விவரங்கள், இக் கட்டுரையில் குறிக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாக, சாலை அமைப்பு, கட்டிட அமைப்பு போன்ற எஞ்சினீயரிங் வேலை விவரங்களும், மக்கள் எவ்வாறு அவ்வேலைகளில் பங்கெடுத்துக்கொண்டனர் என்பதும் தெளிவாக இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. —ஆசிரியர்.]

தற்போது நமது மாகாணத்தில் பற்பல இடங்களில் தேசிய வளர்ச்சித் திட்டம், சமுதாய நலத்திட்டம் முதலிய திட்டங்கள் உருவாக்கப்பட்டு கடந்த சில ஆண்டுகளாக நிறைவேறி வருகின்றன. இத்திட்டத்தின் பலதிறப்பட்ட பணிகளில் ஒன்றாகிய 'எஞ்சினீயரிங் பணி'—அதாவது சாலைகள் அமைத்தல், பள்ளி, மருத்துவ விடுதி, பொழுது போக்கு நிலையம், கக்கூசுகள் முதலியவற்றிற்கு கட்டிடயமைத்தல், சுகாதார முறைப்படி இல்லங்களைத் திருத்தியமைத்தல் போன்ற வேலைகள்—எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது என்பதைச் சிறிது கவனிப்போம்.

ஒரு கிராமத்திற்கு மிக அவசியமாகத் தேவையான மேற்கூறிய வேலைகள் அனைத்தும் ஒரே நேரத்தில் அரசாங்கமே செய்து முடிப்பதென்றால் கிராமம் ஒன்றிற்குக் குறைந்த பட்சம் ரூ. 30,000 செலவாகும். இதே ரீதியில் நமது மாகாணத்திலுள்ள எல்லா கிராமங்களுக்கும் செய்து முடிப்பதற்கு ஆகும் பிரம்மாண்டமான பணச்செலவு, ஆள் தேவை, சாமான் தேவை முதலிய பிரச்னைகளை எப்படி சமாளிப்பது என்று எண்ணுகிற நேரத்தில், அபிவிருத்தி வேலைகளை எவ்வாறு செய்து முடிப்பது என்று மலைத்து நிற்கின்றோம். அதனால்தான் இத்திட்டத்தின்படி கிராமங்களின் தேவைகளை ஒன்றன்பின் ஒன்றாக அமைக்க முற்பட வேண்டுமென்றும், அரசாங்கம் அளிக்கும் மான்யத்துடன், வசதிகளால் பயனடையும் வட்டார மக்கள் (i) சம்பத்து தானம், (ii) பொருள் (Materials) தானம் (iii) சிரம தானம் முதலியன அளித்து வேலைகளைச் செய்துகொள்வதென்றும் வகுக்கப்பட்டது.

இந்த அளவில் திட்ட அமைப்பு திருப்திகரமாக அமைந்து விட்டபோதிலும், மக்களின் ஒத்துழைப்பை எந்த அளவில், எந்த முறையில் பெறுவது என்பது சிக்கலான பிரச்னையாக இன்றும் மேலோங்கி நிற்கிறது. ஆயினும் செங்கற்பட்டு ஜில்லா, திருவள்ளூர் தாலுக்கா, ஊத்துக்கோட்டை வட்டாரத்தில், நாங்கள் கடந்த ஏப்ரல் மாத முதலாக 'எஞ்சினீயரிங் வேலைகளை'த் தொடங்கி, மக்களின் ஒத்துழைப்பைப் பெற ஒருசில முறைகளைப் பரீட்சார்த்தமாகக் கையாண்டு பணியாற்றி வருகிறோம்.

உத்தேசமாக எடுத்துக்கொண்ட முறைகளில் நாங்கள் செய்த தவறுகள், சுவைத்த தோல்விகள் முதலிய அனுபவங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தின் எழுச்சியே இக்கட்டுரையாகும். இது போல் அவ்வப்பிராந்திய மக்களின் அனுபவங்களையும் சேகரித்து, தொகுத்து, நடைமுறையில் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்கும் பொருட்டு, திட்ட திருத்தியமைப்பு வேலை எடுத்துக்கொள்ளப்பட்டால், நாம் மேன்மேலும் வளர்ச்சியடைய ஏதுவாகும்.

சம்பத்து தானம்

சாதாரணமாக, நாம் கிராமங்களில் கேள்விப்படுவது இதுதான்—தாங்கள் மிகவும் ஏழைகளென்றும், தினப்படி உண்டு வாழ, உழைத்து வேலை செய்தால்தான் முடியுமென்றும், வேறு கதியில்லையென்றும் கூறுவார்கள். அவர்களிடம், முதல் முதலில் நாம் உணர்த்த வேண்டுவது, மிகவும் பிற்போக்கான நிலையில் உள்ள கிராமங்கள் முன்னேற, இத்திட்டம் அமுலாக்கப்படுகிறது என்கிற விஷயமே.

ஊர்ப் பொதுப்பணம்

செங்கரை என்னும் கிராமத்தில் திருவிழாவிற்கென ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள பொதுப் பணத்திலிருந்து, ஒரு பங்கு, சாலை அமைப்புக்காக அளிக்க வேண்டியதின் அவசியத்தை உணர்த்தி, பண உதவி பெறமுடிந்தது. வெங்கல் கிராமத்தில் மச்ச மாசூல் எடுத்து ஏலப்பணம் போக எஞ்சியுள்ள இலாபத் தொகையைப் பயன்படுத்தி ஊரார் தெருக்களுக்கு வாராவதி கட்டிக்கொண்டார்கள்.

இனவாரி வசூல்

மதுரைவாசலில் நிலச் சொந்தக்காரர்கள், நன்செய் ஏக்கர் ஒன்றிற்கு ரூ. 2 வீதம் வசூலித்து ரோடு வேலை நடத்தி வருகின்றனர். நீர்வாய் என்னும் கிராமத்திலோ, புன்செய் ஏகரா ஒன்றிற்கு ரூ. 1 வீதம் வசூலித்து ஓராசிரியர் பள்ளிக்கூடக் கட்டிட வேலை நடத்திக்கொண்டு வருகின்றனர். புன்னப்பாக்கத்தில் வீடு ஒன்றிற்கு தலைகட்டு ஒன்றிற்கு ரூ. 2 வீதம் அளிக்கத் திட்டமிடப்பட்டது. அதன் மூலம், ரோடு வேலை பாதி முடிந்து விட்டது; இப்போது, அது தொடர்ந்து நடைபெறுகிறது.

பொது ஸ்தாபன உதவி

வேலையின் மதிப்பில் $\frac{1}{4}$ பங்கு மான்யமாக அளித்து, பெரியபாளையம் பஞ்சாயத்து ரோடு வேலையையும் பாலவாக்கம் பஞ்சாயத்து பள்ளிக்கூட கட்டிட வேலையையும், ஊத்துக்கோட்டை பஞ்சாயத்து சுகாதார கக்கூசு அமைப்பு வேலையையும் நடத்துகிறார்கள். இவ்வேலைகள் முடியுந் தறுவாயிலிருக்கின்றன.

பிச்சாடூரை அடுத்த வேலூரைச் சேர்ந்த, வசதியுள்ள நபர் ஒருவர், ரூ. 7,000 மதிப்புள்ள பள்ளிக்கூட கட்டிட வேலைக்காக ரூ. 2,000 வரை நன்கொடை அளிக்க வாக்குறுதி தந்துள்ளார். சுப்பாநாயுடுகண்டிகை கிராமத்திலுள்ள வசதியுள்ள 20 குடும்பத்தினரும், ஊரை யொட்டிச் செல்லும் பெரிய ஓடைக்கு ரூ. 6,000 செலவில் கட்டப்படவிருக்கும் வாராவதி வேலைக்கு, குடும்பம் ஒன்றிற்கு ரூ. 100 கொடுக்க இசைந்துள்ளார்கள்.

பொருள் தானம்

ராமகிரி கிராம மக்கள், கூட்டாக ஒருமித்து சாலை மாசூல் ஏலம் எடுத்து, கிடைத்த இலாபத்தில், 60,000 செங்கற்கள் தயாரித்து, ரூ. 7,300 மதிப்பில் கட்டப் படவிருக்கும் பள்ளிக்கூட வேலைக்கு அளித்தார்கள். ஏனம்பாக்கம் என்னும் கிராமத்தில் பள்ளிக்கூடக் கட்டிடத்திற்குத் தேவையான மரச் சாமான்களுக்காக இரண்டு பெரிய முற்றின வேப்பமரங்களை கொடுத்து உதவி னர். பெரியபாளைய கிராமத்தினர், கிராம மனமகிழ் மன்றத்திற்கு கட்டிடமமைக்க, செங்கற்சூளைக்கு வேண் டிய எரிமரங்களை அளித்தனர்.

நீர்வாய் கிராமத்தில் ஒரு நபர், தன் வீட்டுவேலை முடிந்தபிறகு எஞ்சியிருந்த சிமிட்டி மூட்டைகள் ஆறும் பள்ளிக்கூட கட்டிட வேலைக்காகக் கொடுத்தார். வாணியன் சத்திரம் "புதுகுப்பம்" ரோட்டிற்கு சரளை கொட்ட "லாரியை" சில தினங்களுக்கு "பெட்ரோலின்றி" இனா மாகக் கொடுத்துதவ, அப்பகுதி சட்ட சபை அங்கத்தினர் (M.L.A.) சம்மதம் தெரிவித்திருக்கிறார். பாகல்மேடு கிராமத்தில் ரோட்டிற்கு சரளை கொட்ட வண்டிமாடு களும், நீர்வாயில் பள்ளிக்கூட வேலைக்கு செங்கல் எடுத்துச்செல்ல வண்டிமாடுகளும், வெங்கலில் வாரா வதிக்கு துருவிக் கற்கள் எடுத்துச்செல்ல வண்டிமாடுகளும் இனாமாகப் பெறப்பட்டன.

சிரம தானம்

பெரியபாளையம், தண்டிச்சேரி, செம்மேடு சேரியைச் சார்ந்த மக்கள், தங்கள் தங்கள் ஊர்களுக்கு ரோடு அமைப்பிற்கு பூரா மண்வேலையையும் பிரதி மாதம் பௌர்ணமி இராக்காலங்களில் ஐந்தைந்து நாட்கள் வேலை செய்து, இரண்டு மாத காலத்தில் பூர்த்தி செய் தனர். இச்சாலையமைப்பிற்குத் தேவையான சரளைக் கற்கள் கொட்டுதல், வாராவதி கட்டுதல் ஆகிய வேலைகளுக் காக, சர்க்கார் மான்யம் பூராவும் உத்தரவாகி வேலைகள் முடியுந் தறுவாயிலுள்ளன. உழைப்பு தானமளிக்க உள அமைப்பும், உடலமைப்பும் ஒருங்கே அமையப்பெற்ற பாகல்மேடு கிராம மக்கள், நபர் ஒன்றிற்கு $1\frac{1}{4}$ தாக்கு, அதாவது 500 க. அடி, மண்வேலையை (சாலை அமைப் புக்காக) இனாமாகச் செய்தார்கள்.

தாசுகுப்பம், காதர்வேடு கிராமங்களைச் சார்ந்த மக்கள் தங்கள் ஊர் ரோட்டிற்கு வேண்டிய பூரா மண்வேலையை யும் இனாமாகச் செய்து கொடுத்தார்கள். இம் மண் வேலைக்கு சர்க்கார் அளிக்கும் பாதி மான்யத் தொகை யைக் கொண்டு, கூலி வண்டியமர்த்தி இவர்களே "சரளைக் கற்கள் சேமிப்பு" ஒன்றை ஆரம்பிக்கத் திட்ட மிட்டுள்ளனர். இவ்விரு கிராமத்தினரும் கூலி வேலை கிடைத்தால்தான் பிழைப்பு என்கிற நிலையிலுள்ளவர்கள்; இவர்களுக்குச் சொந்த நிலமோ, வேறு துறையில் வரு மானமோ, எதும் கிடையாது. இந்த நிலையில், இவர்களிட முள்ள சொந்த முயற்சிக்குத் தேவையான மன உறுதியை நினைக்குந்தோறும், நாம் முன்னேறுவது வெகு தொலைவி லில்லை என்கிற உணர்வு உண்டாகிறது.

பள்ளிக் கட்டிட வேலை

வெங்களத்தூர் கிராமத்தார் பள்ளிக்கூடக் கட்டிட வேலை நடக்கும் இடத்திற்கு, ஒரு மைல் தொலைவிலுள்ள செங்கற் சூளையிலிருந்து வீடு ஒன்றிற்கு 200 செங்கற்கள் தலைச் சுமையாகவும், வண்டியிலும் கொண்டு வந்து சேர்க்க ஏற் பாடாகியுள்ளது. ஏனம்பாக்கம், நீர்வாய் பள்ளிச்சிறுவர் களும் கிராமப் பெண்டிரும் ஏனைய மக்களுமாகச் சேர்ந்து பள்ளிக்கூடத்தை கட்டுவதற்கு வேண்டிய "கான்கிரீட்டி"ற் குத் தேவையான செங்கல் ஜல்லிகளை உடைத்துக் கொடுத் தனர்.

வாராவதி அமைப்பு

வெங்கல் கிராம சேவா சங்க நிர்வாகக் குழு உறுப் பினர்கள் உழைப்பின் மேன்மையை உணர்ந்தவர்களாய், தங்களூர் வாராவதிக்கு வேண்டிய கருங்கல் ஜல்லி, மணல், துருவிக்கற்கள் முதலியவை கொண்டுவர ஓய்வு நேரங்களில் கோலெடுத்து வண்டியோட்டினர்.

சூளைமேனி, செங்கரை, பாகல்மேடு, கோடுவெளி, மதுரைவாசல், வெங்களத்தூர், நீர்வாய், வெங்கல், செம்பேடு சேரிமக்கள், சர்க்காரின் தினசரி நிர்ணயக்கூலி ஆண்களுக்கு ரூ. 1-8-0, பெண்களுக்கு ரூ. 0-12-0 என்றி ருந்த போதிலும் தங்கள் தங்கள் ஊர்வேலைகள் முடிய வேண்டுமென்கிற சேவையுணர்ச்சியால் தூண்டப்பட்டு, முறையே ரூ. 0-12-0, ரூ. 0-8-0 வீதம் தங்களின் சக்திக் கேற்ப குறைந்தபட்சக் கூலியாகப் பெற்று, சிரம தானம் செய்தார்கள்.

இவ்வாறான பலதிறப்பட்ட ஒத்துழைப்பைப் பெற்று, நாங்கள் 14 மைல் 6 பர்லாங் நீளமுள்ள ரோடுகளையும், ஏழு பள்ளிக் கட்டிடங்களையும், இரு சுகாதார கக்கூசு அமைப்புகளையும், ஒன்பது வாராவதிகளையும் அமைத்துள் ளோம். இது, அளவில் பிரம்மாண்டமான சாதனையில்லை யாயினும், திட்ட அடிப்படைப் பாதையில் பணிபுரிந்த திருப்தியுண்டு. தொடர்ந்து, ஒவ்வொரு கிராமத்தாருக் கும் 'தம்மையே தமக்குதவி' என்கிற எண்ண எழுச்சியை ஏற்படுத்துவதில் இன்னும் பெரும்பங்கு வசதியும், வாய்ப் பும் ஏற்படும் என்கிற எண்ணம் மட்டும் திண்ணமாக உண்டு.

ஆலத்தம்பாடி கிராம மக்களின் சாதனைகள்

[சென்னை ராஜ்யத்திலுள்ள சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களிலிருக்கும் சிறந்த கிராமங்களுக்கு அரசினர், 1955, அக்டோபரில் பரிசுகள் வழங்கினார்கள். தஞ்சை ஜில்லாவிலுள்ள திருத்துறைப் பூண்டி வட்டாரத்திலிருக்கும் ஆலத்தம்பாடி கிராமத்துக்கு, அரசினரின் பரிசு எப்படி கிடைத்தது என்று வாசகர்கள் அறிய ஆவலுள்ளவர்களாயிருப்பார்கள். அக்கிராமத்து மக்கள் புரிந்துள்ள சாதனைகள், இக் கட்டுரையில் இடம் பெற்றுள்ளன. —ஆசிரியர்.]

திருத்துறைப்பூண்டி வட்டாரத்திலிருக்கும் 82 கிராமங்களில், ஆலத்தம்பாடி கிராமமும் ஒன்று. நவ இந்தியாவை நிர்மாணிக்கும் பணியில், இக்கிராமத்து மக்கள், 1953, அக்டோபரிலிருந்து, பல அபிவிருத்தி வேலைகளைச் செய்வதன் மூலம் ஈடுபட்டுவருகிறார்கள். அக் கிராமத்திலுள்ள ஆண், பெண், பாலர்கள் அனைவரும் மிகவும் உற்சாகத்துடன் அபிவிருத்தி வேலைகளைச் செய்ய முற்பட்டு, இயன்றவரை உச்ச பட்ச அளவுக்கு, அரசினர் கொடுத்துள்ள வசதிகளைப் பயன்படுத்தி, அநேக சாதனைகளைப் புரிந்து, பரிசு பெற்று விட்டார்கள். சமுதாய அபிவிருத்தி வேலை எந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது என்பதை, அவ்வேலைக்காக எவ்வளவு பணம் செலவு செய்யப்பட்டது என்பதைக் கொண்டு மதிப்பிடுவதற்குப் பதிலாக, மக்களே, அந்த வேலை பற்றி, எவ்வளவு தூரம் சிந்தித்தார்கள், அவர்களே அந்த வேலையைச் செய்ய, எவ்வாறு திட்டமிட்டு நிறைவேற்றுகிறார்கள் என்பவற்றைக் கொண்டுதான் மதிப்பிடவேண்டும். இதன்படி கவனித்தால், ஆலத்தம்பாடி கிராம மக்களின் சாதனைகள் மகத்தானவையாகக் காணப்படுகின்றன.

அபிவிருத்தித் திட்டங்களின்மீது மக்கள் ஆர்வம்

விவசாயம், கால் நடை விருத்தி, சுகாதாரம், கல்வி, போக்குவரத்து வசதி, குடிசைத் தொழில்கள் முதலியவற்றில் இக் கிராமத்தில், நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அபிவிருத்தித்திட்ட வேலைகளுக்காக, ரொக்கமாகவும் இதர இனங்கள் மூலமாகவும் மக்கள் அளித்த பங்கைக் கவனித்தால், மென்மேலும் பற்பல அபிவிருத்தி வேலைகளை, அக் கிராமத்தில் நடத்த, அது, நமக்கு மிகுந்த ஊக்கத்தை அளிக்கிறது. இக் கிராம மக்களின் மனதிலே, சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் நன்றாகப் பதிந்து விட்டன. திட்டங்கள்மீது இவர்கள் கொண்டுள்ள ஆர்வத்தின்பயனாக, இவர்களே தாமாக முன்வந்து தாராளமாகத் தங்கள் பங்கைச் செலுத்தி, அரசினரின் பரிசையும் பெற்று விட்டார்கள்.

இவர்கள் ரொக்கமாக, 32,354 ரூபாய் அபிவிருத்தி வேலைகளுக்காக அளித்ததுடன், இதர இனங்கள் மூலம், 22,000 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள்.

பஞ்சாயத்துதான், கிராமத் தெருக்களைச் சுத்தம் செய்ய வேண்டும், என்று இக் கிராமத்து மக்கள் எண்ணவில்லை. இவர்களே தெருக்களையும், கிராமத்திலுள்ள இதர பொது இடங்களையும் சுத்தம் செய்ததால், பஞ்சாயத்தால், வருஷத்திற்கு 250 ரூபாய், இந்த வேலைக்காகச் செலவிடுவது தவிர்க்கப்பட்டு, அப் பணம் மிச்சமாகியது.

சமுதாய அபிவிருத்தி—ஒரு கூட்டுப்பொறுப்பு

இக் கிராம மக்கள், தாங்களே திட்டமிட்டுத் தங்களுடைய சுயமுயற்சியாலேயே, திட்டமிட்டபடி, அபிவிருத்தி வேலைகளைப் புரிந்துவருகிறார்கள். இது, அவர்களுக்கு ஒரு வழக்கமாகவே ஆகிவிட்டது. சமுதாய அபிவிருத்தி ஒரு கூட்டுப் பொறுப்பென்பதை அவர்கள் உணர்ந்துள்ளார்கள். வாசகசாலை ஏற்படுத்துதல், சாலை அமைத்தல் போன்ற வற்றால் சமுதாயத்தினர் அனைவருக்கும் பலன் கிட்டுவதால், அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்தே, இவ்வேலைகளைப் புரியும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்கள்.

விவசாய முன்னேற்றம்

அக் கிராமத்திலுள்ள விவசாயிகளில் அநேகர், பொறுக்கு விதைகளை உபயோகித்து வருவதுடன் திருந்திய விவசாய கருவிகளையும் உபயோகித்து, புது விவசாய முறைகளைக் கையாள்கிறார்கள். திருந்திய ஜப்பானிய நெல் சாகுபடி முறை, அநேகருடைய நிலங்களில், பின்பற்றப்படுகிறது. உரத்துக்காக, செஸ்பேனியா போன்ற பசுந்தாளுரச் செடிகளையும், அவர்கள் வளர்த்து வருவதுடன், கம்போஸ்ட் உரத்தையும் தாங்களே தயாரித்துத், தங்களுடைய நிலத்தில், அதை உபயோகித்து வருகிறார்கள். யந்திரக் கலப்பை மூலம் நிலத்தை உழுது பயிரிடுவது, சர்வ சாதாரணமாகி விட்டது. இம்மாதிரியாக, நவீன முறைகளைக் கையாண்டு, சிறந்த விதைகளைத் தெளித்தும், நல்ல உரங்களை உபயோகித்தும், அக் கிராமத்திலுள்ள விவசாயிகள், உணவு தானியங்களைக் கூடுதலாகக் கண்டுமுதல் செய்திருக்கிறார்கள்.

கதர் தொழில் அபிவிருத்தி

திருத்துறைப் பூண்டி வட்டாரத்திலேயே, ஆலத்தம்பாடி கிராமத்தில்தான், மிக அதிக எண்ணிக்கையில், சர்க்கா மூலம் நூல்நூற்பவர்கள் இருக்கிறார்கள். 150 சர்க்காக்கள் இக் கிராமத்துக்குக் கொடுக்கப்பட்டு இப்போது, இக் கிராமத்தில், சுமார் 250 சர்க்காக்கள் இயங்கி வருகின்றன. மிக நேர்த்தியாக நூல் நூற்கும் ஆற்றலைப் படைத்த ஆண்களும் பெண்களும், இக் கிராமத்தில் இருக்கிறார்கள்.

" ஏழை எளியவர் வாழ்வில் இன்பம் நிலைக்கச் செய்வீர்! "

பண்டிகையின்போது, கதர் வாங்குமாறு முதலமைச்சர் வேண்டுகோள்

பல்வேறு பண்டிகைகளின்போது ஜனங்களெல்லோரும் கதர்த் துணிகளை வாங்குமாறும், அதன் மூலம் ஏழை எளியோரின் வீடுகளில் ஆனந்த ஒளி பரவுவதற்கு உதவி புரியுமாறும், சென்னை ராஜ்ய முதலமைச்சர் ஸ்ரீ கே. காமராஜ் அவர்கள் வேண்டுகோள் ஒன்று விடுத்தார். அந்த வேண்டுகோளின் முழு விவரம் வருமாறு :—

" இவ் வருஷம் நவம்பர்மீ 14வ,' எங்கும் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படும். அந்த சமயத்தில் எல்லோரும் புதிய ஆடைகள் வாங்குவார்கள். நம்முடைய ஏழைச் சகோதர மக்கள் சார்பாக, இந்தப் பண்டிகையை முன்னிட்டு, பின் வரும் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். சிறப்பாக, நம் நாட்டின் கிராமாந்தரங்களிலுள்ள ஏழை விவசாய மக்கள் உழவுத் தொழிலையே முக்கியமாகக் கொண்டுள்ளனர். அதிலிருந்து கிடைக்கும் சொற்ப வருமானம் அவர்களுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, அவர்கள் வருமானத்தை அதிகப்படுத்த வேண்டியது அவசியம்.

நம் நாட்டின் பிதா மகாத்மா காந்தியடிகள் இத்தகைய ஏழை மக்களின் நல் வாழ்வை மனதில் கொண்டுதான், நம் நாட்டுக்கு சர்க்காவையும், கதரையும், உருவாக்கித்தந்தார். ஏழை எளியவரின் வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் சாதனங்களாக அவற்றை கருதி, நாட்டில் நிலை பெறச் செய்தார். நம்முடைய அருமைப் பிரதமர் நேருஜி கதரைப் பற்றிக் குறிப்பிடும்போது, " சுதந்திரத்தின் அணிகலன் " என்று தமக்கே உரிய முறையில் அழகாகக் கூறினார். இதை, நம்முடைய ராஜ்ய அரசாங்கம், கிராமப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் அபிவிருத்தித் திட்டத்தின் முக்கிய அம்சமாக ஏற்றுக்கொண்டு, கதர் அபிவிருத்தியில் கவனம் செலுத்தி வருகிறது.

எனவே, கதரின் அவசியத்தைப் பற்றியும், பெருமையைப்பற்றியும் முக்கியத்துவத்தைப் பற்றியும் நான் அதிகம் கூற வேண்டியதில்லை. ஏனெனில், அதை நம் தேசப் பிதா காந்தியடிகளே விரிவாகக் கூறியிருக்கிறார். மத்திய அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கங்களும் இதற்கான ஆதரவு கொடுத்து வருகின்றன. அதோடன்றி பொது மக்கள் இதற்கு மேலும் உதவி புரியக் கடமைப் பட்டிருக்கின்றனர். ஆகவே தீபாவளியின் போது எல்லோரும் கதர் வாங்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன். அப்போதுதான், ஏழை எளியவர் இல்லங்களில் ஆனந்தம் நிலவி, அவர்கள் வாழ்வில் ஒளி பரவ வழி பிறக்கும். ஏனெனில், கதர் உற்பத்தி செய்பவர், ஏழை எளியவர்கள் தான். கதர் விற்பனையானால்தான், அவர்கள் வாழ்வில் இன்பம் நிலைக்க முடியும். தீபாவளியின்போது நாம் சந்தோஷமாக இருப்பதைப் போலவே, அவர்களும் சந்தோஷமடைய வேண்டாமா! எனவே, கதர் விற்பனையில் கருத்து செலுத்தி, நம் ஏழை சகோதர சகோதரிகளுக்கு நம்மாலான உதவி செய்ய முற்படுவோமாக. "

பம்பாயிலிருந்து பத்து சக்கிகள் வரவழைக்கப்பட்டன. கைக்குத்தல் அரிசி உற்பத்திக்காக, இவை பயன்படுத்தப் படுகின்றன. கைக் குத்தல் அரிசி, மில்லில் 'பாலிஷ்' செய்யப்படும் அரிசியைவிட போஷாக்கு மிகுந்தது. ஆதலால், கைக்குத்தல் அரிசியைச் சாப்பிடுவது, உடம்புக்கு நல்லது என்பதை, இக் கிராம மக்கள் உணர்ந்து வருகிறார்கள்.

தேனில் சிறந்த போஷாக்குச் சத்துக்கள் இருக்கின்றன. நாட்டு மருந்துகள் கலப்பில், தேனும் ஒரு முக்கிய மருந்தாகக் கருதப்படுகிறது. தேன் உற்பத்தியைப் பெருக்க, இக் கிராமத்திலேயே தேனீக் கூண்டுப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு, மக்களுக்கு வழங்கப்படுகின்றன. இப் பெட்டிகளுக்காகும் செலவில் பாதியை, மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

'மேல் சாதி, கீழ் சாதி' பூசல்களும் வேறுபாடும் மறைந்து விட்டன. இப்போதெல்லாம், ஹரிஜனங்கள், தங்குதடையின்றி, ஆலயத்துக்குச் சென்று, ஆண்டவனைத் தொழுது வருகிறார்கள். மேலும், குடி தண்ணீர் கிணறுகளில், எல்லா சாதியினருமே, தண்ணீர் மொண்டு செல்கிறார்கள்.

கால்நடை அபிவிருத்தி நிலையம்

ஆலத்தம்பாடி கிராம மக்கள் கால்நடை விருத்தியில் கண்ணும் கருத்துமாய் உள்ளவர்கள். ஆகையால், சமீபத்தில் 18,800 ரூபாய் செலவில், கால்நடை அபிவிருத்தி நிலையமொன்று அங்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

சிறந்த சாதனைகளைப் புரிந்து, அரசினரிடமிருந்து அத்தாட்சிப் பத்திரத்தையும், ரொக்கப் பரிசையும் பெற்றுள்ள ஆலத்தம்பாடி கிராம மக்கள் மேலும் உற்சாகத்துடன், அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதைக்கண்டு, திருத்துறைப்பூண்டி வட்டாரத்திலுள்ள இதர கிராமங்களிலிருக்கும் மக்களும், உற்சாகத்துடன், ஆலத்தம்பாடியைப் பின்பற்றி, பல அபிவிருத்தி வேலைகளைப் புரிய முற்பட்டிருக்கிறார்கள்.

"ஒன்றுபட்ட சக்தியை - - - - - - உருவாக்குவோம்"

[ஸ்ரீ மு. கிருஷ்ணசாமி, தலைவர், பஞ்சாயத்துபோர்டு, குன்னூர், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி.]

[கிராம மக்கள் ஒன்றுபட்ட உணர்ச்சியுடனும், ஆர்வத்துடனும் தேசிய வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்ற முன்வரவேண்டுமென்று ஸ்ரீ மு. கிருஷ்ணசாமி இக்கட்டுரை மூலம், வேண்டுகோள் விடுத்துள்ளார். கட்சி மனப்பான்மை கூடாதென்பதை அவர் வலியுறுத்தி, தனவந்தர்கள் பொருள் கொடுத்தும், உழைப்பாளிகள் உழைத்தும், கிராமங்களுக்குத் தேவைப்படும் அபிவிருத்தி வேலைகளைச் செய்து கொள்ளவேண்டுமென்று, கிராம மக்களைக் கேட்டுக்கொள்கிறார். —ஆசிரியர்.]

உதார குணத்தை தேடிக்கொள்ள "தேசிய வளர்ச்சித் திட்டம்" ஓர் ஏதுவாக அமைந்துளது. ஆனதால் செல்வந்தர்களெல்லோரும் இது சமயம் ஷெ திட்டத்தின் கீழ் நடைபெறவிருக்கும் வேலைகளுக்கு, பணமாகவோ, நிலமாகவோ தாராள மனப்பான்மையுடன் கொடுத்து உதவி என்றும் அழியாப் புகழுடம்பு பெற்று இம்மைப் பயனடையுமாறும் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிடாது பயன்படுத்திக்கொள்வார்களென்றும் நம்புகிறோம்.

ஒரு கிராமத்திலுள்ள மக்களாகிய நாம், ஒரு வீட்டிலுள்ள குடும்பத்தினரைப்போல் இருக்கவேண்டும். நமக்குள் கட்சிகள் வேண்டாம். மாமியார் கட்சி மருமகளின் பேரில் புகார் சொல்லும் நோக்கமுடையது. மருமகளின் கட்சி மாமியார் மீது குற்றங்கள் ஏற்றித் தனிக் குடும்பமாகப் போய்விடப்பார்க்கும் கொள்கை பூண்டது. வீட்டுத் தலைவனின் கட்சியோ, எவர் சார்பில் நிற்பதென்ற திகைப்பு மிகுந்தது. இடையிலுள்ளவர்களின் கட்சியோ ஒருவர் சொல்லியதை ஒன்றுக்குப் பத்தாகக் கூட்டி மற்றவரிடம் கூறி, கலகத்தை வளர்த்து நடுவில் கொள்ளை கொண்டுபோகும் தன்மையது. பகையை வளர்க்கும் இவ்வித கட்சிகளைத் தொலைத்தால், குடும்பம் எவ்வளவோ சமாதானமாய் வாழ்ந்து, மேன்மைப்படும். இங்கு வீட்டுக்குச் சொன்னதை, கிராமத்துக்கும் நலமாக கொள்க.

நமக்குள் பாழுங் கட்சிகள் வேண்டாம். நாமெல்லோரும் ஓரே குடும்பத்தினராக ஒன்றுபட்ட மனப்பான்மையுடன் ஒத்துழைத்து, தேசிய வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக அரசியலாரால் கிராமங்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையைக்கொண்டு எல்லாத் தானங்களிலும் சிறந்த தானமாகிய சிரம தானத்தால் கிராமத்துக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்துகொள்வோமாக.

கிராமவாசிகளில் சிலர், தாம் உதவி செய்ய மறுப்புடன், செய்வோரையும் செய்ய வொட்டாது தடுக்கிறார்கள். அவ்வாறு செய்பவர்கள் வள்ளுவர் வாக்கிற்கிணங்க "உடுப்பதும் உண்பதும் இன்றி கெடுவதற்கு ஏதுவாகும்." இவ்வித கேட்டிற்காளாகாமல், தம் மட்டில் நிற்பது மிகவும் நலம்.

ஒன்றுபட்ட உணர்ச்சியுடன் பாடுபடுவோம்

சக்திகள் இரண்டு விதம். ஒன்று மாறுபட்ட சக்தி. இது ஒன்றை ஒன்று மோதி முட்டிக்கொள்ளும், "மட்குடமும் கல்லும் சந்தித்தல்போல." மற்றென்று ஒன்றுபட்ட சக்தி; இது ஒன்றின் மேல் ஒன்று ஒட்டிக்கொள்ளும். பாலும் சர்க்கரையும் எதிர்ப்பட்டுக்கொண்டதுபோலாம். கிராம மக்களாகிய நம்முள் ஒன்றுபட்ட சக்தி எழுந்தால், எல்லா மாறுபட்ட சக்திகளும் கண்காணுதோடிவிடும். இவ்வொன்றுபட்ட சக்தி அல்லது உணர்ச்சி தான் முதலில் வீடாகவும், இடையில் கிராமமாகவும், இறுதியில் நாடாகவும் விசாலப்பட்டு, முடிவில் உலகமாகவும் பரிணமிக்கின்றது.

ஆகையால் கிராமவாசிகளாகிய நாம் ஒன்றுபட்ட உணர்ச்சியுடன், தனவந்தர்கள் பொருளாலும், உழைப்பாளிகள் தங்கள் உழைப்பாலும் இத் தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நமது கிராமத்துக்குத் தேவையான சகல வேலைகளையும் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்," "கதவுள்ளபோதே அடைத்துக்கொள்" என்பதற்கிணங்க இவ்வரிய சந்தர்ப்பத்தைப், பயன்படுத்தி, நமது கிராமத்தை முன்னேற்றமடையும்படி செய்யப் பாடுபடுவோமாக. செல்வந்தர்களல்லாத மற்றவர்களிடமிருக்கும் உணர்ச்சியும் ஆர்வமும்போல தனவந்தர்களிடமும் ஏற்பட்டால், தேசிய வளர்ச்சித் திட்டம் மிகவும் சிறந்த முறையில் நடைபெறும். அதற்கு இறைவன், அவர்களின் மனதை மாற்றி உதார குண சீலராகச் செய்யும்படி, எல்லாம் வல்ல பெருங் கருணைப்பேரண்ணலாகிய எம்பெருமானை, சதா இறைஞ்சுவோமாக.

ஐந்தாண்டுத் திட்டம்

(தே. ச. சோமசுந்தரம், B. A.)

கும்மி

கும்மியடி பெண்ணே கும்மியடி
குதூகலமாகக் கும்மியடி
நன்மை பெருக்கும் ஐந்தாண்டுத் திட்டங்கள்
நமக்குத்தானென்று கும்மியடி (கும்மி)

கல்வி கேள்வி அனுபவம் முதிர்ந்த
கண்ணியமான தலைவர்களால்
எண்ணியே நன்றாகத் தீட்டிய திட்டத்தை
இனிதாய் நம் சர்க்கார் நடத்துகிறார் (கும்மி)

மேழிச் செல்வந்தனை ஓங்கிடச்செய்யலாம்
கோழிப் பண்ணைகளுங்கூட வளர்க்கலாம்
கால் நடைச் செல்வத்தைச் சீர்படச் செய்யலாம்
பாலுடன் சோறும் பசியாற உண்ணலாம் (கும்மி)

கையில் பணமே யில்லையென்று
கஷ்டங்கள் பட்டோம் அக்காலத்திலே
கையில் வெண்ணெய்போல இத் திட்டமிருக்க
நெய்யில்லையென்று கவலையுண்டோ (கும்மி)

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள நல்ல
கண்யமான சமுதாயத் திட்டம்
வேற்றுமை காட்டாமல் எக் கட்சியினரும்
போற்றிக் கையாளுவோம் வாருங்கடி (கும்மி)

ரோடுகள் பற்பல போட்டிடுவோம் ஜோராய்
ரோல்ஸ் ராய்ஸ் கார்கள் ஓட்டிடுவோம்
காடுகள் சோலையாய் வளர்த்திடுவோம்—தாய்
நாடு செழுத்திடச் செய்திடுவோம் (கும்மி)

கட்டை வண்டிகளைத் தள்ளித் தள்ளி—பாட்டையில்
பட்ட கஷ்டங்களை எண்ணிடுவோம்
கஷ்டங்கள் யாவும் தொலைந்திடவே இந்தத்
திட்டங்களை நிறை வேற்றிடுவோம் (கும்மி)

பஞ்சப் பேய்களை ஓட்டிடவே நாம்
நெஞ்சத்தில் உறுதி கொண்டிடுவோம்
"தஞ்சைக் களஞ்சியம்" போல நம் கிராமத்தை
சடுதியாய்ச் செய்ய உழைப்போமடி (கும்மி)

முப்பத்தாறு கோடி மக்கள் நாம் யாவரும்
முன்னேற்றமடைய வேண்டுமானால்
இப்போதே ஐந்தாண்டுத் திட்டந்தனை
இன்பமயமாக்க உழைப்போமடி (கும்மி)

காசு பணம் சர்க்கார் கேட்கவில்லை நம்மை
ஏசிப்பேசியும் நடத்தவில்லை
தேசிய விஸ்தரிப்புத் திட்டத்திற்காக
கிராம உழைப்புத்தான் கோருகிறார் (கும்மி)

உண்ண உணவும் உடுக்க உடையும்
நாம் வண்ணமாய் வசிக்க வீடுகளும்,
திண்ணமாய்க் கிடைக்கச் செய்வதற்கே
தீட்டினார் இத் திட்டம் நேரு சர்க்கார் (கும்மி)

அன்னியர் பலரும் போற்றுகிறார் இதை
ஆங்கிலேயரும் நோக்குகிறார்
ஆசியத் தோழர்களும் இதனை
அனுஷ்டிக்கவே முயற்சிக்கிறார் (கும்மி)

ஊருக்கொரு பள்ளி ஏற்படுத்த
உற்ற சமயம் இதுதானடி
யாருக்கு வந்ததோ என்று எண்ணாமல்
யாவரும் ஒன்றாய் உழைப்போமடி (கும்மி)

கிராமத்துக்கோர் சமுதாயக் கட்டிடம்
கல்விகற்க ஒரு நூல்நிலையம்
ஓய்வு நேரத்தை உல்லாசமாய்க் கழிக்க
உண்டு வானொலி நிலையமுமே (கும்மி)

பாடிய சோமனின் கீதமடி நமைத்
தேடி வருகுது செல்வமடி
மோடி செய்யாமல் உழைத்திடுவோம்
மேனாட்டைப்போல் செழித்து ஓங்குவோம் (கும்மி)

G.N.—4

தமிழ்நாட்டில் ராஷ்டிரபதி

"ஹிந்தி ராஷ்டிர பாஷையாகயிருப்பது காரணமாக பிறமொழி மக்கள் பாதகமடையலாம் என்று அஞ்சப் படுகிறது. யாருடைய நலனுக்கும் பாதக மேற்படாதவாறு பாதுகாப்புகள் செய்யப்படுகின்றன. எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் கிடைக்கும். பார்லிமெண்டில் இவ்விதம் உறுதிகூறப்பட்டிருக்கிறது. நானும் உறுதிகூறுகிறேன்" என்று ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரப் பிரசாத், 1955-ம் ஆண்டு நவம்பர்மீ 14உ காலை, சென்னையிலுள்ள ராஜாஜி ஹாலில், எட்டாவது கம்பர் மகாநாட்டை துவக்கி வைக்கும்போது, உறுதி கூறினார். மேலும், "கம்ப ராமாயணத்தை ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்தால், அநேகர் அதனைப்படித்து இன்புறுவர் என்பது நிச்சயம். கம்பன் பக்தியை அவர்கள் உணருவ துடன், தமிழ்மொழியின் பெருமையினையும் அவர்கள் உணருவர்" என்று ராஷ்டிரபதி குறிப்பிட்டார்.

தொழில் கல்வியின் அவசியம்

குரோம்பேட்டையில் உள்ள சென்னை தொழில் நுட்பக் கல்லூரியில், கல்லூரியின் ஸ்தாபகர் ஸ்ரீ ஸி. ராஜத்தின் உருவச்சிலையை, 1955-ம் ஆண்டு நவம்பர்மீ 14உ காலை, ராஷ்டிரபதி திறந்துவைத்துப் பேசுகையில், "வாழ்க் கைக்குக் கல்வி முறை பயன்பட வேண்டுமென்ற உண்மை தற்காலத்தில் புறக்கணிக்கப்பட்டுவருகிறது. விஞ்ஞான சோதனைக் கூடத்திலோ அல்லது பட்டறைசாலையிலோ, முன்கூட்டியே பயிற்சி பெறுவது தொழில் நுட்பக் கல்விக்கு மிகவும் அவசியமானது. தொழில் கல்வி இல்லாத சாதாரண கல்வி முறை இந்நாட்டில் வெறும் புத்தகப்படிப்பாகவே இருக்கிறது. இதனால் உண்மைக் கல்வி பாதிக்கப்படுகிறது.

"விஞ்ஞான, தொழில் படிப்புகளிலும், இம்மாதிரி நிலை ஏற்படின் விபரீதமே. தற்கால கல்வி முறைபற்றி கூறப்படும் குற்றச்சாட்டு என்ன? அன்றாட வாழ்க்கையோடு அது அறவே தொடர்பற்றதாக இருக்கிறதே என்பதுதான். படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பதற்கு இதுதான் காரணம். இந்நிலைமை மாற ஒரேவழி எதுவென்றால், வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய கல்வி என்ற தத்துவத்தைக் கடைபிடிப்பதே. காந்திஜி யின் ஆதாரக் கல்வி முறைக்கு கல்வி வட்டாரங்களில் ஆதரவு ஏற்பட்டு வருவதற்குக் காரணம் இதுதான்." எனக் குறிப்பிட்டார்.

ஹரிஜனங்களுக்குப் பொது ஸ்தாபனங்களில் இடம் மறுப்பது குற்றமாகும்

தியாகராயநகர், தக்கர்பாபா வித்தியாலயத்தில் காந்திஜி ஞாபகார்த்த புஸ்தகசாலையை இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத், 1955-ம் ஆண்டு நவம்பர்மீ 13உ யன்று திறந்துவைத்துப் பேசுகையில், "ஹரிஜனங்கள்போன்ற வகுப்பினருக்காக, தனிப்பட்ட ஸ்தாபனங்கள் இருப்பது முற்காலத்தில் அவசியமாக இருந்தது. படிப்பிற்கும் வேறு காரியங்களுக்கும் ஹரிஜன மாணவர்களுக்கு இடம் கிடைப்பது கஷ்டமாக இருந்தது. ஆனால், இப்போது காலம் மாறிவிட்டது. தற்போதைய சட்டப்படி, ஹரிஜன வகுப்பு அல்லது வேறு வகுப்பு என்ற பெயரால் பொது ஸ்தாபனங் களில் இடம் மறுப்பது குற்றமாகும்" என்று எச்சரித்தார்.

நவ இந்தியாவை நிர்மாணிக்க குழந்தைகளைத் தயார் படுத்தவேண்டும்

குழந்தைகள் க்ஷேமநல இந்திய கவுன்சில் சென்னை ராஜ்யக் கிளையின் ஆதரவில் சென்னை கார்ப்பொரேஷன் ஸ்டேடியத்தில், 1955-ம் ஆண்டு நவம்பர்மீ 13உ யன்று, குழந்தைகள் அணிவகுப்பு நடைபெற்றது. அந்த அணிவகுப்பை, ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் பார்வையிட்டார். பிறகு, அவர் பேசுகையில், "நம் நாட்டின் குழந்தைகள், இப்போது ஒரு நல்ல சகாப்தத்தில் அல்லது காலத்தில் வசித்து வருகிறார்கள். நமக்குச் சுதந்திரம் கிடைத்துள்ளது. நாட்டை உயரிய வகையில் சிறப்பாக நிர்மாணிக்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். குழந்தைகள் அதற்கு இப்பொழுதே தயாராகவேண்டும். அப்பொழுதுதான் காலம் வரும்போது இந்த மகத்தான வேலையில் அவர்கள் ஈடுபடமுடியும். இப்பொழுதே தயார் செய்துகொண்டால்தான் அப்பணியை நன்றாகச் செய்ய முடியும். இந்தியா போன்ற பெரிய நாட்டில் இதுதான் தேவை" என்று குறிப்பிட்டார்.

குவிப்பு மனோபாவம் கூடாது

ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் 1955-ம் ஆண்டு நவம்பர்மீ 14-ந்தேதியன்று, சென்னை, கார்ப்பொரேஷன் குடி தண்ணீர் சப்ளை நிலையத்தில், 25 லட்சம் ரூபாய் செலவில் துரித யந்திர வடிகட்டிகள் அமைப்பதற்காக, அஸ்திவாரக்கல் நாட்டினார். அப்போது, அவர் பேசுகை யில், "ஒரு திட்டத்தை மேற்கொண்டு முடிப்பதற்குள் பிரச்னை வளர்ந்து வருவதால் மற்றொரு திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. ஜல சப்ளையாகட்டும், பால் சப்ளையாகட்டும். ஜனத்தொகை ஓரிடத்தில் குவியும் முறை இருக்கும் வரை கலப்படம் நடக்கத் திண்ணமாக இடம் ஏற்படும். ஆகவே நகர வாசிகளின் சுகாதாரத்தைக் காக்க, கார்ப்பொரேஷன் களும் முனிசிபாலிடிகளும், அதிஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

“ எதிலும் குவிப்பு மனோபாவம் கூடாதென்பது காந்திஜியின் கருத்து. ஆனால் தற்போதைய நிலைமையைப் பார்க்குமிடத்து எங்கும் குவிப்பு முறையே தாண்டவமாடுகிறது. ஆகவே காந்திஜியின் போதனை இப்போது எடுபடுமாவென்று கூட நான் சந்தேகிக்கிறேன். எனினும் குவிப்பு முறையினால் எழும் ஆபத்துக்களையும், அனர்த்தங்களையும் உணர்ந்து ‘ கிராமங்களுக்குத் திரும்புக ’ எனும் காந்திய தாரக மந்திரத்தை சிரமேற்கொண்டு நிறைவேற்றும் காலம் சீக்கிரமே வருமென நம்புகிறேன் ” என்று கூறினார்.

தொழிலாளர் நலன்

சென்னை நகரில், தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை, 1955-ம் ஆண்டு நவம்பர்மீ 14-ந்தேதியன்று, ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் “ நாட்டின் செல்வத்தை உற்பத்தி செய்யும் தொழிலாளரின் நலத்தை முதலாளிகளாயிருப்பவர்கள் கவனிக்கவேண்டியது அவசியம். அரசாங்கமும் அவர்களுடைய நன்மையைக் கவனிக்கவேண்டும். வேலைக் காலத்தில் ஏற்பட்ட விபத்தால் உடல் ஊனமடைந்த போதும், நோயுற்றிருக்கும் காலத்திலும், தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளருக்குச் சில நன்மைகள் செய்தாகவேண்டும். தொழிற்சாலைப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டியது அவசியமாகும். அது அவசியமானால் தொழிலாளரின் நலன்களைப் புறக்கணிப்பதற்கில்லை. தொழிலாளருக்கு, அவர்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தேவைகளையே, இப்புதிய திட்டம் பூர்த்தி செய்கிறது. முதலாளிகளும் இப்பொழுது அதை உணர்ந்துவிட்டது குறித்து எனக்குச் சந்தோஷம் ” என்று கூறினார்.

ஆன்மீக நெறியே அஸ்திவாரம்

தியாகராயநகர் தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா, 1955-ம் ஆண்டு அக்டோபர்மீ 14-ந்தேதி இரவு நடைபெற்றது. அவ்விழாவுக்குத் தலைமைவகித்த ராஷ்டிரபதி, “ காந்திஜி நம்முன் வாழ்ந்து வந்தபோது, மக்களின் பொருளாதார நிலை, பசி, பிணியைப் போக்குதல் ஆகியவை பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லிவந்தார். பசியையும் பிணியையும் அகற்றிப் பொருளாதார நிலைமையை உயர்த்த அவர் பலபல செய்தார். ஆனால் அதே நேரத்தில் அவற்றை ஆன்மீக நெறி என்ற அஸ்திவாரத்தில் அவர் செய்தார். அதே அஸ்திவாரத்தின்மீது, இன்று, நாம், நமது வாழ்க்கை முறையை அமைத்தால், அது பலமானதாயும் சீரும் சிறப்பும் கொண்டதாகவும் உருவாகும் ” என்று குறிப்பிட்டார்.

புதுவை விஜயம்

ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திரப் பிரசாத், 1955-ம் ஆண்டு நவம்பர் 15ந்தேதி காலை, புதுச்சேரி அடைந்தார். புதுவை மக்கள் அவருக்கு அமோக வரவேற்பளித்தனர். ராணுவ அணிவகுப்பைப் பார்வையிட்ட பிறகு, ராஜ்னிவாசு சர்க்கார் மாளிகைக்குச் சென்றார். புதுவை ராஜ்ய கவுன்சிலர்கள் அளித்த வரவேற்புக்குப் பதில் கூறுகையில் புதுவை ராஜ்யத்தின் சகல பிரச்னைகளும் சீக்கிரமே தீர்க்கப்படுமென்றும், மக்கள் பொறுமையாயிருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். மேலும், அவர், இந்தியா என்றும் அமைதியை விரும்பும் நாடாகவே இருந்ததென்றும், இந்தியாமீது பிறநாடுகள் படையெடுத்தனவே யொழிய இந்தியா யார்மீதும் படைஎடுக்கவில்லை யென்றும் கூறினார்.

புதுச்சேரியை விட்டு, ராஷ்டிரபதி, காரைக்குடிக்குப் பயணமானார். வழியில், விழுப்புரத்திலும், புதுக்கோட்டையிலும், மக்கள் திரண்டுகூடி, அவருக்கு அமோக வரவேற்பளித்தனர்.

நாட்டுப்புறங்களில் கல்வி நிலையங்கள்

ராஷ்டிரபதி, 1955-ம் ஆண்டு நவம்பர் 15-ந்தேதி மாலை காரைக்குடியிலுள்ள அழகப்பா பலதொழிற்பயிற்சி நிலையக் கட்டிடத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டினார். அவ்விழாவின் போது, அவர் பேசுகையில், “ படிப்பு பற்றிக் குறிப்பிடும் போது எனக்குப் பழையகால சம்பிரதாயங்கள் நினைவிற்கு வருகின்றன. நலந்தா போன்ற கல்வி ஸ்தாபனங்களின் ஞாபகம் மனதில் உதிக்கிறது. பண்டைக் காலத்தில் கல்வித் திட்டங்களை வகித்தவர்கள் கல்வி போதனைக்கு சந்தடி மிகுந்த நகரங்களிலிருந்து விடுபட்ட வெளி யிடங்களையும், நாட்டுப்புறங்களையும் தெரிந்தெடுத்தார்கள். இவ்வாறு நாட்டுபுறங்களில் கல்விநிலையங்கள் நிலை பெறுவதால் மக்களிடையே பிணைப்பு ஏற்பட்டு, அவர்களுக்கு அறிவேற்படும். எவ்விதமேனும் சுயதேவையைப் பூர்த்திசெய்துகொள்ளும் ஒரு மனோபாவமும் இதனால் உதிக்கும். இந்தியர்களில் பெரும்பாலோர் இன்னும் கிராமங்களில்தான் வாழ்கிறார்கள் என்பதை நாம் மறக்கலாகாது. கிராமவாசிகளுக்கும் படித்தவர்களுக்குமிடையே உள்ள வித்தியாசம் விரிவடைந்தவாறே இருந்துவருகிறது. இந்த வித்தியாசத்தைக் குறைத்துவருவது, காரைக்குடி, பிலானி, முதலியவிடங்களிலுள்ள கல்வி நிலையங்களின் சேவையாகும் ” எனக் குறிப்பிட்டார்.

பலாத்காரத்தால் எந்தப் பிரச்னையும் தீர்ந்ததில்லை

ராஜபாளையத்திற்கு, 1955-ம் ஆண்டு நவம்பர் 16-ந் தேதியன்று, ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திரப்பிரசாத் விஜயம் செய்தபோது 60,000-க்கும் மேற்பட்ட மக்கள் அவரை உற்சாகத்துடன் வரவேற்றனர். ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா பொதுநல காரியங்களுக்காக நன்கொடையாக அமைத்துள்ள காங்கிரஸ் பொன்விழா மைதானத்தை, ராஷ்டிரபதி திறந்துவைத்துப் பேசுகையில், “ நமது போராட்டத்தில், கிராமங்களுக்கு முக்கிய பங்கு உண்டு என்ற காரணத்தினால் தான் காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்கள் கிராமங்களில் நடக்கவேண்டும் என்று காந்திஜி சொன்னார் ” என்று குறிப்பிட்டார்.

ராஷ்டிரபதி, ராஜபாளையத்தில், காந்தி மன்றத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில், “மதம், பொருளாதாரம், அரசியல் முதலிய எத்துறைகளிலும் பலாத்காரத்தால் எந்தப் பிரச்னையும் தீர்ந்ததில்லை. உலகம் இன்று காந்திஜி காட்டிய வழியில் கவனத்தைத் திருப்பி இருக்கிறது. ஒரே நாட்டினராக வாழ முற்படவேண்டுமானால், இந்திய மக்கள் பரஸ்பரம் அஹிம்ஸா முறையில் நடந்துகொள்ளவேண்டும்” என்று உபதேசித்தார்.

இரண்டரை நாட்களில் 600 மைல்கள்

ராஷ்டிரபதி, ராஜபாளையத்திலிருந்து கோயம்புத்தூருக்குப் போகும்போது, வழியில் திண்டுக்கல், பழனி, பொள்ளாச்சி, இன்னும் பல ஸ்டேஷன்களிலும், பெரும்பாலும் ஸ்திரீகளும் குழந்தைகளும் அடங்கிய திரளான ஜனங்கள் கூட்டம் கூட்டமாகக்கூடி, சந்தோஷ ஆரவாரம் செய்து, ராஷ்டிரபதியை வரவேற்றனர். தமிழ்நாட்டில், ராஷ்டிரபதி, இந்த இரண்டரை நாட்கள் சுற்றுப்பிரயாணத்தில், சுமார் 600 மைல்களுக்கு அதிகமாகப் பிரயாணம் செய்தார்.

கோயம்புத்தூரில், 1955-ம் ஆண்டு நவம்பர்மீ 17ந்தேதி காலை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய வெள்ளிவிழாக் கொண்டாட்டம் நடைபெற்றது. தேக அசௌகியம் காரணமாக ராஷ்டிரபதி வர இயலாததால், இவ்வைபவத்தில், ராஷ்டிரபதியின் உரையை, சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா வாசித்தார். ராஷ்டிரபதி, தமது உரையில் குறிப்பிட்டிருந்ததாவது: “ஞான தீபத்தை (கல்வியை) தொலைதூரத்திலுள்ள கிராமங்களுக்கு எடுத்துச் சென்று ஏற்றி வைத்திருப்பதன்மூலம், நாட்டுப்புறங்களில் வசிக்கும் நமது சகோதரமக்களுக்கு இந்த வித்யாலயம் உபயோகமான சேவை செய்திருக்கிறது. இங்கு ஆதாரக்கல்வி முறை பின்பற்றப்படுவது, போற்றுதலுக்குரியது.”

ஆதாரக்கல்வி முறையின் சிறப்பு

“பழைய கல்வி முறையைக்காட்டிலும், ஆதாரக் கல்வி முறைதான் நமது தேவைகளை மேலும் சிறந்தமுறையில் பூர்த்திசெய்கிறது. ஆதாரக்கல்வி முறை பற்றி எவர் என்ன நினைத்தாலும் சரி; அச்சடித்த வார்த்தைகளை வெறுமனே படிப்பதைக் காட்டிலும், செய்கைமூலம் கற்றுத் தெரிந்துகொள்வது அறிவையும் மனதையும் மேலும் நல்லமுறையில் பக்குவப்படுத்திக்கொள்வதற்குச் சிறந்த வழியாக இருக்கும் என்பதை எவரும் மறுக்க முடியாது.”

ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திரப்பிரசாத், 1955-ம் ஆண்டு நவம்பர் 18ந் தேதி காலை 8-30 மணிக்கு, கோயம்புத்தூரிலிருந்து விமானமூலம் டில்லிக்குப் பயணமானார். தமிழ்நாட்டில், அவர், கடந்த மூன்று தினங்களில் 700 மைல்களுக்கும் அதிகமாகச் சுற்றுப்பிரயாணம் செய்து பல் வேறு இடங்களுக்கு விஜயம் செய்தார். தனக்குச் செய்த ஏற்பாடுகளுக்காக, அதிகாரிகளுக்கும், மக்கள் அவர்மேல் சொரிந்த அன்புக்காக அவர்களுக்கும், ராஷ்டிரபதி நன்றி தெரிவித்துக்கொண்டார்.

உங்களுக்குத் தெரியுமா?

1952, அக்டோபர் 2-ந் தேதியன்று,

167 சமுதாய நலத் திட்டங்களும்;

1953, அக்டோபர் 2-ந் தேதியன்று,

53 சமுதாய நலத் திட்டங்களும்;

1953, அக்டோபர் 2-ந் தேதியன்று,

258 தேசிய வளர்ச்சித் திட்டங்களும்;

1954, அக்டோபர் 2-ந் தேதியன்று,

241 தேசிய வளர்ச்சித் திட்டங்களும்;

1955, ஏப்ரல் 1-ந் தேதியன்று,

107 தேசிய வளர்ச்சித் திட்டங்களும்,

இந்தியாவெங்கும் ஆரம்பிக்கப்பட்டன.

1955, அக்டோபர் 2-ந் தேதியன்று,

இந்தியாவிலுள்ள வட்டாரங்களின் மொத்த எண்ணிக்கை 942.

திட்டங்கள் மூலம் பயன்பெறும்

கிராமங்களின் மொத்த எண்ணிக்கை 92,000;

கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை 660 லட்சம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடியும் போது,

இந்தியாவில் மொத்தம் 1,200 வட்டாரங்களும்,

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும்போது,

இந்தியாவெங்கும் 3,808 வட்டாரங்களும்,

அமைக்கப்படும்.

புதுக்கோட்டை வட்டாரத்தில்

திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள, புதுக்கோட்டை வட்டாரத்தில், திருவாப்பூரிலிருந்து புஷ்யத்துறை வரை ரஸ்தா போடப்பட்டு வருகிறது. கோயில்பட்டிக்கும் நிம்பவனேசுவரபுரத்திற்கும் செல்லும் ரஸ்தாக்களை அமைக்கும் வேலை பூர்த்தியாகிவிட்டது. இதுவரை மொத்தம் 14 மைல், 4 பர்லாங் நீளத்துக்கு சாதாரண ரஸ்தாக்கள் போடப்பட்டிருக்கின்றன. பிருகதாம்பாள் புரத்தில், ஒரு புதிய பள்ளிக்கூடம் கட்டப்பட்டு வருகிறது. தக்ஷிணபுரத்தில், பள்ளிக்கூடம் கட்டி முடிக்கப்பட்டது.

* * * * * *

CONNEMARA PUBLIC LIBRARY



கால்நடை சிகிச்சை
ஆராய்ச்சி
நிலையம்,
ராணிப்பேட்டை

தம் வாழ்க்கை முழுவது மக்களுக்காக உழைப்பவை கால்நடைகள். ஆனு அவற்றிற்கு வரும் நோ களுக்கோ அளவில்லை. அ நோய்களை எடுத்துக்கூறவு அவற்றுக்கு வாயில்லை.

வாயில்லா அந்தப் பிராணி களுக்கு ஏற்படக்கூடிய பல்வேறு நோய்களுக்கான மருந்துவகைகளைத் தயாரிக் கும் ஆராய்ச்சி நிபுணர்கள், வட ஆற்காடு ஜில்லாவைச் சார்ந்த, ராணிப்பேட்டை ஆராய்ச்சி நிலையத்தில் சிறந்த சேவை புரிந்துவருகிறார்கள்.



சமீபத்தில், விவ அமைச்சர் ஸ்ரீ எம். வத்ஸலம் அங்கே வி செய்தார். கால்நடை களைத் தடுப்பதற்கான போடுவதற்குப் பயன் மருந்துகள், இங்கிருந்து கிராமந்தரப் பிர களுக்கு அனுப்பப்படுகின்

PUBLIC LIBRARY
DEC 1955

தமிழ்நாட்டில்

தீபாவளிப் பண்டிகையை, நம் இந்தியக் குடியரசின் தலைவ
மக்களிடையே கொண்டாடும் பெருமை ஏற்பட்டது. சென்னை
மொழியின் பெருமையை எடுத்துக்கூறியதோடு, இந்தி மெ
விளக்கினர். அச்சமயம், கம்ப ராமாயண ஆங்கில மொழி பெய
வைபவம், தக்கர்பாபா வித்யாலயம், தொழிலாளர் இன்ஷூரன்ஸ்
காரைக்குடியில், அழகப்பா தொழில் நுட்பக் கலாசாலையின் கால்
திறப்பு விழாவிற்கும், விஜயம் செய்து, கோவை மார்க்கமாக டெல்

24 DEC 1955
MAD

ராஷ்டிரபதி

டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்கள், தமிழ் நாட்டில், தமிழ் ...ரில், நடைபெற்ற கம்பர் விழாவிலே கலந்துகொண்டு, தமிழ் ...யால் அதற்கு எத்தகைய தீங்கும் நேரமுடியாது என்பதை ...பயர்ப்பு வேலை தொடங்கிவைக்கப்பட்டது. சென்னை நகரமன்ற ...ஸ் திட்ட ஆரம்பவிழா முதலியவற்றில் அவர் பங்கு கொண்டார். ...ால்கோள் விழாவிற்கும், ராஜபாளையத்தில் காந்தி கலைமன்றத் ...டல்லி போய்ச்சேர்ந்தார்.





CONNEMARA PUBLIC LIBRA
24 DEC 1955

ஒரத்தநாடு, தம்பிக்கோட்டை பகுதிகளில், மக்கள் பொதுநலப்பணி



தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த பட்டுக்கோட்டை விவசாயத் தொகுதியிலுள்ள ஒரத்தநாடு, தம்பிக் கோட்டை முதலிய இடங்களுக்கு, அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் விஜயம் செய்து, கிராமத் திருப்பணிகள் பலவும் தீவிரமாக நடைபெறுவதைப் பார்வையிட்டார். வனமகோற்சவம், பொறுக்கு விதைகளை விநியோகித்தல், முதலியவற்றோடு, நம் ராஜ்ய கால்நடை போர்டின் கூட்டமும் நடை பெற்றது. இளைஞரும் சிறுமியரும் ஆடிப்பாடி இன்புறும் காட்சிகள், உறங்கிக்கிடந்த கிராமப் பிரதேசங்களில் உருவாகிவரும் புத்துணர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றன.





சமுதாய அபிவிருத்தி வேலை முன்னேற்றம்

[சென்னை ராஜ்யத்தில், அநேக வட்டாரங்களில், அபிவிருத்தி வேலைகள் சிறந்த அளவில் முன்னேற்றமடைந்துள்ளன. 1955-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற அநேக வேலை விவரங்களில், சில, கீழே தொகுக்கப்பட்டிருக்கின்றன.

—ஆசிரியர்.]

சின்ன சேலம் வட்டாரம் (தென் ஆற்காடு ஜில்லா)

இவ்வட்டாரத்தில் 29 கிணறு வேலைகள் பூர்த்தியாகி விட்டன. 19 ரஸ்தா வேலைகளும் பூர்த்தியாகியிருக்கின்றன. இரு கிராமங்களில், மொத்தம் 20,000 ரூபாய் செலவில், இரு பள்ளிக்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. அம்மையகரம் கிராமத்தில், பள்ளிக்கூடக் கட்டிட வேலை ஆரம்பமாகியிருக்கிறது. இவ் வட்டாரத்தில் 31 சமூகக் கல்வி நிலையங்கள் உள்ளன. வடக்கநந்தாள், அம்மையகரம், தென் கீரனூர் முதலிய கிராமங்களில் மாதர் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 20 கிராமங்களில், சிறுவர் பூங்காக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து கிராமங்களில், விவசாய இளைஞர் சங்கங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 100 ஏக்கர் நிலம் பண்படுத்தப்பட்டு, சோளம், வரகு முதலிய பயிர்கள், இந்தப் பகுதிகளில் பயிரிடப்பட்டிருக்கின்றன. 1955 அக்டோபரில், இவ்வட்டார மக்கள் ரொக்கமாக, மொத்தம் ரூபாய் 28,523–10–0, சமுதாய அபிவிருத்தி வேலைகளுக்காக அளித்திருக்கிறார்கள்.

வேதாரணியம் வட்டாரம் (தஞ்சாவூர் ஜில்லா)

வேதாரணியத்தில், மேற்கு மடவிளாகம், கிழக்கு மடவிளாகம், புதுத் தெரு ஆகியவற்றிற்கு கப்பியடித்து, ரஸ்தா புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. மூலக்கரைப் பாலத்திற்கு போகும் ரஸ்தாவும், இவ்வாறே புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. காரியாபட்டிணத்தில், 10 கிணறு வேலைகள் பூர்த்தியாகிவிட்டன. கோடிக்கரை கிராமத்திலுள்ள மருத்துவ கட்டிடத்துக்கு, மேல் தளம் போட்டாகிவிட்டது. 46 கம்போஸ்ட் குழிகளும், 42 உரக் குழிகளும் தோண்டப்பட்டன. 43 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. 688 கால்நடைகளுக்கு, நோய் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. நோயுற்ற 111 கால்நடைப் பிராணிகள் சிகிச்சை செய்யப்பட்டன. மனமகிழ் மன்றம் ஒன்றும், சிறுவர் பூங்கா ஒன்றும், இளைஞர் மன்றம் ஒன்றும், சமூக சேவை சங்கங்கள் இரண்டும் அமைக்கப்பட்டன. இவ் வட்டாரத்திலுள்ள மக்களும் ஸ்தல ஸ்தாபனங்களும், அபிவிருத்தி வேலைகளுக்காக, ரொக்கமாக மொத்தம் ரூ. 10,699–8–0 அளித்திருக்கிறார்கள்.

திருத்துறைப்பூண்டி வட்டாரம்

இவ்வட்டாரத்தில், 18 சேரிகள் சுத்தம் செய்யப்பட்டன. 314 கம்போஸ்ட் உரக் குழிகள் தோண்டப்பட்டன. 473 மணங்கு ரசாயன உர வகைகள்; 100 மணங்கு வேர்க்கடலைப் பிண்ணாக்கு; 1,800 மணங்கு பசுந்தாளுரம் நகரக் கம்போஸ்ட்; 1,060 மணங்கு விதைகள்; 125 விவசாய கருவிகள் முதலியவை விநியோகிக்கப்பட்டன. நோயுற்ற 121 கால்நடைப் பிராணிகள் சிகிச்சை செய்யப்பட்டன. 110 கால்நடைப் பிராணிகளுக்கு, நோய்த் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. மூன்று மாலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. நான்கு சமூகக் கல்வி கமிட்டிகள் அமைக்கப்பட்டன. இவ்வட்டாரத்திலுள்ள மக்கள், அபிவிருத்தி வேலைகளுக்காக, ரொக்கமாக 16,459 ரூபாயும், இதர இனங்கள் மூலமாக 278 ரூபாயும் அளித்திருக்கிறார்கள்.

கும்பகோணம் (வடக்கு) வட்டாரம்

இவ்வட்டாரத்தில், 1954-ம் ஆண்டு மே மாதத்தில், தேசிய வளர்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வட்டாரத்திலுள்ள 79 கிராமங்களில், 95,422 மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். 584 மணங்கு விதை நெல்; 3 மணங்கு பசுந்தாளுரச் செடி விதைகள்; 460 மணங்கு அம்மோனியம் சல்பேட் முதலியவை மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. எட்டு பசுக்கள், செயற்கை முறையில் சினைப்படுத்தப்பட்டன. 245 பிராணிகளுக்கு, நோய்த்தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. நோயுற்ற 161 பிராணிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. நீராத்தாநல்லூர் கிராமத்தில், பள்ளிக்கூடக் கட்டிட வேலை அநேகமாகப் பூர்த்தியாகிவிட்டது. இவ்வட்டாரத்து மக்கள், அபிவிருத்தி வேலைகளுக்காக, ரொக்கமாக 1,900 ரூபாயும், இதர இனங்கள் மூலமாக 7,771 ரூபாயும் அளித்திருக்கிறார்கள்.

பெரம்பலூர் வட்டாரம் (திருச்சிராப்பள்ளி ஜில்லா)

இவ் வட்டாரத்தில், 18·60 ஏக்கர் நிலத்தில், ஜப்பானிய நெல் சாகுபடி முறை, இம் மாதத்தில், பின்பற்றப்பட்டிருக்கிறது. 460 கால்நடைப் பிராணிகளுக்கு, நோய்த் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. 12 சமூகக் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இரு மைல்கள் நீளத்துக்கு நல்லதொரு சாலை அமைக்கும் வேலை பூர்த்தியாகிவிட்டது.

முசிரி வட்டாரம்

இவ்வட்டாரத்தில், திருந்திய ஜப்பானிய நெல் சாகுபடி முறை, சுமார் 164·70 ஏக்கர் நிலத்தில் பின்பற்றப்படுகிறது. 17 கம்போஸ்ட் குழிகள் தோண்டப்பட்டு, 20 டன் உரம் உற்பத்திசெய்யப்பட்டு, வயல்களுக்கு இடப்பட்டது. 16 டன்

அம்மோனியம் சல்பேட் உரமும், 6½ டன் சூப்பர் உரமும், மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. வட்டார அபிவிருத்தி அதிகாரி அலுவலகத்தில், நூற்புப் போட்டி நடைபெற்றது. அதில் 32 பேர்கள் கலந்துகொண்டனர். பரிசுகள் வழங்க, அவர்களில் 4 பேர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

திருமங்கலம் வட்டாரம் (மதுரை ஜில்லா)

இவ் வட்டாரத்திலுள்ள மீனாக்ஷிபட்டியில், புதிதாக ஒரு நாணயக் கூட்டுறவு சங்கம் பதிவுசெய்யப்பட்டது. தெருக்களையும் பொது இடங்களையும் துப்புரவு செய்யும் வேலை, அநேக கிராமங்களில், வெற்றிகரமாக நடந்தேறியது. வீரப்பெருமாள்புரத்தில், ஸ்நான அறை கட்டும் வேலை பூர்த்தியாகி விட்டது. ஓராசிரியர் பள்ளியும் ஒரு கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பள்ளிச் சிறுவர்களுக்கு, பகல் சாப்பாடு அளிக்க, மேலாரப்பனூர், உரந்தாரப்பனூர், கீழாரப்பனூர், செங்குளம், பச்சக்கொப்பன்பட்டி முதலிய கிராமங்களிலுள்ள மக்கள் முன்வந்துள்ளனர். கே. வெள்ளக்குளத்தில், மாலைப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அம்மாபட்டி முதலிய கிராமங்களில் எட்டு சமூகக் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. நான்கு மனமகிழ் மன்றங்களும், இரு நாடக மன்றங்களும் ஆரம்பிக்கப்பட்டன. ஒரு புதுக் கிணறு தோண்டப்பட்டது. இரு பழைய கிணறுகள் புதுப்பிக்கப்பட்டன. நான்கு ரஸ்தா வேலைகள் பூர்த்தியாயிருக்கின்றன.

கல்லுப்பட்டி வட்டாரம்

இம் மாதத்தில், இவ்வட்டாரத்திலுள்ள கிராமங்களில் நல்ல மழை பெய்திருக்கிறது. நாற்று நடவு எல்லா கிராமங்களிலும் மும்முரமாக நடைபெற்றுவருகிறது. ஜப்பானிய நெல் சாகுபடி முறை, சுமார் 168 ஏக்கர் நிலத்தில், பின்பற்றப்பட்டுவருகிறது. 50 கம்போஸ்ட் குழிகள் தோண்டப்பட்டன, 905 டன் உரம் தயாரிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு, தீவிர உரமிடும் திட்டத்தின்கீழ், 30,000 ரூபாய் வழங்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. 288 ஆடுகளுக்கு, நோய்த்தடுப்பு ஊசி போடப்பட்டது. இதுவரை, இவ் வட்டாரத்தில், 14 புதுப் பஞ்சாயத்துகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நான்கு சமூகக் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஒரு மாதர் சங்கமும் ஆரம்பிக்கப்பட்டது. ஐந்து கிணறு வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டன. இவ் வட்டாரத்திலுள்ள கிராமங்களுக்கு, கதர் தொழில் அபிவிருத்திக்காக, 160 சர்க்காக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

சேரன்மகாதேவி வட்டாரம் (திருநெல்வேலி ஜில்லா)

இவ்வட்டாரத்தில், கால்நடை விருத்திக்காக, 1,332 பிராணிகளுக்கு நோய்த்தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. நோயுற்ற 413 பிராணிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. 85 கம்போஸ்ட் உரக்குழிகள் தோண்டப்பட்டன. 350 மணங்கு உரமும், 2 மணங்கு பசுந்தாளுரச் செடி விதைகளும், 3 மணங்கு விதை நெல்லும், விநியோகிக்கப்பட்டன. 4·30 ஏக்கர் நிலம் பண்படுத்தப்பட்டது. 675·64 ஏக்கர் நிலத்தில், ஜப்பானிய நெல் சாகுபடி முறை பின்பற்றப்பட்டது. 14·73 மைல் நீளத்துக்கு கெட்டித்த ரஸ்தாக்களும், 18½ மைல் நீளத்துக்கு சாதாரண ரஸ்தாக்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

திருநெல்வேலி ஜில்லாவில், வள்ளியூரில், புதிதாக தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரமொன்று ஆரம்பிக்கப்பட்டது. காந்தி ஜெயந்தியன்று, 700 ஏழைகளுக்கு அன்னம் வழங்கப்பட்டது.

ராமநாதபுரம் ஜில்லா

சிவகாசி வட்டாரத்தில், 5,762 சிட்டை கதர் நூல் தயாரிக்கப்பட்டது. ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி, ராஜபாளையம் வட்டாரங்களில், 47 கம்போஸ்ட் உரக்குழிகள் தோண்டப்பட்டன. இதே வட்டாரங்களில், 2,906 கால்நடைப் பிராணிகளுக்கு நோய்த்தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி வட்டாரங்களில், 4 ரஸ்தா வேலைகள் நடைபெற்றுவருகின்றன. இரு மனமகிழ் மன்றங்கள் ராஜபாளையம் வட்டாரத்தில் ஆரம்பிக்கப்பட்டன. கும்மாப்பட்டியிலும், லக்ஷ்மிபுரத்திலும் இரு முதியோர் கல்வி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

செங்கல்பட்டு ஜில்லா

காஞ்சீபுரத்தில், ஐ. நா. உணவு, விவசாய தினத்தையொட்டி, கண்காட்சி ஒன்று நடைபெற்றது. கால்நடை விருத்திக்காக, 755 நோயுற்ற பிராணிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. 2,547 பிராணிகளுக்கு நோய்த்தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. திருமணிக்குப்பத்திலும், உளுந்தையிலும், கிராமத் தலைவர்கள் விழாக்கள் நடைபெற்றன. புல்லரம்பாக்கம் கிராமத்தில், சிறுவர் பூங்கா ஒன்று ஆரம்பித்துவைக்கப்பட்டது. நான்கு கிராமங்களில், 6 புதிய முதியோர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. 16 ரஸ்தா வேலைகள் நிறைவேறிவருகின்றன. 4 பர்லாங்கு நீளத்துக்கு கெட்டித்த ரஸ்தாவும், 4 மைல் 4 பர்லாங்கு நீளத்துக்குச் சாதாரண ரஸ்தாக்களும் அமைக்கப்பட்டன. 26 கிணறு வேலைகள் நடந்துவருகின்றன. கடம்பத்தூரில், பள்ளிக்கூடக் கட்டிட வேலை, அநேகமாகப் பூர்த்தியாகிவிட்டது. இரு சேரிகளில், துப்புரவு வேலை நடைபெற்றது. திருமணிக்குப்பம், உளுந்தை முதலிய கிராமங்களில், ஏழைக் குழந்தைகளுக்குப் பால் விநியோகிக்கப்பட்டது.

கிராம மக்கள் சுற்றுப் பிரயாணம்

கரூர் வட்டாரத்தில், கிராம மக்கள் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் 35 கிராமத் தலைவர்கள் கொண்ட கோஷ்டி ஒன்று, பாளையக்கோட்டையிலுள்ள கால்நடைப் பண்ணை, கீழ் பவானி அணை, கோயமுத்தூரிலுள்ள வனக்கல்லூரி, விவசாயக் கல்லூரி, பஞ்சாலை, பி. எஸ். ஜி. கழகம் முதலியவற்றைச் சுற்றிப் பார்த்துத் திரும்பியது. இக் கோஷ்டியினர், கால்நடை அபிவிருத்தி பற்றியும் விவசாயத் தொழில் நுட்பத் துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றியும் நன்கு அறிந்து, தங்கள் ஊர்களுக்குத் திரும்பி வந்திருக்கிறார்கள்.

பெரம்பலூர் வட்டாரத்தில், பள்ளிக்கூடக் கட்டிட அமைப்பு வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது. பசும்பலூர், மலையாளபட்டி, நெய்குப்பை ஆகிய ஊர்களில், ஹரிஜன பள்ளிகளைக் கட்டும் வேலையும் ஆரம்பமாகிவிட்டது. நெற்குணம் கிராமத்தில், கிராமத் தலைவர்கள் பயிற்சி முகாம் ஆகஸ்ட் 19-ம் தேதி முதல் 21-ம் தேதி வரை நடந்தது.

இரு முதியோர் பள்ளிகள், மூன்று சமூகக் கல்வி நிலையங்கள், ஒரு சமூக சேவை ஸ்தாபனம், இரு மக்கள் மனமகிழ் மன்றங்கள், ஆகியவை முசிரி வட்டாரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

* * * * * *

பெரம்பூரில் தீக்குச்சித் தொழிற்சாலை

சென்னை, பெரம்பூரில், கையினால் செய்யும் தீக்குச்சித் தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் திட்டத்தை அரசினர் அனுமதித்துள்ளனர். இத் தொழிற்சாலையில் வருஷத்தில் 5 லட்சம் குரோஸ் தீக்குச்சிகள் உற்பத்தி செய்ய வசதி ஏற்படுத்தப்படும்.

தொழிற்சாலை, அரசாங்க ஸ்தாபனமாக, கைத்தொழில் வர்த்தக இலாகா டைரக்டரின் அதிகாரத்திற்குள் நடைபெறும். மேற்பார்வையிட நிர்வாகக் கமிட்டி ஒன்று நியமிக்கப்படும். அதில் கைத்தொழில்-வர்த்தக இலாகா டைரக்டர், தென் ஜில்லாக்களிலுள்ள ஒரு தீக்குச்சித் தொழிற்சாலை சொந்தக்காரர், நகரிலுள்ள ஒரு பெண் சமூக சேவையாளர் ஆக மூவர் அங்கம் வகிப்பார்கள்.

குறைந்த வருமானமுள்ள குடும்பப் பெண்களுக்கு இந்தத் தொழிற்சாலை வேலை கொடுக்கும். (அதாவது போலீஸ் கான்ஸ்டபிள்களின் மனைவியர், நகரில் பல பகுதிகளிலுமுள்ள தொழில்களிலும் மற்றும் வேலை ஸ்தாபனங்களிலும் வேலை செய்யும் தொழிலாளர்களின் மனைவியர், வேலை செய்யச் சக்தியில்லாது போனவர்களின் மனைவியர்) தீக்குச்சி செய்வதற்கான சாமான்கள், 504 தொழிலாளர்களுக்கு அவர்களுடைய வீடுகளில் விநியோகிக்கப்படும். வேலை தீர்ந்த அல்லது அரைகுறை வேலை தீர்ந்த பொருள்களைச் சேகரித்துவர தொழிற்சாலையில் ஒரு மத்திய ஏஜன்ஸி அமைக்கப்படும்.

அறிவிப்பு

"கிராம நலம்" பத்திரிகையின் விளம்பர விகிதம்

வெளி அட்டைப் பக்கம் ..	ரூ. 150– 0– 0
உள் அட்டைப் பக்கம் ..	ரூ. 125– 0– 0

இதர பக்கங்களில் :

பக்கம் ஒன்றுக்கு	ரூ. 100– 0– 0
அரைப் பக்கம்	ரூ. 60– 0– 0

சந்தா விவரம்

வருட சந்தா	ரூ. 1– 8– 0
ஆறு மாத சந்தா	ரூ. 0–12– 0

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பலாம்.

தனிப் பிரதி—இரண்டு அணா.

தனிப் பிரதிகளை அனுப்ப, தபால் பில்லைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

மற்ற விவரங்களுக்கு, பின்வரும் விலாசத்துக்கு எழுதுங்கள் :

பொதுஜனத் தொடர்பு அதிகாரி,
(சமுதாய அபிவிருத்தி),
செக்ரடேரியட்,
சென்னை-9.

Public Relations Officer,
(Community Development),
Public (R.D.P.) Dept.,
Secretariat,
Madras-9.

இப் பத்திரிகை, சென்னை அரசாங்க, சமுதாய அபிவிருத்தி இலாகாவால் நடத்தப்படுகிறது. ஆயினும், இதில் வெளியிடப்படும் அபிப்பிராயங்களும், காணப்படும் கருத்துக்களும், சென்னை அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான அபிப்பிராயத்தை வெளியிடுகின்றன என்பதில்லை.

இப் பத்திரிகையில் வெளியிடும் பாட்டு, கதை, நாடகம் முதலியவற்றில் வரும் பெயர்கள் யாவையும் கற்பனையே. ஒருவரையும் குறிப்பிடுவன அல்ல.

காங்கேய வட்டாரத்தில் நிர்மாண வேலைகள்

[ஸ்ரீ. ஆர். பட்டாபிராமன், பி. எஸ்.ஸி., விவசாய விஸ்தரிப்பு அதிகாரி, காங்கேயம்]

மக்களுக்கு நன்மை செய்யும் எக்காரியத்தையும், இந்தியாவிலேயே, சென்னை ராஜ்யம்தான் முதன் முதலாகச் செய்து, பேரும் புகழும் பெற்று வருகிறது. மதுவிலக்கு வெற்றிகரமாக எந்த ராஜ்யத்தில் முதலில் ஆரம்பிக்கப் பட்டது? நமது ராஜ்யத்தில்தான். இப்போது தேசிய வளர்ச்சித் திட்டம் மூலம் சமாளித்தாக வேண்டிய பிரச்னைகளை, முன்பு சென்னை ராஜ்யம் எவ்விதம் சமாளித்து வந்தது? பிர்க்கா அபிவிருத்தித் திட்டங்கள் மூலமாகத்தான், அப்பிரச்னைகள் சமாளிக்கப்பட்டன. கிராம நல அதிகாரியின்கீழ், தொழில் நுட்பந் தெரிந்த சில அதிகாரிகளும் கிராமத் தொண்டர்களும், பிர்க்கா அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்றி வந்தனர். ஆனால், இத்திட்டத்தைப் பெருமளவில், நிதி நிலைமையின் காரணமாக, நடத்த முடியவில்லை. கிடைத்த துணிக்குத் தகுந்தவாறு சட்டை தைத்துக்கொள்வதுபோல், நமது ராஜ்ய நிதி நிலைமைக்குத் தகுந்தவாறு, இத்திட்டமும் ஓரளவுக்குக் கிராமப் புறங்களில் பரவியிருந்தது. தேசிய வளர்ச்சித் திட்டமும், சமுதாய அபிவிருத்தித் திட்டமும், பிர்க்கா அபிவிருத்தித் திட்டத்தை, பெருமளவில், பல கிராமங்களுக்கும் வட்டாரங்களுக்கும் விஸ்தரிப்பவை என்று சொன்னால், அது மிகையாகாது. பிர்க்கா அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், காங்கேயம் பிர்க்காவையும் வெள்ளக்கோயில் பிர்க்காவையும், கிராமநல அதிகாரி ஒருவர் கவனித்து வந்தார். 1953ஆம் அக்டோபர் மீ-த்தில் தேசிய வளர்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, இது தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரமாக மாறியது.

வட்டாரத்தின் தோற்றம்

சென்னை ராஜ்யத்தில் உள்ள வரண்ட பிரதேசங்களைச் சிறந்த வகையில் பிரதிபலிக்கக்கூடியது காங்கேய வட்டாரம்தான். கோயம்புத்தூர் ஜில்லாவின் மத்திய பாகத்தில் உள்ள இந்த வட்டாரத்தில், வருஷத்திற்குச் சராசரி 21·7 அங்குலம் வீதம் மழை பெய்கிறது. சென்னை ராஜ்யத்தில், பஞ்சம் பரவ ஆரம்பித்தால், முதலில், இந்த வட்டாரத்தில்தான் பஞ்சம் பீடிக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவ்வளவு வரண்ட பிரதேசமாக இந்த வட்டாரம் இருக்கிறது. இப் பிரதேசத்திலுள்ள நிலமண், மிகவும் கடினமானது. நிலப்பரப்பு மீதிருக்கும் மண்ணோ, பொல பொல வென்றிருக்கும். மேடுகளும் பள்ளங்களும், இவ்வட்டாரத்தில் மல்கியுள்ளன. பெருங்காற்றடித்து, அதன் காரணமாக, நிலப்பரப்பின்மீதுள்ள மண் அரிக்கப்பட்டு விடுவதும் உண்டு. இவ்வட்டாரத்திலுள்ள அநேக கிராமங்களில் குடி தண்ணீர் கிணறுகள் போதிய எண்ணிக்கையில் இல்லை. போக்குவரத்து வசதிக்குச் சரியான ரஸ்தாக்களும் இல்லை. பாசனத்துக்காகக் கிணறு தோண்ட, ஒரு கிணறுக்கு 4,000 ரூபாய் வீதம் செலவு செய்ய நேரிடுகிறது. தரிசு நிலப் பகுதிகளின் நடுவே, சில இடங்களில் பசுமை தெரியும். அங்கு வெள்-வேலம் மரங்கள் வளர்ந்திருக்கும். அங்கு, பாசனத்துக்காக, கிணறு ஒன்றும், தென்னந்தோப்பு ஒன்றும் இருக்கும். அதற்கருகாமையில் உள்ள சில நிலப்பகுதிகளில், சோளம், புகையிலை முதலிய பயிர்கள் வளர்ந்திருக்கும்.

நமது பிரச்னைகள்

இவ்வாறு தோற்றமளிக்கும் காங்கேய வட்டாரத்தின் முக்கிய பிரச்னை, குடிதண்ணீர் வசதிதான். மேலும், போக்குவரத்துக்காக ரஸ்தாக்களை அமைத்தாக வேண்டும். பாசனத்துக்காக, விவசாயிகள் கிணறுகள் தோண்டுவதற்காக, அவர்களுக்குக் கடன் வசதி அளிக்கவேண்டும். "காங்கேய இனம்" பேர் பெற்றது. இவ்விசேஷ கால்நடை இனம், இவ்வட்டாரத்திலிருக்கிறது. இந்த இன அபிவிருத்திக்காகவும், தேசிய வளர்ச்சித் திட்டத்தின் மூலம், பாடுபட வேண்டும். இவ்வட்டாரத்தில், பெரும்பாலும் படிப்பு வாசனை யறியாத மக்களே இருந்து வருகிறார்கள். முதியோர் கல்வி நிலையங்கள், பொது வாசகசாலைகள் முதலியவைகளை ஆரம்பித்து, கல்வியை, மக்களிடையே பரப்புதல் வேண்டும். கதர் தொழிலபிவிருத்திக்காகவும் இவ்வட்டாரத்தில், உழைப்பதோடு, கைத்தறித் தொழிலபிவிருத்திக்காகவும் பாடுபடுவது, நல்ல பலன்களை அளிக்கும்.

திட்டம் ஆரம்பிக்கப்பட்டபின்

விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, விவசாய டிப்போ ஒன்று, இந்த வட்டாரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. விதைகள், பயிர்ப்பூச்சிகளை ஒழிக்கும் மருந்துகள், உரங்கள் முதலியவற்றை விவசாயிகள், இந்த டிப்போவிலிருந்து வாங்க முற்பட்டார்கள். முக்கிய பயிர்களின் பொறுக்கு விதைகளைப் பெருக்க, கிராம விதைப் பண்ணைகள், ஆரம்ப விதைப் பண்ணைகள் முதலியவை ஆரம்பிக்கப்பட்டன. இந்திய விவசாய ஆராய்ச்சிக் கவுன்ஸிலின் ஆதரவில் நடந்துவரும் திட்டத்தின்கீழ், உர உபயோகத்தை, விவசாயிகளிடையே பிரபலப்படுத்துவதற்கு, ஏற்பாடு செய்யப்பட்டது. கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, உரங்களை விவசாயிகள் பெறுவதற்கும் வசதி செய்து கொடுக்கப்பட்டது. நிதர்சனமாக, ஜப்பானிய நெல் சாகுபடி முறை, விவசாயிகள்முன் நடத்தப்பட்டது. காய் கறி, கனி மர வளர்ப்பு, மேலும் பல ஏக்கர் நிலங்களில் விஸ்தரிக்கப்பட்டது. சோளப் பயிர் போட்டி நடைபெற்றது.

கால்நடை அபிவிருத்தி

காங்கேய இனக் கால்நடைப் பிராணிகளுக்கு, இவ்வட்டாரம்தான் "தாய்நாடு" என்று சொல்லலாம். ஆகவே, இந்த இனவிருத்தியையே குறிக்கோளாகக்கொண்டு, தேசிய

வளர்ச்சித் திட்டவேலைகள் நடைபெற்றன. திட்ட நிதி மூலம், காங்கேய காளைகள் விலைக்கு வாங்கப்பட்டு, விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டன. 1955-ம் ஆண்டு மார்ச் 31வரை, இந்த வட்டாரத்தில் இரு கால்நடைக் கண்காட்சிகளும், கன்றுகள் கண்காட்சி ஒன்றும் நடைபெற்றன. சிறந்த பிராணிகளுக்கெனப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

கூட்டுறவுத் துறையில்

கூட்டுறவு சங்கங்கள் பெரும்பாலும் கடன் வசதியளிப்பதற்குத்தான் ஆரம்பிக்கப்படுகின்றன. பல காரிய கூட்டுறவுச் சங்கங்களாக, இவைகளை மாற்ற, முயற்சிக்கப்படுகிறது. உழைப்பு கண்ட்ராக்ட் கூட்டுறவு சங்கமொன்றை நிறுவவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

சமூகக் கல்வி

இத்துறை, கிராமவாசிகளுக்கு மிகவும் புதியது. தேசிய வளர்ச்சித் திட்டத்தின்கீழ், படித்தவர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், மன மகிழ் மன்றங்களை ஆரம்பிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. முதியோர் கல்வி நிலையங்களும், மாதர் சங்கங்களும் ஆரம்பிக்கப்பட்டன. மடவிளாகம் கிராமத்தில், கிராம மக்களுக்கு, குடிமைப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியை, சென்னை ராஜ்ய முதல் அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்.

காதித் திட்டங்கள்

இவ் வட்டாரம், வரண்ட பிரதேசமாகையால், விவசாய அபிவிருத்தி பருவ மழையைப் பொறுத்திருக்கிறது. ஆகவே, இவ் வட்டாரத்தின் பொருளாதார நிலைமை, கதர்த் தொழில் அபிவிருத்தியையும், இதர கிராமத் தொழில்கள் அபிவிருத்தியையும் சார்ந்திருக்கிறது. கதர் நூலை நூற்றே, தமது வாழ்க்கையை நடத்தும் மக்கள் அநேகர் இவ் வட்டாரத்தில் இருப்பது, ஆச்சரியப்படக்கூடிய விஷயமல்ல. கடுமையாகப் பஞ்சம் தலைவிரித்தாடும்போது வருந்தும் கிராமவாசிகளுக்கு, சர்க்கா ஒரு வரப்பிரசாதமாக விளங்கி வருகிறது. சுதந்தர தினம், குடியரசு விழா முதலிய புனித நாட்களில், இங்கு, கதர் நூல் நூற்புப் போட்டிப் பந்தயங்கள் நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்படுகின்றன.

கடன் வசதிகள்

உரங்கள், காளைகள் முதலியவைகளை வாங்குவதற்காகவும், கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகவும், விவசாயிகளுக்குக் கடன் அளிக்கப்படுகிறது.

திட்டத்தினால் ஏற்படும் பலன்கள்

விவசாயம், கால்நடை விருத்தி, கிராமத் தண்ணீர் சப்ளை, முதலிய பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு, தேசிய வளர்ச்சித் திட்டம் மக்களுக்கு சகலவித வசதிகளையும் அளித்து வருகிறது. ஜனநாயகக் கொள்கையைப் பின்பற்றி வரும் சென்னை ராஜ்யத்தில், தேசிய வளர்ச்சித் திட்டம், மக்களே தங்களுடைய கடமைகள் யாவை என்பதை உணரச் செய்கிறது. 'டானிக்' மருந்துபோல், இத்திட்டம், மக்களை உற்சாகப் படுத்தி, எல்லா கிராமங்களிலும் வாழ்க்கைத் தரம் உயர பாடுபடுகிறது. தேசிய வளர்ச்சித் திட்டம் இங்கு அமலுக்கு வருமுன் இங்குள்ள கிராம மக்களுக்கு பொறுக்கு விதைகள், தரமிகுந்த உரங்கள் முதலியவற்றை உபயோகிப்பதில் பழக்க மேற்படவில்லை. இப்போதோ, அவர்கள் அவைகளை உபயோகித்து வருவதுடன், பயிர்ப்பூச்சிகளை ஒழித்து பயிர்வகைகளைப் பாதுகாப்பதற்கு, விவசாய இலாகாவினரின் யோசனைப் படியும் நடந்து வருகிறார்கள். தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பல்வேறு இலாகாக்களைச் சேர்ந்த தொழில் நுட்பந் தெரிந்த அதிகாரிகள் ஒருவரோடொருவர் ஒத்துழைத்து, மக்கள் நலனுக்காகப் பாடுபட்டு வருகிறார்கள். இம்மாதிரியான ஒத்துழைப்பு முன்பெல்லாம் இருந்ததில்லை. ஆகையால், கிராம மக்கள், இப்பொழுதெல்லாம், "சிகப்பு நாடா ஆட்சிமுறை" கொஞ்சம்கொஞ்சமாக மறைந்து வருவதை உணர்ந்து உள்ளம் மகிழ்கிறார்கள். உரம் வாங்கவோ, காளை வாங்கவோ அல்லது கிணறுவெட்டவோ, கடன் கேட்கப்பட்டால், அந்த கோரிக்கையைத் தவக்கமன்னியில் நிறைவேற்ற, தேசிய வளர்ச்சித் திட்ட நிர்வாகிகள் முயன்று வருகின்றார்கள். தொழில் நுட்பந் தெரிந்த அதிகாரிகள், அவரவர் இலாகாக்களில் பார்க்கும் அலுவலுக்கும், தேசிய வளர்ச்சித் திட்டத்தின்கீழ், அவர்கள் பார்க்கும் அலுவலுக்கும் வித்தியாசமுண்டு. அவர்கள், அவரவர் இலாகாக்களிலேயே அலுவல் புரிந்தால், மக்கள்தான், அவர்களை நாடிச் செல்லவேண்டியிருக்கும். ஆனால், தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழோ, அந்த அதிகாரிகள், மக்களை நாடிச் சென்று, மக்கள் நலனுக்காகப் பாடுபடவேண்டியிருக்கிறது. இந்த மாறுதலை, மக்கள் வெகுவாக விரும்புகிறார்கள்.

தேசிய வளர்ச்சித் திட்டத்துக்குப் பிறகு

தேசிய வளர்ச்சித் திட்டம் வெற்றிகரமாக, இந்தியா வெங்கும் நிறைவேறியபின், எல்லா கிராமங்களிலும் நல்ல ரஸ்தாக்கள், பள்ளிகள், மருத்துவ விடுதிகள் போன்ற மக்களுக்கான வசதிகள் பல ஏற்பட்டுவிடும். இவ்வாறாக பழையன கழிதலும், புதியன புகுந்தும் க்ஷேம நல அரசாங்கம் உருவாகிவரும்.

ஆகவே, "ஒவ்வொரு பிரஜையும், இந்தியாவின் எதிர்காலத்தில், நம்பிக்கை வைக்கலாம். இந்திய கிராமங்களில் ஐந்திலொரு பாகத்தில் நிறைவேறிவரும் சமுதாய அபிவிருத்தித் திட்டங்களுக்கும், எஸ்.கே.டே என்ற 'பைத்தியக்காரருக்கும்' நெருங்கிய தொடர்பு உண்டு. இம்மாதிரியான 'பைத்தியக்காரர்கள்' பலரை, இந்தியா பெற்றிருந்தால், நானும் இந்தியாவின் எதிர்காலம் பற்றி பூரண நம்பிக்கை கொள்வேன்" என்று "நியு ஸ்டேட்ஸ்மேன் அண்டு நேஷன்" ஆசிரியர் ஸ்ரீ கிங்ஸ்லி மார்ட்டின் கூறியிருக்கிறார்.

இருபது ஆண்டுகளில் இணையற்ற அபிவிருத்தி

தாழ்த்தப்பட்டோர் சமுதாயம், தழைக்கச் செய்கின்ற திட்டம்

(ஸ்ரீ. ஜி. ஈ. முத்திருளாண்டி, ஐ.ஏ.எஸ்., ஹரிஜன நல இலாகா டைரக்டர்)

" நீங்கள் தாழ்ந்த ஜாதியினர்—தொடத்தகாதவர். இந்த தெரு வழி நீங்கள் செல்லக்கூடாது. இந்த இடத்துக்கு வரக்கூடாது—இங்கு தண்ணீர் எடுக்கலாகாது—இந்த தெய்வம் உங்கள் வழிபாட்டுக்குகந்ததல்ல—இதை நீங்கள் பார்த்தாலே எல்லாம் பாழாகிவிடும் ", என்று சொல்லிய காலம் அது. பல நூற்றுண்டுகளாய்ப் பரவிவந்த கோலம். அவர்களும் அறியாமையிற் சிக்குண்டு கிடந்தனர். மேல் ஜாதியினர், கீழ் ஜாதியினர் என்ற வித்தியாசம் இருப்பதாகவே எண்ணினுர்கள். பிறவியிலேயே தங்களிடம் ஏதோ குறையிருப்பது உண்மை என நம்பிக்கொண்டிருந்தனர்—எனவே மேல் ஜாதியினர் ஆதிக்கம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்ததில் ஆச்சரியமில்லை.

எங்கிருந்தோ, எப்படியோ, ஒரு புரட்சிப்பொறி தெறித்து விட்டது. எல்லோரும், ஓர் இனம், யாவரும் ஒரு குலம் என்ற உணர்ச்சி எங்கும் பரவத் தொடங்கியது. காக்கை குருவி எங்கள் ஜாதி என்ற கீதம் ஒருபுறத்திலிருந்து காற்றில் மிதந்து ஒலிக்கலாயிற்று. இந் நிலையில் மனிதனுக்கு மனிதன் அடிமையாயிருக்க முடியாது, அதை அனுமதிக்க மாட்டோமென்று சில தலைவர்கள் அறைகூவி எழுந்தனர். சமத்துவ உரிமை கோரும் இக்காலத்தில் மனிதரில் ஒரு வகுப்பினரைத் தீண்டாதாரென ஒதுக்கி வைக்கும் தீமையைக் கண்டு யார்தான் சகிப்பர். அதிலும் பாரத மக்களின் படு துயர் போக்கப் பாரெங்கும் சென்று போராடி நின்ற உத்தமர் மகாத்மா காந்தியா உள் நாட்டிலேயே இந்த சமூகக் கொடுமையைப் பார்த்து வாளா இருப்பார் ? இந்த தீண்டாமைப் பழக்கத்தால் நாட்டுக்கே ஏற்பட்டிருக்கும் இழிவைப் பெரிதுங் கண்டித்து உடனடியாக அதை ஒழிக்க வேண்டுமென உறுதி கொண்டார். அவ்வித பரிதாப நிலைமைக்குள்ளாயிருந்த பிரிவினரை ஹரிஜனங்களெனப் பெயரிட்டு அழைத்தார். அவர்கள் மத்தியிலேயே தாம் சதா வாழ்வதென ஒரு கொள்கையையும் கடைப்பிடித்தார். ஹரிஜனங்களின் வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்துவதற்கான முறைகளை எல்லாத் துறைகளிலும் புகுத்த அவர் முற்பட்டார். தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தலைவர்களும் முன் வந்தனர். அப்பொழுதிருந்த அரசாங்கமும் ஓரளவுக்கு அசைந்து கொடுத்தது. ஆயினும் ஹரிஜனங்களுக்குப் பெயரளவுக்குத் தான் ஏதோ சில நன்மைகள் செய்ய முடிந்தது.

1937-ம் ஆண்டில் காந்தியக் கொள்கைகளை லட்சியமாய்க் கொண்ட காங்கிரஸ் ஆட்சி நாட்டில் ஏற்பட்டதும் காந்திஜியின் ஆதரவையும் அபிமானத்தையும் பெற்ற ஹரிஜன முன்னேற்றத்தில் அரசினர் உடனே கவனம் செலுத்த வாரம்பித்தனர். தீண்டாமையை ஒழிக்க அவர்கள் சட்டங்களை நிறைவேற்றினர். ஹரிஜன ஆலயப் பிரவேச அனுமதி சட்டம், சமூக உரிமை தடைகள் நீக்கச் சட்டம் முதலியன வகுக்கப்பட்டன. இந்தச் சட்டங்களைச் சரிவர அமல் நடத்துவதும் மற்றும் ஹரிஜனங்கள் முன்னேற்றமடைவதற்கு வேண்டிய பல சலுகைகளை அவர்களுக்கு வழங்குவதுமான நடவடிக்கைகளை 1946-ம் வருஷத்திலிருந்து மக்கள் சர்க்கார் மேற்கொண்டனர்.

தீண்டாமை ஒழிப்புக்கான சட்டங்களை இயற்றிவிட்டால் மட்டும் போதாது. பொது மக்களின் மனப்பான்மை மாறினுல் தான் சட்ட அமல் வெற்றி பெறும் என்று அறிந்த அரசினர் அதற்குத் தக்கபடி ஹரிஜனங்களை கல்வித் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் முன்னேற்றமடையச் செய்ய முற்பட்டனர். ஹரிஜனங்களின் க்ஷேம நலனுக்கென்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி அதை அவர்களுடைய கல்வி அபிவிருத்தி, வீட்டு வசதி, குடி தண்ணீர் விநியோகம், விவசாயத்துக்கு நிலம் வழங்கல் முதலிய காரியங்களுக்கு உபயோகிக்கும்படி அரசினர் உத்தரவிட்டனர். அதன்பிறகு ஹரிஜன நலனைப் பிரத்தியேகமாகக் கவனிக்கவென்று அதற்காக ஒரு தனி இலாகாவை 1949 ஏப்ரலில் நிறுவினர். அது முதல் இன்றுவரை ஹரிஜன நல இலாகாவினர் ஹரிஜனங்களுக்கும் மற்றும் பின் தங்கிய வகுப்பினருக்கும் பல்வேறு சலுகைகள் அளித்து அவர்களுடைய முன்னேற்றத்திற்கு வேண்டுவன செய்து வருகின்றனர்.

ஹரிஜன மக்களுக்கு பிரத்தியேக கல்விச் சாலைகளை அமைக்க முற்பட்டனர். ஆண்டுதோறும் அப்படிப்பட்ட பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்து 1955 மார்ச்சில் 908 ஆரம்பப் பள்ளிகளும், 8 உயர்தர ஆரம்ப பாடசாலைகளும், 2 உயர்நிலை பள்ளிக்கூடங்களும், ஹரிஜன குழந்தைகளுக்குக் கல்வி போதிக்க ஏற்பட்டன. 1954-ம் வருஷத்தில் ஹரிஜனக் கல்விக்காக 45 லட்சம் ரூபாயும், பள்ளிகளின் பகல் போஜன வகைக்காக 17 லட்சம் ரூபாயும் செலவழிக்கப்பட்டது. மொத்தத்தில் பின் தங்கிய வகுப்பினருக்கு இதர பள்ளிகளில் சம்பளச் சலுகைகளும், ஹாஸ்டல் வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. லட்சக்கணக்கான பணம் இவ்வகையில் செலவு செய்யப்படுகிறது. சென்ற வருஷத்தில் சர்க்கார் நடத்தும் ஹரிஜன ஹாஸ்டல்கள் 23-ம் சர்க்கார் உதவியுடன் தனி நபர்கள் நடத்தும் ஹாஸ்டல்கள் 207-ம் 5,817 ஹரிஜன மாணவர்களுக்கும், 976 இதர பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கும் வசதியளித்துள்ளன. உயர்நிலைப் பள்ளி மாணவர் பலருக்குப் புத்தகங்கள் வாங்கவும் பள்ளிக்கூட விசேஷ கட்டணங்களுக்கும்

உபகாரஞ் செய்யப்படுகிறது. கல்லூரி மாணவர் நூற்றுக் கணக்கானவர்களுக்கு, ஹாஸ்டல் வசதியுடன் கூடியதும் ஹாஸ்டல் வசதி இல்லாததுமான உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப்படுகின்றன. சென்ற ஆண்டில் இவ்வித உபகாரச் சம்பளவகையில் ஹரிஜன மாணவர்களுக்கு 8,60,000 ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு பின்தங்கிய வகுப்பினர்களுக்குப் பல வகையிலும் கல்விச் சலுகைகள் கொடுக்கப்பட்டதின் காரணமாக முன் நாளைப் போலல்லாமல் இப்பொழுது அவர்களில் பலர் அரசாங்க சேவையில் உயர்ந்த பதவி வகிக்கின்றனர். சாதாரண உத்தியோகங்களிலும் பலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஹரிஜன மக்களுக்குக் குடியிருப்பு வசதிகள், குடி தண்ணீர் வசதிகள், சுகாதார ஏற்பாடுகள் எல்லாம் செய்து கொடுக்கப்படுகின்றன. வீடுகள் கட்ட மனைகள் வழங்குவதுடன் பண உதவியும் செய்யப்படுகிறது. வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டமும் கவனிக்கப்படுகிறது. 1954-ம் வருஷம் வரை 41,644 மனை நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஹரிஜனங்களுக்குக் குடி தண்ணீர் வசதி ஏற்படுத்துவதற்காக நம் அரசினர் 1954-ல் 45 லட்ச ரூபாய் ஒதுக்கி 1955 மார்ச்சுக்குள் குறைந்தது 1,000 கிணறுகள் கட்டி முடிக்க வேண்டுமென உத்தரவிட்டனர். அவ்விதமே செய்து முடிக்கப்பட்டது. இன்னும் 2 அல்லது 3 ஆண்டுகளுக்குள் எல்லா ஹரிஜனங்களுக்கும் குடி தண்ணீர் வசதி ஏற்பட்டு விடுமென்பதில் சந்தேகம் கிடையாது.

தீண்டாமை என்னும் கொடிய நோயை நம் நாட்டினின்றும் துரத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் வெற்றிகரமாகவே நிறைவேறிவருகின்றன. பெருமளவுக்கு தீண்டாமை அகன்றுள்ளது என்று சொல்லலாம். சமீபத்தில் மத்திய சர்க்கார் வகுத்துள்ள ஒரு சட்டம், தீண்டாமை அனுஷ்டித்தலை ஒரு பெருங் குற்றமாகக் கொள்கிறது. இதன்மூலம் கணிசமான முன்னேற்றம் எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் சில ஆண்டுகளில் தீண்டாமை என்ற பேச்சுக்கே இடமிருக்காது என்றால் அது மிகையாகாது.

எனவே, வாழ்வில் நசுக்கப்பட்டு வந்த மக்களின் முன்னேற்றத்திற்காக கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்படுவதோடு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல கோடி ரூபாய் செலவில் க்ஷேமநலத் திட்டங்களும் உருவாகின்றன. இருபது ஆண்டுகளுக்கு முன் ஹரிஜன நலனுக்குச் சில ஆயிரம் ரூபாய்களே பெயரளவுக்குச் செலவு செய்யப்பட்டன. இன்று அவர்களுடைய உண்மையான முன்னேற்றங் காண லட்சக்கணக்கில், கோடிக் கணக்கில் செலவு செய்யப்படுகிறது. சென்ற ஆண்டில் 98 லட்சம் செலவானது. நடை முறை வருஷத்திற்கு 109 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் நம்மிடையே ஏற்றத் தாழ்வின்றி எல்லோரும் சரிநிகர் சமமாக வாழ நாம் எல்லோரும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டும்.

கிராமிய சங்கீத வளர்ச்சி

தேசத்தின் சகல பகுதிகளிலும் வழக்கில் உள்ள கிராமிய சங்கீதத்தை ஒலிப்பதிவு செய்து பராமரிப்பதற்கும், அவைகளை அப்பட்டமான நிலையில் மக்கள் கேட்டு ரசிப்பதற்கு வழிசெய்வதற்குமான விசேஷ ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று டில்லியில், 1955-ம் ஆண்டு நவம்பர் 9-ஆம் நாள் நடந்த செய்தி-ஒலிபரப்பு இலாகா மத்திய சங்கீத ஆலோசனை போர்டு முடிவு செய்தது.

இது சம்பந்தமாய் அகில இந்திய ரேடியோ சமர்ப்பித்துள்ள யோசனைகளை விளக்கி, கூட்டத்துக்குத் தலைமை வகித்த செய்தி-ஒலிபரப்பு மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர் பேசுகையில், நிபுணர்களின் மேற்பார்வையில் கிராமாந்தரங்களில் கிராமிய சங்கீதத்தை ஒலிப்பதிவு செய்வதால், கிராமியக் கலையில் புது ஆர்வம் உண்டாகும் என்பதுடன், தேசத்தின் ஒரு பகுதியிலுள்ள கிராமிய சங்கீதத்தை மற்றொரு பகுதியிலுள்ளவர்கள் கேட்டு ரசிப்பதற்கும் வழியேற்படும் என்று கூறினார்.

* * * * *

சிதம்பரம் வட்டாரத்தில்

சிதம்பரம் சமுதாய நலத்திட்ட வட்டாரத்தில், 1955-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில், 9 குடி தண்ணீர் கிணறுகள் தோண்டப்பட்டன. 4 சிறு பாலங்களும், ஒரு ரஸ்தாவும் அமைக்கப்பட்டன.

ரேடியோ நிலைய ஏற்பாடுகள்

கிராமிய சங்கீதத்தை இயற்கையான சூழ்நிலையில் பதிவு செய்து பாதுகாப்பதற்கும் ஒலிபரப்புவதற்குமாக அகில இந்திய ரேடியோ ஸ்தாபனத்தில் கிராமிய சங்கீதப் பிரிவுகள் தனிப்பட ஏற்படுத்தப்படும். உடனடியாக நான்கு பிரிவுகள் ஏற்படுத்தப்படுகின்றன. விசேஷ நிகழ்ச்சித் திட்ட சிப்பந்திகளும், எஞ்சினியரிங் சிப்பந்திகளும் நியமிக்கப்படுவார்கள். ஐந்தாண்டுத் திட்டப் பிரசாரப் பிரிவுகளின் உதவியும் இதற்குப் பயன்படுத்திக் கொள்ளப்படும். ராஜ்ய சர்க்கார்களின் கிராம அபிவிருத்தி ஸ்தாபனங்கள், பொதுஜனத் தொடர்பு ஸ்தாபனங்கள் ஆகியவைகளின் சேவைகளும் இதற்கு உதவியாக இருக்கும்.

கிராமிய சங்கீதம் பதிவுசெய்யப்படும்போது உண்மையிலேயே அது அப்பட்டமான கிராமிய சங்கீதமாயிருக்கும்படி பார்த்துக்கொள்வதன் அவசியத்தை போர்ட் வலியுறுத்தியது.

"ஆப்ரா" இசை நாடகங்களைத் தயாரிப்பது விஷயத்தில் அகில இந்திய ரேடியோவின் முயற்சி திருப்திகரமாக நடந்துவருவதாகவும் மேலும் அம் முயற்சி நடத்தப்பட வேண்டும் என்றும் போர்ட் கருதியது.

பயிர்கள் அபிவிருத்திக்கு சர்வதேச ஒத்துழைப்பு

உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் சேவை

(டாக்டர் பி. பி. பால், இந்திய விவசாய ஆராய்ச்சி நிலைய டைரெக்டர்)

உலக நாடுகள் இப்போது பல விஷயங்களிலும் கூட்டுறவு கொண்டு ஒத்துழைத்து மக்களின் நல்வாழ்வுக்கு வழி செய்யத் தொடங்கிவிட்டன. சர்வதேச கூட்டுறவின் பலனை இந்தியா உட்படப் பல நாடுகளிலும் நாம் காண்கிறோம். பெரிய தொழிற்சாலைகள், ஜல-மின்சார நிலையங்கள், ரயில்வே உற்பத்திசாலைகள் முதலியவை இந்தியாவில் இப்படி ஏற்பட்டுவருகின்றன.

உயர் ரக விதை ஆராய்ச்சி

உயர் ரக விதைகளைத் தெரிந்தெடுப்பது சுலபமான வேலையல்ல. பற்பல ரகங்களின் வரலாற்றையும் முறையாகத் தெரிந்த விஞ்ஞான நிபுணர் வெகுகாலம் சிரமப்பட்டு ஆராய்ச்சி செய்தால்தான் மிக நல்ல ரக விதையைக் கண்டுபிடிக்கமுடியும். இதற்கு அவர் பல தேசங்களிலும் விளைகிற பயிர்வகைகளை ஆராயவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு அதிக ரகங்களை அவர் ஆராய்கிறாரோ அவ்வளவுக்கவ்வளவு சிறந்த ரகம் கடைசியில் கிடைக்கும். இத்தகைய ஆராய்ச்சி உலகம் முழுவதிலும் நடந்து வருகிறது. அதனால் நல்ல பலனும் கிடைத்திருக்கிறது. தரம், தன்மை, பண்பு, நோயை எதிர்த்து நிற்கும் வலிமை மாசூல் அளவுப் பெருக்கம் ஆகிய குணங்கள் நிறைந்த விதை ரகங்களைக் கண்டுபிடிப்பது இந்த ஆராய்ச்சிமூலம் சாத்தியமாயிருக்கிறது. ஒரு தேசத்தின் சிறந்த ரகம் மற்றொரு தேசத்துக்குக் கிடைக்க வழியேற்படுகிறது. உதாரணமாக, இந்தியாவில் உருளைக்கிழங்கு, தக்காளி, புகையிலை, நீண்ட இழைப் பருத்தி முதலியவை வெளிநாடுகளிலிருந்து கிடைத்தவைதான். சமீபகாலத்தில், எகிப்திலிருந்து '' பெர்சீம் '' என்னும் தீவன ரகப்பயிர், ஆஸ்திரேலியாவிலிருந்து '' ரிட்லி '' கோதுமை ரகம், அமெரிக்காவிலிருந்து '' ஸியோ '' தக்காளி ரகம், சீனாவிலிருந்து '' எப்.எ. 17 '' சர்க்கரை வள்ளிக்கிழங்கு ரகம் ஆகியவை இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

இந்தியாவிலிருந்தும் இதேபோல் பல பயிர் ரகங்கள் வெளிநாடுகளுக்குப் போயிருக்கின்றன. உதாரணமாக '' நியூ பூசா-4 '' ரக கோதுமை ஆஸ்திரேலியாவிலும், கோயம்புத்தூர் ரகக் கரும்பு பல நாடுகளிலும் உபயோகப் படுகின்றன.

பயிர் வளர்ப்பு

எனவே பல ஜாதிப் பயிர்களையும் வளர்த்துப் பரீட்சித்துப் பார்ப்பவர்கள் நம் நாட்டில் மாத்திரமன்றி, உலகத்தின் சகல நாடுகளிலிருந்தும் பயிர்வகைகள் சம்பந்தமான தகவல்களைச் சேகரித்து முறையாக ஆராய்ந்து, தராதரங்களை நிர்ணயிக்கவேண்டியிருக்கிறது. அப்படிச் செய்தால்தான் தேவைக்கேற்றபடி, அதிக மாசூல் தரும் ரகங்களையும், வியாதிகளை நன்றாக எதிர்ப்பதற்கும் வலிமையுள்ள ரகங்களையும் மற்ற ரகங்களையும் தெரிந்தெடுத்து உயர் ரக விதைகளைப் பெருக்கமுடியும். இந்த ரீதியில் தகவல் சேகரித்துவருவது தனிப்பட்ட ஒருவரால் செய்யக்கூடிய காரியமல்ல.

உலக உணவு-விவசாய ஸ்தாபனம் இந்தத் துறையில் சர்வதேச கூட்டுறவு வளர வழிசெய்திருக்கிறது. உலகம் முழுவதிலும் உள்ள சகல பேர்களுக்கும் தகவல்கள் கிடைக்கக்கூடியபடி மத்திய தகவல் சேகரிப்பு நிலையத்தை ஏற்படுத்தவேண்டுமென்று 1948-ல் அந்த ஸ்தாபனம் முடிவுசெய்தது. முதலில் முக்கிய தானியங்களான அரிசி, கோதுமை ஆகிய இரண்டு சம்பந்தமாகவும், கால்நடைகள் சம்பந்தமாகவும் மத்திய தகவல்களைத் தொகுத்து அட்டவணை தயாரிக்கும் வேலையில் அது ஈடுபட்டது. இதற்கு உலக நாடுகளில் ஒத்துழைப்பும் நாடப்பட்டது. இந்தியாவும் ஒத்துழைக்க முன்வந்தது. புது டில்லியில் உள்ள இந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம் கோதுமை விஷயத்திலும், கட்டாக்கிலுள்ள மத்திய அரிசி ஆராய்ச்சி நிலையம் அரிசி விஷயத்திலும் ஒத்துழைத்து வருகின்றன. பல்வேறு கோதுமை ரகங்கள், அரிசி ரகங்கள் ஆகியவை சம்பந்தமான தகவல்கள் சேகரிக்கப்பட்டு, முறையாக அட்டவணை செய்யப்படுகின்றன. இத்தகவல்களையும், இதர நாடுகள் இதுபோல் சேகரித்துத் தருகிற தகவல்களையும் உலக உணவு-விவசாய ஸ்தாபனம் வரிசைமுறையாகப் பிரசுரித்து வருகிறது. அந்த அட்டவணையிலிருந்து, குறிப்பிட்ட ஏதாவது ஒரு ரகம் தமக்கு ஏற்றதாக இருக்குமென்று யாராவது நினைத்தால், அவர் அந்த ரகம் பற்றிய முழு விவரங்களையும் உலக உணவு-விவசாய ஸ்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஏற்கெனவே வெளிநாட்டார் பலர் இந்தியத் தகவல் அட்டவணைகள் தங்களுக்கு மிகவும் உபயோகமாக இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

உலக உணவு-விவசாய ஸ்தாபனத்தின் இந்தப் பணி மிகவும் விஸ்தாரமானதும், வியாபகம் மிக்கதுமான பணியாகும். எதிர்காலத்தில் இன்னும் இதர பயிர் ரகங்கள், கால் நடைகள் ஆகியவை சம்பந்தமாய் இந்த ஸ்தாபனம் இத்தகைய சேவை செய்வதற்கு வசதியான சர்வதேச ஒத்துழைப்பு அதிகரித்துவரும் என்று நம்பலாம்.

சர்வதேச ஒத்துழைப்பால் சர்வ ஜன சுபிட்சம்

உலக உணவு-விவசாய ஸ்தாபனத்தின் 10 வருஷ சாதனைகள்

யூனியன் விவசாய மந்திரி டாக்டர் பஞ்சாப் ராவ் தேஷ்முக் டில்லி ரேடியோ நிலையத்திலிருந்து அக்டோபர்மீ 16 உ நிகழ்த்திய பிரசங்கத்தின் சுருக்கம் கீழே தரப்படுகிறது

இன்றைக்குப் பத்து வருஷங்களுக்கு முன் (1945-ம் ஸு அக்டோபர்மீ 16உ) உலக உணவு-விவசாய ஸ்தாபனம் உருவெடுத்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஒரு நிரந்தர உறுப்பாகத் தோன்றிய அந்த ஸ்தாபனம் உலக மக்கள் பட்டினியால் பாதிக்கப்படாமல் உணவுப் பிரச்னையைப் பைசல் செய்வதற்காக உலக நாடுகளின் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு கருவியாக ஆரம்பிக்கப்பட்டது. அது உலக நாடுகள் சுயேச்சையாய்ச் சேர்ந்து, ஒத்துழைப்பதற்கான ஒரு ஸ்தாபனம். முதலில் 42 அங்கத்தினர்கள் அதில் சேர்ந்தார்கள். இப்போது 70-க்கும் மேற்பட்ட அங்கத்தினர்கள் அதில் இருக்கிறார்கள்.

பொருளாதார சமநிலை இல்லை

உலகத்தில் 16 சதவிகித ஜனத் தொகையுள்ள 19 நாடுகளில் மொத்த உலக வருமானத்தின் 70 சதவிகித வருமானம் கிடைக்கிறது. அதற்கு மாறாக, உலக ஜனத் தொகையில் 50 சதவிகிதத்துக்கும் அதிகமுள்ள 15 நாடுகளில் உலக வருமானத்தில் 10 சத விகிதத்துக்கும் குறைவான வருமானம்தான் கிடைக்கிறது. நேர்பாதி ஜனங்கள் இவ்வாறு வறுமையில் நீடித்திருக்கும்போது உலகில் உண்மையான சுபிட்சம் எப்படி ஏற்படும்? இவ்வாறு பெருவாரி ஏற்றத்தாழ்வு இருக்கக் காரணம் என்ன? உற்பத்தி சக்தியிலுள்ள தாரதம்மியம்தான் காரணம். தொழில் நுட்ப ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பின்னடைந்த நாடுகளில் உற்பத்தி சக்தியும் குறைந்திருக்கிறது. நல்ல, திறமையான விவசாய வேலை முறைகளை அந்நாடுகள் எந்த அளவுக்கு அதிகமாகக் கொண்டுவர முடியும் என்பதைப் பொறுத்தே அவைகளின் உற்பத்தி சக்தியும் அமையமுடியும்.

பிற நாடுகளில் ஏற்பட்டுள்ள விவசாய வேலைமுறை முற்போக்கு பற்றி பின்னடைந்த நாடுகளுக்குத் தகவல் தெரியும்படி செய்வது உலக உணவு-விவசாய ஸ்தாபனத்தின் ஒரு முக்கிய நோக்கமாகும். அந்த ஸ்தாபனத்தில் விவசாயத்தின் ஒவ்வொரு பிரிவு சம்பந்தமாகவும் நிபுணத்துவமுள்ள நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தேவையுள்ள நாடுகளுக்கு அனுப்பிவைக்கப் படுகிறார்கள். அது ஆராய்ச்சி மகாநாடுகளையும், தொழில் நுட்ப மகாநாடுகளையும் கூட்டி பல்வேறு தேச நிபுணர்கள் தங்களுக்குத் தெரிந்த விஷயங்களைப் பரஸ்பரம் தெரிவித்துக்கொள்வதற்கு வசதி செய்கிறது. பல்வேறு துறை நூல்களையும் சஞ்சிகைகளையும் பிரசுரிப்பதற்கான பிரசார பிரிவு ஒன்றையும் அது ஏற்படுத்தியிருக்கிறது.

சர்வதேச அரிசிக் கமிஷன்

ஆரம்பத்தில் அந்த ஸ்தாபனம் கோதுமை விஷயமாய்த்தான் அதிக கவனம் செலுத்தியது. ஆனால் உலக மக்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் அரிசியைத்தான் முக்கிய ஆகாரப் பொருளாகக் கொண்டுள்ளனர். இந்தியா, தென்கிழக்காசியா, சீனா ஆகிய நாடுகளில் உள்ள மக்களுக்கு தினசரி ஆகாரப் பொருள் அரிசிச் சாதம்தான். உலகத்தில் நெல் சாகுபடியாகிற மொத்தப் பிரதேசத்தில் சுமார் மூன்றிலிரண்டு பங்கு இந்தியா, சீனா ஆகிய நாடுகளில்தான் இருக்கிறது. அதேபோல் உலக அரிசி உற்பத்தியில் 90 சதவிகிதம் ஆசியாவின் கீழ்ப் பகுதியில்தான் உற்பத்தியாகிறது.

அரிசி இவ்வாறு முக்கிய உணவுப் பொருளாக இருப்பதால், இந்திய சர்க்காரின் வேண்டுகோளின்பேரில், 1947-ல் அந்த ஸ்தாபனம் அரிசி ஆராய்ச்சிக் குழு ஒன்றை ஏற்படுத்தியது. அதன் பலனாய் பிறகு 1948-ல் பாங்காக்கைத் தலைநகராகக்கொண்ட சர்வதேச அரிசிக் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. அக் கமிஷனின் முதல் முயற்சியாக, கட்டாக்கிலுள்ள மத்திய அரிசி ஆராய்ச்சி நிலையத்தில் கலப்பு அரிசி உற்பத்தித் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. "ஜப்பானிகா", "இண்டிகா" ஆகிய இரு ரகங்களையும் கலந்து ஒரு புதிய ரகம் தயாரிக்க முயற்சி செய்யப்படுகிறது.

ஆசிய கீழ்க்கோடி நாடுகளுக்காக மீன்துறைக் கௌன்சில் ஒன்றையும் அந்த ஸ்தாபனம் ஏற்படுத்தியிருக்கிறது. இப் பிரதேசத்திலுள்ள கடல் மீன் வளத்தை அபிவிருத்தி செய்வதற்கு வழி செய்வதுதான் அதன் நோக்கம். சர்வதேசக் கூட்டுறவு மூலம் தேசியத் தேவைகள் பற்றி கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு உதாரணங்களாக இந்த இரு நிலையங்களையும் குறிப்பிடலாம்.

1950-ல் தொழில் நுட்ப உதவித் திட்டம்

1950-ல் உலக உணவு-விவசாய ஸ்தாபனம் தொழில் நுட்ப உதவித் திட்டத்தை ஆரம்பித்தது. சர்வதேச அரங்கத்தில் ஒரு நாடு மற்றொரு நாட்டிற்குத் தனிப்பட்ட முறையில் உதவி செய்வதைவிட, சர்வதேச ஸ்தாபனம் மூலமாக உதவி செய்வது மிகவும் யுக்தமாக இருக்கும்; எனவே, தனக்குள்ள முக்கிய பொறுப்பை இந்த ஸ்தாபனம் உணர்ந்து அதற்கேற்றபடி செயலாற்றியது.

1951-ல் இந்தியாவில் 5 திட்டங்கள் இத்தகைய கூட்டுறவு மூலம் மேற்கொள்ளப்பட்டன. இதுவரையில் அதன்

உதவி 50-க்கு மேற்பட்ட திட்டங்களுக்குக் கிடைத்து விட்டது. மீன்வளம், காடுவளர்ப்பு, உணவு பக்குவமுறை, கால்நடை அபிவிருத்தி ஆகிய பல துறைகள் சம்பந்த மாகவும் நிபுணர்களையும் சாதன வசதிகளையும் அது அளித்திருக்கிறது. சர்வதேச ஸ்தாபனம் மூலம் உதவி யளிப்பதில் மற்றொரு அனுகூலமும் இருக்கிறது. அது உலகத்தின் எந்த நாட்டிலிருந்தும் சாதனங்களையும் நிபுணர்களையும் வரவழைத்து எந்த நாட்டுக்கும் அனுப்பி வைக்கலாம்.

இந்தியா அந்த ஸ்தாபனம் மூலமாய் உதவி பெற்றிருப் பது போலவே, அந்த ஸ்தாபனம் மூலமாய் இதர நாடு களுக்கு உதவியும் அளித்திருக்கிறது. அது தன் நிபுணர் களின் சேவையைப் பல நாடுகளுக்கும் வழங்கியிருக்கிறது.

வெள்ளம், பூகம்பம் முதலிய இயற்கை அனர்த்தங்கள் காரணமாகப் பஞ்சங்கள் ஏற்படும். ஆசியாவில் இத்தகைய அனர்த்தங்கள் அதிகம். இந்தியாவும் அடிக்கடி இத் தகைய கஷ்டங்களுக்கு ஆளாகிவருகிறது. உலக உணவு-விவசாய ஸ்தாபனம் இத்தகைய சம்பவங்களை ஜாக்கிரதை யாகக் கவனித்து வந்து, ஒரு தேசத்தின் நிலைமை மிகவும் மோசமடைந்தால் இதர நாடுகளுக்கு எச்சரிக்கை செய்து சர்வதேச உதவி கிடைக்கும்படி செய்கிறது.

விளைபொருள் விற்பனைக்கு உதவி

உற்பத்தியாளர்கள் தங்கள் பொருள்களை விற்றுத்தான் தங்களுக்குத் தேவையான இதர பொருள்களை வாங்க முடியும். சர்வதேச அரங்கிலும் அதேபோல் உற்பத்தி நாடுகள் தங்கள் விளைபொருள்களை இதர நாடுகளுக்கு விற்கவேண்டும். இதற்கு வேண்டிய வர்த்தக வசதிகள் அதிகரிக்கவேண்டும். வர்த்தகத் தடைகள் ஏற்பட வேண்டும். இத்துறையிலும் உலக உணவு-விவசாய ஸ்தாபனம் உதவி செய்துவருகிறது. வர்த்தகத் தகவல் களை அது சகல நாடுகளுக்கும் அறிவித்துவருவதுடன், வர்த்தகத்துக்குத் தடையான அம்சங்களை அகற்றுவ தற்கும் அது பாடுபட்டுவருகிறது. அந்த ஸ்தாபனம் ஏற்பட்ட சமயத்தில் பல நாடுகளிலும் பல பொருள்கள் பற்றாக்குறையாக இருந்தன. ஆனால், இப்போது, பல மேனாடுகளில் உணவுப்பொருள்கள் ஏராளமாய் உற்பத்தி யாகி யிருக்கின்றன. பல கீழ் நாடுகளில் அவை தேவை யாக இருக்கின்றன. பொதுப்படப் பார்த்தால் இன்னும் உற்பத்தி வேகம் போதிய அளவில் இல்லை என்றே கூறவேண்டும். சமீப காலத்தில் இந்த ஸ்தாபனம் இது சம்பந்தமாகக் கவனம் செலுத்தி, குறிப்பிட்ட பொருள் களைத் தெரிந்தெடுத்து அதிகமாய் உற்பத்தி செய்யும் படியும், உபயோகத்தை அதிகப்படுத்தும்படியும் செய்ய முயன்று வருகிறது.

இந்தியாவில் அந்த ஸ்தாபனம் மற்றொரு முன்னோட்டத் திட்டத்தையும் நடத்தியிருக்கிறது. பின் னடைந்த நாடுகளில் பொருளாதார அபிவிருத்தியைப் பெருக்குவதற்கு உபரி விளைபொருள்களை உபயோகிப்பது பற்றி ஆராயப்பட்டது. இந்த ஆராய்ச்சி உலக கவனத் தைக் கவர்ந்திருக்கிறது

போஷணைத் தரத்தை அபிவிருத்தி செய்வது சம்பந்த மாக இந்த ஸ்தாபனத்தில் இன்னும் அதிகமாக எதுவும் செய்ய இயலவில்லை. மேனாடுகளில்கூட இத்துறைபற்றி சமீபத்தில்தான் கவனம் செலுத்தப்பட்டுவருகிறது. பின்னடைந்த நாடுகளில் இதுபற்றிச் சரிவர அறிவு விளக்கம் ஏற்படவில்லை.

உலக உணவு-விவசாய ஸ்தாபனத்தின் வேலை மிகவும் சிரமமான, ஆனால் உன்னதமான பணியாகும். உற்பத்தியைப் பெருக்கி உணவுப்பொருள்களைக் குவித்து விடுவது மாத்திரம் அதன் நோக்கமல்ல. உலக மக்கள் தங்கள் அத்தியாவசிய தேவைப்பொருள்களைப் பெற்று அனுபவிப்பதற்கு வழி செய்யும் உயர்ந்த கடமையைத் தான் அது நிறைவேற்ற முயற்சிக்கிறது. தேசீய ரீதியில் பைசலாகாத பிரச்னைகளை சர்வதேச ரீதியில் பைசல் செய்து விடுவதற்கு அது உதவி செய்கிறது.

அணு சக்தி சகாப்தம்

அணு சக்தி சகாப்தம் ஆரம்பித்துவிட்டது. உலக மக்களின் நல்வாழ்வுக்கு அணு சக்தியைப் பயன்படுத்து வதற்கான முறைகள் பற்றி அது அடுத்த மகாநாட்டில் பரிசீலிக்கும். விவசாயம், உணவுற்பத்தி ஆகிய துறை களில் அணுசக்தி பயன்படுவதற்கு வசதியாக ஆராய்ச்சித் தகவல்களை அங்க நாடுகளுக்கு அது தெரிவித்துவர வழி காணும். உலக சரித்திரத்தின் முக்கியமான இந்தக் கட்டத்தில் இந்த ஸ்தாபனம் தன் கடமையை நன்கு நிறை வேற்றும் என்று நம்புவோமாக. பசி, பட்டினி, வறுமை ஆகியவைகளை அழித்தொழிக்கப் பாடுபடுவதே அதன் நோக்கம். மக்களின் சந்தோஷ வாழ்க்கைக்கு வழி செய் வதே அதன் லட்சியம். அவை நிறைவேற அது பாடுபட வேண்டும். 1948-முதல் எனக்கு அந்த ஸ்தாபனத்துடன் தொடர்பிருக்கிறது. இதுநாள் வரையில் அது சாதித் துள்ளவற்றை கவனித்ததில் அதன் எதிர்காலம் மிகவும் நன்றாக இருக்கு மென்ற நம்பிக்கை எனக்கு ஏற்படுகிறது.

உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் (எப். ஏ. ஓ.) கூட்டுறவுடன் இந்தியா சென்ற மூன்று வருஷத்தில் தன் உணவுப்பிரச்னையை வெற்றிகரமாகச் சமாளித்திருக்கிறது. உற்பத்திகள் பெருகியுள்ளன; உணவுக்கட்டுப்பாடுகள் எடுபட்டுவிட்டன.

ஆனால், இது விஷயத்தில் நாம் திருப்திப்பட்டுப் பேசா மலிருந்துவிடக்கூடாது. சமீபத்தில், இந்தியாவின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஏற்பட்ட பெரு வெள்ளம் நமக்கு ஒரு எச்சரிக்கை அறிகுறியாக இருக்கிறது. நம் தீவிர முயற்சியை நாம் தளர்த்துவதற்கே இல்லை என்பதை அது எடுத்துக்காட்டுகிறது. நாம் எல்லாருமே இந்த எச்சரிக்கையை கவனத்தில் வைத்து நம் முயற் சியைத் தளரவிடாது சதா உழைக்கவேண்டும்.

"ஆண் பெண் பாலார் யாவருக்கும் சம சந்தர்ப்பம்"

—பாரதநாட்டு அரசியல் அமைப்புச் சட்டம்.



(1) நம் நாட்டுப் பெண்கள், சர்க்கார் அலுவல்களைக் கவனிப்பதற்கும் . . . (2) பிரசங்க மேடைகளில் சொல்மாரி பொழிவதற்கும் . . . (3) போலீஸ் படையில் சேர்ந்து பணியாற்றுவதற்கும் . . . (4) விமான போட்டிகளில் கலந்துகொள்வதற்கும் . . . (5) துப்பாக்கிச் சுடும் போட்டிப் பந்தயங்களில் பங்கெடுத்துக் கொள்வதற்கும் **தயார்**! (6) . . . ஆனால், கிராமங்களுக்குச் சென்று தொண்டுபுரிய வேண்டுமென்றாலோ . . . "ஹு . . . ஹூம் . . . மாட்டேன்" என்று பின்வாங்குகிறார்கள்.

கிராம சேவிகை உத்தியோக ஸ்தானங்கள் நிறைய காலியாக இருப்பதாகப் பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்தியையொட்டி, நமது சைத்ரீகர், கேலிச் சித்திரங்களாக வரைந்துள்ள படங்கள் இவை.

CONNEMARA P... 24 DEC 1955 MAD

கால் நடைகளின் விருத்தியே கிராமங்களின் உயர்வு

ஸ்ரீ வி. ஆர். ராஜகோபாலன், ஜி. எம். வி. ஸி. (கால்நடை இலாகா டைரக்டர், சென்னை)

[கால் நடைச் செல்வமிகுந்துள்ள நம் நாட்டிலே அச் செல்வத்தைப் பெருக்குவதற்குகந்த அபிவிருத்தி முறைகள் இக் கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. நம் நாட்டின் பொருளாதார சுபிட்சத்துக்கும், விவசாயப்பெருக்கத்துக்கும், கால்நடை மேன்மேலும் வளம் பெறவேண்டியது மிகவும் அவசியம். கால் நடைகளைச் சரிவரப் பராமரிப்பதற்குத் தகுந்த யோசனைகளை, கிராம மக்களுக்கு எடுத்துக்கூற சுமார் 50 கிராமங்களடங்கிய வட்டார மொன்றிற்கு, ஒரு கால்நடை விஸ்தரிப்பாளர் வீதம் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். மேலும், இந்த விஸ்தரிப்பாளர்கள் கிராம மக்களுக்குக் கால்நடை விருத்திக்காக சகலவித உதவிகளையும் புரிவதற்கு எப்போதும் சித்தமாக இருக்கிறார்கள்.

—ஆசிரியர்]

நம் பரந்த பாரத நாடான உடலுக்கு, ஜீவ அணுக்களாக சுமார் 5 லட்சத்திற்கு மேற்பட்ட நம் கிராமங்கள் அமைந்துள்ளன. ஜீவ அணுக்களின் வாழ்வும் வளர்ச்சியுமே உடல் வளர்ச்சிக்கு ஆதாரம் போன்று நம் நாட்டின் வளர்ச்சி நம் கிராமங்களின் வாழ்விலே பொதிந்திருக்கிறது. ஓர் உடலினுள் இருக்கும் இருதயமும், சுவாசகோசமும் போன்று விவசாயமும் கால்நடையும் நம் தேசத்திற்கு அமைந்திருக்கின்றன. நீர் வளமும், நிலவளமும் கூடிய பரந்த நிலப்பரப்பும், மிகுந்த கால் நடைச் செல்வமும், (உலக சங்கியையிலே மூன்றில் ஒரு பங்குக்கும் மேலாக) நிறையப்பெற்றுள்ள நம் நாட்டிலே கிராமங்கள் ஏன் வளர்ச்சியின்றி இருந்து வருகின்றன ? இருதயமும், சுவாச கோசமும் போன்ற விவசாயமும் கால்நடையும் உயிரளிக்கக் கூடிய திடத்துடனே இதுகாறும் இல்லாதிருந்ததே நம் நாடு (கிராமங்கள்) பல துறையிலும் வளர்ச்சி குன்றியிருந்ததற்கு காரணம் எனக்கூறின் மிகையாகாது. ‘ மார்புக்கூடு தெரிய, தலையிலும் இடையிலும் இரு முழத்துண்டு உடையணிந்து, கையிலே உழவுக்குரிய சிறு சாதனங்களுடனே, பொலிவற்ற முகத்துடனே ஒருவன் செல்ல அவன் முன்னே மெலிந்த உடலுடனே, இரு எருதுகள் கலப்பையை தாங்கி செல்லும் ’ இதுவே கிராமங்களில் நாம் கண்டு வந்த பரிதாபகரமான காட்சியாகும்.

இக் காட்சி கனவாக மாற்ற வந்துதித்தார் மகாத்மா காந்தி. விடுதலை என்னும் மேடையேறி, கிராம புனருத்தாரணம் எனும் செயல் பிரசங்கமாக்கி, ரத்தமின்றி சுதந்திரம் வகுத்துக் கொடுத்தார் நம் தேசத் தந்தை. அதன் பின்னரும் மேல் கண்ட காட்சி காணப்படுவதை கனவாக்க, காந்தி வழி வந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்தனர் அரசாளும் நம் பிரதிநிதிகள். நம் கிராமங்களிலே புத்துயிரும், மக்களின் முகத்திலே மலர்ச்சியும் விளங்க பாரதத்தின் பரம்பரை புனிதத் தொழிலாகிய விவசாயத்தை விருத்தி செய்யவேண்டும். விவசாய விருத்தி கால்நடை விருத்தியைச் சார்ந்திருக்கிறது என்பதை உணர்ந்து, முக்கியமானதொரு அங்கம், நம் சமுதாய நல தேசிய வளர்ச்சித் திட்டங்களிலே, கால் நடை அபிவிருத்திக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

“ஆ உயர அனைத்தும் உயரும் ”

கிராம உயர்வுக்கு கால் நடை விருத்தி எங்ஙனம் இன்றி அமையாதது ? “ வரப்புயர ” எனப்பாடிச் சென்றார் நமது செந்தமிழ் அன்னை ஔவைப்பிராட்டி. ஆனால் அன்னியர் ஆட்சியிலிருந்து மீட்கப்பட்ட நாம் நம் பழைய புத்துணர்ச்சி பெறவேண்டுமாயின் “ ஆவுயர அனைத்தும் உயரும் ” என்ற உரையை மனத்துட்கொள்ள வேண்டும் எனச்சொல்லின் மிகையாகாது. பண்டைய காலத்திலே நம்ஜனசங்கியை குறைவு. ஆனால் மக்கள் திடத்துடனே இருந்தனர். தற்சமயத்திலோவெனில், ஜன பெருக்கத்துடனே அடிமை ஆட்சியின் விளைவால், நம் மக்கள் அனைவரும், பொருள், சக்தி, இவைகள் சுரண்டப்பட்டு காணப்படுகின்றனர். ஆகையால் உணவு உற்பத்தி அதிகரிக்கப்படுவதோடு அல்லாமல் உணவு சத்துள்ளதாயும் இருக்கவேண்டும். உணவு உற்பத்திக்கு உற்ற துணையர்க உள்ள எருதுகளை ஈனுவது பசுவே. பாமர மக்களும், எளிதில் பெறும் சத்துள்ள ஆகாரம் ஆவின்பாலே அன்றி வேறு அல்ல. நம் மனித இனத்தை வளம் பெறச் செய்வதுடன் நில வளத்தையும், நல்கச் செய்கிறது, நம் ஆவினங்களின் கழிவுப் பொருள்கள். நிலவளம், மக்களின் பொருளாதார மறுமலர்ச்சி, இவைகளுக்குக் காரணமாக உள்ள நம் அன்னைகளுக்கும் அன்னையாக உள்ள ஆவினங்களை, வளம் பெறச் செய்வோமேயானால், அனைத்தும் வளம் பெறும் என்று சொல்வது மிகையாகாது. நம் நாட்டின்கண் மலிந்துள்ள கிராமங்களிலே மிகுந்துள்ள விவசாயிகளின் வாழ்வோடு, ஆவினம் ஒன்றியிருக்க மற்ற கால் நடைச் செல்வங்களாகிய ஆடு, கோழி இனங்கள், விவசாயிகளுக்கு மட்டுமே

யல்லாது மக்கள் அனைவருக்கும் சத்தான ஊன் உணவைக் கொடுப்பதுமல்லாமல், பொருளாதார துறையிலே முன்னேற மிகவும் உதவுகின்றன. இவ்வகையிலே நம் நாட்டின் (மக்களின்) எதிர்கால பொருளாதாரமும், உடல் வளமும், நம் கால் நடை விருத்தியிலே அமைந்திருக்கின்றன என்பது தெள்ளெனப் புலனாகும்.

"தன் கையே தனக்குதவி" என்ற தமிழ் உரைக்கு இணங்க, தற்சமயம் அமுலில் இருந்து வரும், கிராம அபிவிருத்தித் திட்டங்களிலே, கால் நடை விஸ்தரிப்பும் (விருத்தியும்) முக்கியமானதொரு அம்சமாக செயலாற்றப் பட்டு வருகிறது. நம் கிராமங்களிலே மாட்டுப் பண்ணையும், கால் நடை வளர்ப்பும் புராதன காலம் தொட்டு இருந்திருந்த போதிலும், இவ் விஸ்தரிப்பு வேலைகளுக்கு அவசியம் என என்று ஒரு சாரார் ஐயமுற இடம் கொடுக்கிறது. நம் நாட்டு கால் நடைகளின் எண்ணிக்கை முதன்மையிலிருந்த போதிலும், அவைகளின் தரங்கள், உலக கால் நடை அரங்கிலே வைத்து பார்க்குங்கால், மிகவும் கேவல நிலையிலிருக்கின்றன. இதற்குச் சான்றாக ஓரிரு உதாரணங்களையும் பார்க்கலாம்.

குறுகிய காலத்திலேயே கால்நடை தரத்தை உயர்த்த வழிமுறைகள்

5 கோடிக்கு மேலாக பசுக்கள் உள்ள நம் நாட்டிலே, தினசரி ஒருவருக்குத் தேவையான 8 அவுன்ஸ் பால் வீதம், நம் நாட்டின் தேவையிலே பாதி அளவுதான் கிடைத்து வருகின்றது. ஆனால் சிறிய நாடான ஹாலந்தில் உள்ள 60 லக்ஷம் பசுக்களே நம் நாட்டின் பால் தேவையை பூர்ணமாக அளிக்கும் சக்தி உள்ளவையாக இருக்கின்றன. எவ்வாறு? நம் நாட்டின் பசு சராசரி தினம் 2 ராத்தல் கொடுக்கக் கூடியது. ஆனால் ஒரு ஹாலந்து பசுவோ 30 ராத்தல் கொடுக்கும் திறன் உடையது. இவ்வாறே கோழிகளின் தரத்தை ஒப்பிடுவோமேயானால், நம் நாட்டுக் கோழிகள் வருடம் ஒன்றுக்கு 50 முதல் 60 வரை முட்டைகள் கொடுக்கக்கூடியவைகளாகயிருக்கின்றபொழுது, சீமை ஜாதி கோழிகளோவெனில் இரு மடங்கு நிறை உள்ள முட்டைகள் வருடம் ஒன்றுக்கு சராசரி 200 வரை கொடுக்கின்றன. இவ்வாறு ஒவ்வொரு இனமும் வேலைத்திறன், ஈனும் சக்தி இவைகளிலே மிகவும் கீழ் நிலையிலே இருந்து வருகின்றன. இந்நிலைக்கு காரணம் நம் கிராம மக்களின் பண்டைய முறையிலே ஒரு நம்பிக்கையும், கால் நடை பராமரிப்பில் கவனிப்பில்லாக் குறையுமே என்று கூறலாம். கால் நடைகளின் அபிவிருத்தி, அவைகளின் வர்க்கம், உணவு கண்காணிப்பு, வளரும் இடம் இவைகளைப் பொறுத்திருக்கின்றது. இவைகளை, தற்கால சாஸ்திரீய, சிக்கனமுறைகளைக் கையாண்டால் தான், குறுகிய காலத்திலே, நம் கால் நடைகளின் தரத்தை உயர்த்த முடியும். இவ்வகையிலே கிராம மக்களுக்கு நேரிடையாக அருகிலிருந்து உதவும் பொருட்டு, சுமார் 50 கிராமங்கள் அடங்கிய ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு கால் நடை விஸ்தரிப்பாளர் (Veterinary doctor) வீதம் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். "பழையன கழிதலும், புதியன புகுதலும்" என்ற பண்டைய பழமொழியை உணர்ந்து, நம் கிராம மக்கள், ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் முன் வருவது தான் முதல் படியாக அமைகின்றது. புதிய முறைகளை ஆராய்ந்து கையாள வேண்டியது நம் கிராமத்தின் பொருளாதாரத்துறையும், ஆரோக்கியமும் முன்னேறவேண்டியதை முன்னிட்டு அத்தியாவசியமாகிறது.

அவசியத்தை உணர்ந்தபின் புதுமுறைகள் யாவை, எங்ஙனம் கைக்கொள்ளலாம் எனக் கவனிப்போம். இம்முறைகளைப்பற்றி விவரிப்பது இக் கட்டுரைக்குள் இயலாதெனினும், சுருங்கக் கூறுவோம்.

கால் நடை அபிவிருத்தி செவ்வனேயிருக்க, நோய் தடுப்பு, இன விருத்தி, இடவசதி, உணவு ஆகிய கோணங்களிலிருந்து கண்காணிக்க வேண்டும்.

நோய் தடுப்பு

தொத்து நோய் மூலம் நாம் வருடா வருடம் இழக்கும் கால் நடைகளின் மதிப்பு, கூறுமிலேயே யாவருக்கும் விளங்கும். நோய் வந்தபின் காப்பதைவிட, நோய் வருமுன் தடுப்பதே சாலச் சிறந்தது. இவ் விஷயத்தில் ஒவ்வொரு அபிவிருத்திப் பகுதியில் உள்ள மக்கள், தங்கள் கால்நடை விஸ்தரிப்பாளரைக் கலந்தாலோசித்து, அவ்வப் பகுதியிலுள்ள தொத்து நோய் விவரத்தை அறிந்து அதற்கு முன் கூட்டியே தடுப்பு முறைகளை அவர் மூலமாக கையாண்டு தங்கள் கால் நடைகளை பாதுகாப்பது, இப்பொழுது எளிதாகிறது. சாதாரணமான தொத்து நோய் இல்லாத வியாதிகளுக்கு அவர் மூலமாக சிகிச்சையோ உதவியோ பெறலாம். சுருங்கச் சொல்லின், கால்நடை விஸ்தரிப்பாளர், ஒவ்வொரு அபிவிருத்தித் திட்ட பகுதியின் "குடும்ப கால் நடை வைத்தியர்" (family veterinary doctor) எனலாம். ஒவ்வொரு குடும்பத்தினரும் அவரை, கால் நடை அபிவிருத்தி, கண்காணிப்பு, உணவு, இடவசதி ஆகிய இவைகளுக்கு ஆலோசகராகப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

இன விருத்தி

"நூலைப் போல் சேலை" என்ற மூதுரைக்கிணங்க, கால் நடை சந்ததிகளின் தரமும், வளமும், அவைகள் உண்டாவதற்குக்காரணமான முன் வர்க்கத்தை பொறுத்தது. "பொலி காளை மந்தையில் பாதி" என்றும் சொல்வதுண்டு. ஏனெனில் ஒரு மந்தையில் பசுக்கள் எல்லாம் ஓர் காளையின் மூலம் பலனுற்று, கன்றுகள் ஈனுகின்றன. அந்தச் சந்ததி கன்றுகளின், அமைப்பு, ஈனும் திறன், முதலியன பாதி காளையினுடையதாக இருக்கும். ஆகவே தரமும் அமைப்பும் குன்றிய ஒரு காளையை உபயோகிப்பதின் மூலம் எதிர் காலச் சந்ததிகளில் பாதி சீரழிந்து விடும் என்ற உண்மையை வலியுறுத்தவே, மேற்கூறிய உரை நடைமுறையில் இருந்து வருகின்றது. இதன் மூலம் ஒரு கிராமத்திலே பசுக்களின் தரம் குறைந்திருந்த போதிலும்

பொலி காளையின் திறன் குன்றியிருக்கக் கூடாது என்ற உண்மை புலனாகிறது. ஒரு கிராமத்திலே, கூட்டுறவு முறையிலே 100 பசுக்களுக்கு ஒரு பொலி காளை வீதம் உயர்ந்த வர்க்க காளைகளை வைத்துப் பராமரிப்பது எளிதான பலன் தரக்கூடிய முறையாகும். மற்ற மட்டரக காளைகளை இன விருத்தியில் பயனுறுதவாறு நவீன எளிதான "பர்டிஸ்ஸோ" முறையிலே வீரியத்தை அகற்றி வேலைக்குப் பயன் படுத்திக் கொள்ளல் வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு விவசாயியும் சுமார் 30—35 செம்மறி ஆடுகளுக்கு ஒரு கிடா வளர்ப்பது இன்றியமையாதது.



கால்நடைகளின் தரம் உயர நவீன முறைகளைக் கையாளவேண்டும்

நம் நாட்டு கோழிகளின் திறன் முன் கூறியபடி யாவரும் அறிந்ததே. இவைகளின் தரம் உயர 8–10 கோழிகளுக்கு ஒன்று வீதம் சீமை சேவல்களை வளர்த்தல் எளிதான முறையாகும். நாட்டுச் சேவல்கள் விரையெடுக்கப்பட்டு வளர்க்கப்படுமாயின் எதிர்கால கோழி சந்ததிகளின் பலன் பாதிக்காமலிருப்பதோடல்லாமல், அவைகள் நன்றாக வளருவதின் மூலம் மிகுந்த மாமிசமும் கிடைக்கின்றது. மேற்கண்ட துறைகளிலே, கிராம மக்களுக்கு உதவியாக அமுலிலிருக்கும், அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் காளைகள் ஆட்டுக் கிடாக்கள், சீமை கோழிகள், இவைகளை வாங்க, கடன் மான்யம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. மேலும் பொலி காளைகள் பற்றுக்குறையை ஈடு செய்ய, செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் நிலையங்களும் ஆங்காங்கே நிறுவப்படுகின்றன.

இட வசதி

கால் நடைகளின் அபிவிருத்தியும், வளர்ச்சியும், ஓரளவுக்கு இனம், நோயற்ற நிலை, இவைகளைப் பொருத்திருந்த போதிலும், வளரும் சூழ் நிலை, உட்கொள்ளும் உணவு, ஆகிய இரண்டும் முக்கிய காரணங்களாக உள்ளன. இவ்விரு விஷயங்களில்தான், நம் நாட்டில் கவனக்குறைவு மிகுந்திருக்கிறது. இதன் பலன்தான், ஈனும்திறன், வேலை செய்யும் சக்தி, போன்ற கால் நடைகளின் திறன்கள் மிகவும் கீழ்நிலைகளில் இருந்து வருகின்றன. எவ்வாறு மனிதனுக்கு நல்ல காற்று, சுத்தத்தண்ணீர், ஆரோக்கியமான இடம், சத்துள்ள உணவு, இவைகள் அவசியமோ, அவ்வாறே கால் நடைகளுக்கும் அவை அத்தியாவசியம். சாஸ்திரிய முறைப்படி சிக்கன வகையிலே, தற்சமயம் உள்ள மாட்டுக் கொட்டகைகள் ஆட்டுப் பட்டிகள், கோழி வீடுகள் இவைகளை மாற்றி அமைப்பது இன்றியமையாதது. தற்சமயம் கிராமங்களில் உபயோகப் படுத்தப்படும் கால் நடைக் கொட்டகைகள், விவசாயத்திற்கு வளமாக உள்ள பண்ணை எருவை (Farm Yard Manure) முழுமையும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அமையவில்லை. சாஸ்திரிய நவீன முறையில் இடவசதி செய்யுங்கால், கால் நடைகளின் ஆரோக்கியம் வளருவது மல்லாமல் அவைகளின் கழிவுப் பொருள்களாகிய சாணம், மூத்திரம், இவைகள் முழுமையும் சேகரிக்க எளிதாகின்றது.

உணவு

கால் நடை உணவுப் பிரச்னைபற்றி தீவிரமாக கவனம் செலுத்தப்படவேண்டும். உணவு சத்துள்ளதாயும், போதிய அளவுள்ளதாயும் இருத்தல் அவசியம். உணவு விகிதாசாரம், ஒவ்வொரு கால் நடையின் நிறை, வயது, பால், வேலை போன்றவைகளைப் பொறுத்துக் கணக்கிடப்படுதல் வேண்டும். சாதாரணமாக நாம், கிராமங்களில், ஓரளவு நிர்ணயமின்றி பருத்திக் கொட்டை, பிண்ணாக்கு போன்ற சத்துள்ள ஆகாரமும், வைக்கோல் போன்ற தீவனமும், கொடுக்கப்படுவதைப் பார்க்கிறோம். இவ்விஷயங்களில் கால் நடை விஸ்தரிப்பாளரை மிகவும் பயன் படுத்திக் கொள்ளுதல் பலனளிக்கும்.

ஆனால் கால் நடை தீவன பற்றுக்குறை பலரும் பார்த்து வரும் பிரச்னையே. இவற்றை நிவர்த்தி செய்வது எங்ஙனம்?

(1) உரியான தீவனம் கிடைக்கும் பருவத்திலும் பிரதேசங்களிலும் அவைகளைச் சத்து குறையாமல் சேகரித்து வைத்தல். "என்ஸைலேஜ்" (Ensilage) என்ற முறையில் யானைப்புல், மக்காச் சோளம், பட்டாணி, போன்ற பயிர் இவைகளை, சத்துள்ள உணவாகப் பாதுகாத்து வைக்கலாம்.

பிறகு பருவமில்லாக் காலங்களில் தீவனம் கிடைப்பது அரிதாகையால், சைலேஜ் குழிகளிலிருந்து தீவனத்தை உபயோகிக்கலாம். உபரியாக புல் விளையும் பிரதேசங்களில் அவைகளைப் பக்குவ சமயத்தில் அறுத்து "ஹே மேகிங்" (Hay Making) முறையில், சத்துள்ள வைக்கோலாக சேகரிக்கலாம். இம் முறைகளில் கிராமங்களிலே ஓரிரண்டு பண்ணைகளில் மாதிரியாக ஆரம்பிப்பது விஸ்தரிப்பு வேலைகளின் அடிப்படையாகும்.

(2) கிராமங்களில், கூட்டு மேய்ச்சல் தரை நிலங்களை ஏற்படுத்தல். கிராம எல்லைக்குள் உள்ள புறம்போக்கு நிலங்களையும், அவ்வாறில்லையாயின் தனிப்பட்டவர்களின் நிலங்களையும் சிறிது சிறிதாகச் சேர்த்து ஒரே பாந்த மேய்ச்சல் தரையாக ஏற்படுத்திக் கொள்ளலாம். இந்நிலங்களை பகுதிகளாகப் பிரித்து, கால் நடைகளை வார முறையில் மேய்க்க விடுதல் நல்லது.

(3) மேய்ச்சல் நிலங்கள் சமனில்லாவிடில் மண் கரைகள் போட்டு, மண்கரைப்பைத்தடுத்து, நிலத்தின் வளத்தை உயர்த்தலாம். வருடம் ஒரு முறையாவது, சுண்ணும்பு சத்து, எரு முதலியன இட்டு உழுவது அவசியம். அவ்வப்போது மேய்ச்சல் நிலங்களில் காணப்படும் சாண திட்டுகளை அவ்வப்போது காயவிடாமல் மண்ணுடன் கலந்து விடுதல் நல்லது.

(4) மேய்ச்சல் நிலங்கள் அமைக்க வசதியில்லாவிடில் தென்னை, மா, தோப்புகளில் வரப்பிட்டு நிழலில் வளரும், புற்களை வளர்க்கலாம். பாசனத்திற்காக உள்ள வரி, குட்டைகளின் வரப்பிலே, துரிதமாக வளரும் புல் வகைகளைப் பயிரிடலாம். தங்கள் தங்கள் பண்ணையிலே ஒரு பகுதியை கால்நடைத் தீவனத்திற்கு ஒதுக்கிவருதல் நல்லது. கலப்புப பண்ணை (Mixed Farming) முறை எல்லா பிரதேசங்களுக்கும் பயனுள்ளதாயிருந்த போதிலும், இம் மாதிரியான பிரதேசங்களுக்கு அத்தியாவசியமானது.

கலப்புப் பண்ணை முறை என்பது விவசாயப் பண்ணை கால்நடைப் பண்ணை, ஒருங்கே ஒன்றுக்கொன்று பயனுறும் வகையிலே கையாளுதலே யாகும் ஒவ்வொரு விவசாயிடமும் தேவைக்குரிய பசுக்கள், எருதுகள் இருந்தபோதிலும், கால் நடைப் பகுதியைப் பற்றி அவ்வளவு கவனம் செலுத்தப்படுவதில்லை. இதனால் ஏற்படும் நஷ்டங்களும், கலப்புப் பண்ணை முறையில் உள்ள நன்மைகளும், அவர்களுக்கு உணர்த்துவார் இல்லாததால், இம்முறை தீவிரமாக அமுலில் இல்லை. இதன் மூலம் விவசாயம் விருத்தி ஆவதோடு, கால் நடை மூலம் நல்ல வருவாயும் கிடைக்கிறது. கால் நடைத் தீவனமும் அடையக்கூடும் என்ற நன்மைகள் கண்கூடாக காண்பிப்பதற்கு, ஒவ்வொரு கிராமத்திலும் ஓரிரண்டு பண்ணைகளிலே அமுலில் கொண்டு வருவது விஸ்தரிப்பு வேலைகளில் முக்கிய அம்சமாகும்

கால் நடை விஸ்தரிப்பு (விருத்தி) முறைகளையும் அவைகளின் அவசியத்தையும், அறிந்த பின், இதன் வாயிலாக கிராமங்களின் பொருளாதார ஆரோக்கிய முறை எங்ஙனம் உயர்கின்றது என்று உணர்வது அத்தியாவசியமாகின்றது. கிராமத்தாரின் சுய முயற்சியோடு அவர்களின் சுய தேவையைப் பூர்த்தி செய்வதோடு, பொருளாதார சுபிட்ச நிலைகளை எய்தும்பொருட்டு அமுலாக்கி நடந்து வரும் குடிசைத் தொழில் திட்டங்களிலே, கால் நடை வளர்ப்பும் மிகவும் இன்றியமையாத சாதனமாக அமைகின்றது.

பால் உற்பத்தி

ஒவ்வொரு குடும்பமும், ஓரிரண்டு பசுக்களையோ எருமைகளையோ பேணி வளர்த்தல், பெண்மணிகளுக்கு ஊதியம் தரும் பொழுது போக்காக (Paying Hobby) அமைகின்றது. இக் குடும்பங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கூட்டுறவு முறையில் பாலை எளிதில் சேகரம் செய்து, சமீபத்தில் உள்ள நகருக்கு ஒரு மிக்க விநியோகம் செய்து, வருவாய் எய்தக்கூடும். இக் கூட்டு ஸ்தாபனம், தங்கள் தங்கள் தீனி தேவைகளைக் குறைந்த செலவில் நகரிலிருந்து பெற மிகவும் உதவுகின்றது. முன்னே காட்டியதுபோல், தேவையான பொலி காளைகளையும் நிறுவ ஏதுவாகின்றது. பால் தேவையுள்ள நகரங்களினின்றும், மிகவும் புறம்பாகவுள்ள கிராமங்களில், பால் உடனடியாக விற்க இயலாததால் வெண்ணெய், நெய் போன்ற பால் பண்டங்களை உற்பத்தி செய்து, கூட்டு முறையிலே விற்பனை வசதி செய்து கொள்ளலாம். இவ்வாறு பாலும், பால் பண்டங்களும் கிராமங்களில் உற்பத்தியாகுமேயானால் கிராமத்தில் உள்ளோர், இந்த சத்தான உணவை உட்கொள்ளும் வழக்கம், தானே பெருகும். அவர்கள் உடல் நலமும், எதிர்கால பிரஜைகளின் உடல் வலிமையும் ஓங்கும்.

ஆடு வளர்த்தல்

அனேகமாக எல்லா இடங்களிலும், மலைப் பிரதேசங்கள் நீங்கலாக செம்மறியாடுகள், எருவிற்காகவும், மாமிசத்திற்காகவும் வளர்க்கப்படுவது யாவரும் அறிந்ததே. ஆனால் அவைகள் தகுந்த சாஸ்திரிய முறைப்படி வளர்க்கப்படுமாயின், தற்சமயம் கிடைக்கும் பலனைவிட அதிகமாக எதிர்பார்க்கலாம். "ஆடுகள விருத்தி செய்வோர் சங்கங்கள்" நிறுவி, அதன் மூலமாக ஒவ்வொரு குடும்பத்தினரும் குறைந்த செலவில் நல்ல இன விருத்தி, நோய் தடுப்பு, பராமரிப்பு, ரோமம் தயாரிப்பு, முதலியவற்றிற்கு சாதனங்களைப்பெற எளிதாகின்றது.

கோழி வளர்ப்பு

பொருளாதார நோக்கோடு அல்லாமல் நம் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இதை, கைக்கொள்ளல் வேண்டும். மிகவும் சத்துள்ள ஆகாரமான முட்டைகள் தினசரி ஒரு நபர் ஒன்று வீதம் உட்கொள்ள வேண்டியிருக்க, நம் நாட்டில் தற்சமயம் கிடைப்பது நபர் 1-க்கு வருடம் 1-க்கு 4 முட்டைகளேதான். இதனின்று எவ்வளவு தூரம் உற்பத்தி பெருகவேண்டுமென்று புலனாகிறது. உற்பத்தி பல மடங்காகப் பெருக வேண்டிய நிலையிலே நம் நாட்டு ஜாதியைவிட 4 மடங்கு அதிகம் கொடுக்கக் கூடிய சீமைக்

கோழிகளை ஏராளமாக விருத்தி செய்ய வேண்டியது அவசியமாகிறது. பொருளாதார வகையிலே, உட்கொள்ளும் ஆகாரத்தைப் போல் இரு மடங்கு மதிப்புள்ள முட்டைகளைக் கொடுதது நன்மை பயக்குவதோடல்லாமல், குடியானவனுக்கு மற்ற வகைகளிலும் நன்மை பயக்கின்ற கோழிகள், வயல்களில் நாம் பார்க்கமுடியாத புழு பூச்சிகளைத் தின்று விடுகின்றன. வளரும் பயிர்களை, நாசம் செய்யக்கூடிய பூச்சிகளை, கோழிகளின் மூலம் அழித்து விடலாம். அறுவடை செய்யப்பட்ட வயல்களிலும், பாரடிக்கப்பட்ட பின் களங்களிலும், வீணாகப்போகும் சிந்தப்பட்ட திரட்டமுடியாத தானியங்களை உபயோகம் உள்ள முட்டைகளாக மாற்றும் சாதனங்களாக அமைகின்றன, கோழிகள்.

கிராமங்களிலே ஒவ்வொரு குடும்பத்திலும் கோழி வளர்ப்பு "கொல்லைக் கோழிப் பண்ணைகள்" (Backyard Poultry Unit) என்ற சிறு அளவிலேயாவது மேற்கொள்ளலாம். ஒவ்வொரு குடும்பத்திலும் கிடைக்கக்கூடிய (சுய தேவை போக மீதமுள்ள) உபரி முட்டைகளை விற்பனைக்குச் சேகரம் செய்து அருகாமையில் உள்ள நகரங்களுக்கு எடுத்துச்செல்ல, கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

மேற் கூறிய முறைகளிலே, கால் நடைக் குடிசைத் தொழில்கள் கிராமங்களில் வளர்க்கப்படுமேயானால், கிராம மக்களின் ஆரோக்கியம், பொருளாதாரம், "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற கூட்டுறவு (ஒற்றுமை) உணர்ச்சி யாவும் பெருகாவென்று யார்தான் கூறமுடியும்? கால் நடை விருத்தி முறைகளை மேற்கூறியவாறு கைக்கொள்வோமேயாகில், நம் நாட்டில் "நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும், கால் நடை வழியேகாண்" என்ற உரைக்கு அடிகோலியவர்களாவோம்.

நம் நாட்டு அபிவிருத்தித் திட்டங்களில் அண்டை நாடுகளின் சிரத்தை

சமுதாய அபிவிருத்தித் திட்டங்களில் டாக்டர் ஹாட்டாவின் அக்கறை

இந்தோனேஷியக் குடியரசின் உதவி ஜனாதிபதி டாக்டர் மகமது ஹாட்டா, சமுதாய அபிவிருத்தித் திட்டங்களின் நிர்வாகி ஸ்ரீ எஸ். கே. டேயை, புது டில்லியில், 1955-ம் ௵ அக்டோபர் ௴ 28-ந்தேதியன்று, சந்தித்து, இந்திய சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றம் பற்றி விவாதித்தார். இந்தோனேஷியாவிலும் சமுதாய அபிவிருத்தித் திட்டம், இந்தோனேஷியாவின் சுதந்தர தின வருஷாந்திர விழாவில், 1955-ம் ௵ ஆகஸ்ட் ௴ 17-ந்தேதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தோனேஷியத் தலைவர்கள் நம் நாட்டுச் சமுதாய நலத்திட்ட நிர்வாகஸ்தர் ஸ்ரீ S. K. டே அவர்களை, டெல்லியில் சந்தித்துப் பேசியபோது எடுத்த படம்

சமுதாய அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்களில் இந்தோனேஷியக் கோஷ்டி சுற்றுப்பிரயாணம்

இந்தோனேஷியச் சர்க்காரைச் சேர்ந்த சில உயர்தர அதிகாரிகள் உள்ளிட்ட ஒரு கோஷ்டியினர் இந்தியாவில் சமுதாய அபிவிருத்தித் திட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களைப் பார்வையிடுவதற்காக இந்நாட்டுக்கு விஜயம் செய்திருக்கின்றனர்.

சென்னைக்கு விஜயம்

டிசம்பர் மாதம் 4-ந்தேதி, இந்தோனேஷியாவிலிருந்து பதினைந்து பிரமுகர்கள், நம் சென்னை ராஜ்யத்துக்கு விஜயம் செய்கிறார்கள். காந்தி கிராமத்தில் சில நாள் தங்கியிருந்து நம் பயிற்சி நிலையங்களையும் சில கிராமங்களையும் பார்வையிடுவார்கள். கிராம பயிற்சி சம்பந்தமான எல்லா விஷயங்களையும் நேரில் கண்டறிந்து கொள்வதே, அவர்கள் நோக்கம். இந்தோனேஷிய சர்க்காரின் பிரபல எஞ்சினியர்கள், டாக்டர்கள், கல்வி நிபுணர்கள், அந்தக் கோஷ்டியில் அடங்கியுள்ளனர். சென்னை ராஜ்ய சமுதாய அபிவிருத்தி டைரக்டர் ஸ்ரீ ராகவாச்சாரி, அவர்களை வரவேற்று தக்க உதவிகள் செய்து தருவார்.

Printed by the Superintendent, Government Press, Madras, Edited by the Public Relations Officer and published by the Director of Community Development, Government of Madras.